Registered as a News Paper
பக்கம் - 24

www.eezhanatham.com

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 16 | வெள்ளி - 44 | 23 - 29 - டிசம்பர் - 2005

## நாசத்தை நோக்கி நகரும் சிங்கள படைகள்

## அலை தந்த துயரம் ஓராண்டு வந்தும் முடிந்ததா..!

# இன்றைய இளைஞர்கள்...!

இளம் வயது எப்படியான சிறந்த சூழ்நிலையில் அமைக்கப்பட்டிருந்தாலும், அந்த வயதைத் தாண்டும் ஒவ்வொருவருக்கும் அது ஒரு கொந்தளிப்பு மிக்க காலமாகவே இருக்கும். இந்த வயதிலுள்ள இன்றைய தலைமுறையினர் நடைமுறைவாழ்வில் சந்திக்கும் சவால்களுக்கும் சபலங்களுக்கும் முகம் கொடுக்க முடியாமல், மீளவே முடியாத, சிக்கல்களில் தத்தளித்திருக்கிறார்கள் என்பதே உண்மை. இதற்கான காரணம் என்ன?

புதுப்புது உணர்ச்சிகளாலும் எண்ணங்களாலும் புதிய மாற்றங்கள், உடலாலும் உள்ளத்தாலும் தூண்டப்படும் இவர்கள் இயல்பாகவே மன அழுத்தம், வேதனை, கோபம் போன்றவற்றுக்கும் ஆளாகின்றார்கள். அத்துடன் குழப்பமான உணர்வுகளும், தன்னம்பிக்கைக் குறைவும், வேண்டாத அசைவுகளும் இந்த வயதில் எவரையும் விட்டு வைப்பதில்லை. இதனால் தான் இயல்பாகவே முட்டாள் தனமான காரியங்களை யோசிக்காமலே செய்கின்றார்கள்.

சில நேரம் இந்த உலகம் பயத்தையே உண்டாக்குகின்றது.

* இந்தியாவில் 18 வயது இளைஞன் தன் காதலை ஏற்க மறுத்த பள்ளி மாணவிக்கு அசிட் வீச்சு.

* ரஷ்யாவில் குடிபோதையில் இருந்த வாலிபக் கும்பலால் 9 வயது சிறுமி கோரமான முறையில் கொலை.

* அமெரிக்காவில் 15 வயது மாணவன் தனது வகுப்பிலுள்ள சக மாணவர்களை கண்மூடித்தனமாகச் சுட்டதில் 2 பேர் பலி, 13 பேர் படுகாயம்.

இப்படியான பல அதிர்ச்சியூட்டும் செய்திகள் பத்திரிகைகள் வானொலி, தொலைக்காட்சி, சஞ்சிகைகள் மூலம் நாளாந்தம் அறிகின்றோம். அதைவிட அடி,தடி வெட்டுக்குத்து போன்ற பாரிய சமூகப்பிரச்சினைகளில் இறங்குவதும், போதைப் பொருட்களுக்கு அடிமையாகி தங்கள் உடல்களை தாங்களே குதறுவதும். புகைத்தல், தறிகெட்ட பாலுறவு போன்ற கெட்ட நடத்தைகளாலும், தவறான பாதையில் தடம் பதித்து தங்கள் எதிர்காலத்தையே சிதறியடிக்கின்றனர். இந்த செயல்களின் உச்ச நிலையிலும், இந்த வயதில் வரும் தன்னம்பிக்கைக் குறைவினாலும், தோல்வியைச் சந்திக்க முடியாத அநேக பருவ வயதினர் தற்கொலைக்கும் ஆட்கொள்ளப்பட்டுள்ளார்கள்.

அத்துடன் ஊடகங்களும் இன்றைய இளம் வட்டங்களை ஆட்டம்காண வைக்கின்றன. சட்டவிரோதமான நீலப்படங்கள், இன்றைய திரைப்படங்களில் வரும் கிளர்ச்சியூட்டும் நடனங்கள், அப்பட்டமான பாடல்கள், ஆபாசக் காட்சிகள், வன்முறைகள், சண்டைக்காட்சிகள் இப்படியான பல இளம் வயதினரை மூர்க்கத்தனமான எண்ணங்களாலும் உணர்ச்சிகளாலும் மிக இலகுவாக தூண்டிவிடும் வீடியோக்களில் வன்முறைகளையும் ஆபாசங்களையும் பார்க்கும் இவர்கள் நிஜவாழ்விலும் அப்படியே நடந்து கொள்ள விரும்புகின்றார்கள்.



இப்படியெல்லாம் நடந்துகொள்பவர்களை "கட்டாக் காலி" யென்றும், விடுகாலி யென்றும் திட்டுகின்றோம். வீட்டைவிட்டும் சிலர் துரத்தப்படுகின்றார்கள். சமூகத்திலிருந்தும் சிலர் ஒதுக்கப்பட்டு சீர்திருத்தப் பள்ளியிலும் இளம் குற்றவாளிகள் சிறைச்சாலையிலும் குற்றவாளிகளாகவே காண்கின்றோம். இப்படியான செயல்களை ஏன் செய்கின்றார்கள் என்று நாங்கள் யாராவது சிந்திக்கின்றோமா?

துள்ளித்திரியும் இந்தக் கட்டிளம் பருவத்தில் அவர்களது பொற்றோர் கள், பெரியவர்கள், உரியவர்கள், உறவுகள் அவர்களது தேவைகளை, மனநிலையினை உணரக் கண்காணிக்கத் தவறிவிடுகின்றார் கள். அத்துடன் மிகவும் கூச்ச சுபாவம் நிறைந்த இந்த வாலிப வயதில் உள்ளவர்கள் உறவுகளாலும் சமூகத்தாலும் நெருக்கப்படுவதும் நசுக்கப்படுவதும், ஒருவிதமான வக்கிரமான மனநிறைவுக்கு அவர்களை இட்டுச் செல்கின்றது.

பொருளாதாரச் சிக்கல் காரணமாக வேலைக்குச் செல்லும் தாயும் தகப்பனும் தங்கள் பிள்ளையை முறையாகக் கவனிப்பதில்லை. சில இடங்களில் பேச்சுத் தொடர்புகூட இருப்பதில்லை. இளம் வயதில் இருக்கும் பிள்ளை தனிமையுணர்வால் தவிக்கும் போது மனஅழுத்தத்திற்குள்ளாகின்றது.அதைவிட பொற்றோரின் விவாகரத்து இளம் வயதினரை திணறடிக்கின்றது. பொற்றோரின் விவாகரத்தால் பெற்றோரைவிட பிள்ளைகளே வெட்கமும், வேதனையும் அடைகின்றார்கள். அத்துடன் அவர்களை அச்சுறுத்தும் இன்னொரு பிரச்சினை பெற்றோர்கள் வேலைக்குப் போவதால் கவனிப்பில்லாமல் இருக்கும் பிள்ளைகள் தங்கள் இஷ்டப்படி நேரத்தை செலவழிக்கின்றார்கள். பெரியவர்களின் கண்காணிப்பு இல்லாமல் பிள்ளைகள் நேரத்தை செலவிடும்போது பிரச்சினைகளை அவர்கள் விலைகொடுத்து வாங்குகின்றார்கள் என்றே சொல்லவேண்டும்.

எனவே இன்றைய பரபரப்பான காலத்தில் நாளைய நல்ல தலைவர்களாகத் திகழவேண்டிய இன்றைய இளைஞர்களை சரியான முறையில் கடிவாளம் இட்டு, கண்காணித்து வழிநடத்தத் தவறினால் அவர்கள் எதிர்காலத்தில் வேதனை தரும் உலகம் ஒன்றையே காட்டுவார்கள் என்பது நிச்சயம்.

**அன்பு கணேஸ்.**

# மக்கள் எழுச்சியின் குறியீடு

அடக்குமுறை ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு வகையில் இருந்துகொண்டுதான் இருக்கிறது. இனத்தின்அப்படையிலும், நிறத்தின் அடிப்படையிலும், சாதியின் அடிப்படையிலும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளின் அடிப்படையிலும், மக்கள் அடக்கப்படுகிறார்கள்; ஒடுக்கப்படுகிறார்கள். ஆயினும், அடிக்கும் கோலுக்கு அஞ்சாமல் படமெடுக்கிறார்கள்; ராஜநாகத்தைப்போல மக்கள் போராட்டங்கள் வெடித்துக்கிளம்பி அதிகார வர்க்கத்தை ஆட்டம்காண வைக்கின்றன. ரஷ்யாவின் அக்டோபர் புரட்சியும் அதற்கு முன்னோடியான பிரான்ஸ் நாட்டின் தொழிலாளர் எழுச்சியும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிரான வியட்நாமிய கியூப மக்களின் வீரம் செறிந்த போராட்டங்களும் சீனப்புரட்சியும் மக்களின் மகத்தான சக்தியை இன்றும் மனித குலத்திற்கு எடுத்துக்காட்டிக்கொண்டு இருக்கின்றன. இரண்டாம் உலகப்போரின்போது ஜேர்மன் நாஜிக்களாலும் இத்தாலிய பாஸிஸ்டுகளாலும் உலகம் பெரும்அழிவைச் சந்தித்தது. ஹிட்லரிஸத் தால் உலகம் நடுநடுங்கிக் கொண்டிருந்த காலகட்டத்தில் சோவியத் யூனியன் ஜேர்மனிக்கெதிரான போரில் வெற்றிபெற்றது. ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் வயதானவர்களும் நாஜிக்களுக்கெதிராகப் போரிடுகின்றனர். உண்மையான மக்கள் எழுச்சிக்கு முன்னிற்கமாட்டாமல் தோற்றோடியது ஜேர்மன்படை.

வலிமையான ஜேர்மன் படையை எதிர்த்து சோவியத் மக்கள் எப்படிப் போராடினார்கள்? செம்படைக்கு ஆதரவாக, சாதாரண கிராமத்து மக்கள் எப்படி எல்லாம் தம்மை தயார்ப்படுத்திக் கொள்கிறார்கள்? ஜேர்மன் படைக்கு எதிராக தமது கலகக்குரலை எழுப்புவதோடு, உணவு முதலிய அதிமுக்கிய பொருட்களைக் கொடுக்காமல் ஒளித்து வைத்து மௌனமாக ஒத்துழையாமை செய்தது எப்படி? போன்ற வினாக்களின் விடையாக வாண்டா வாஸிலெவ்ஸ்காவின் வானவில் நாவல் விளக்குகிறது.

வானவில் ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நாவல் என்ற அளவில் மட்டுமல்லாது வேறொரு விதத்திலும் முக்கியமானதாக இருக்கிறது. 1945-இல் வாக்கில் எழுதப்பட்டு, 1946-லேயே தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு வெளி வந்துவிட்டது வானவில். வெறும் அடுக்குகளை விறகுகளாகவும், பெருமைக்குரிய ஆண்களின் காதலிகளாகவும், மனைவிகளாகவும் சித்தரிக்கப்பட்ட பெண்களின் வீரம் செறிந்த வரலாறுகள், அவ்வளவாக பதிவு செய்யப்படாத காலகட்டத்தில் 'வானவில்' உக்ரைனில்ஒரு சாதாரண கிராமத்தில் ஆண்கள் செம்படையிலும், கொரிலாப்படைகளிலும் பணியாற்றச் சென்றுவிட, சொற்ப அளவிலான வயதான ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் வசித்து வந்த அந்தக்கிராமம் ஜேர்மன் நாஜிக்களின் நிர்வாகத்திடமிருக்க, கிராமத்துப் பெண்கள் ஜேர்மன் படைவீரர்களுக்கெதிராக வீரத்துடனும் விவேகத்துடனும் போரிடுவதை அற்புதமாகப் படம் பிடித்திருக்கிறது. மக்கள் எழுத்தாளர்கள்; எப்போதும் மக்களைப் பற்றியே சிந்திக்கிறார்கள்; எழுதுகிறார்கள்; மக்களுக்கு அணுக்கமாக இருப்பதையே விரும்புகிறார்கள். எந்த அலைகளும் அவர்களை இழுத்துச்சென்று விடுவதில்லை. ரஷ்ய எழுத்தாளர்களின் படைப்புக்களில் இதை முழுமையாகக் காணமுடியும்.பெண்களை அன்னையராக, தோழியராக, போராளிகளாகக் காட்டிய பெருமை ரஷ்ய எழுத்தாளர்களுக்கு உண்டு. வாண்டா வாஸி லெவ்ஸ்காவும் பெண்களை, அதிலும் கிராமத்துப் பெண்களை தன்நாவலில் அன்னையராக, போராளிகளாக, தோழியராகக் காட்டியிருக்கிறார். நாஜிக்களின் சித்திரவதைக் கூடாரங்களின் கொடூரங்கள் மனித குலத்தை நடுநடுங்கச் செய்பவை; வீரம் செறிந்த மாவீரர்களையும் கொள்ளைகொண்டவை.




வானவில் நாவலிலும் ஜேர்மன் படையினரின் பல்வேறு விதமான கொடுமைகள் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளன. பெண்களின் மீது ஏவிவிடப்பட்ட கொடுமைகளை சோவியத்தின் இந்தக் கிராமத்து பெண்கள் அஞ்சாநெஞ்சத்துடன் எதிர்கொள்கிறார்கள்.

செம்படையில் இருந்த பெடோஸ்யாவின் மகன் வாஸ்யா ஜேர்மனியர்களால் கொல்லப்பட்டு புதைக்கப்படாமல் பனிக்கட்டிகளோடு பனிக்கட்டியாகக்கிடக்க, எப்படியோ தன்மகனின் பிணத்தைக் கண்டு பிடித்துவிட்ட பெடோஸ்யா தினமும் அவனைச் சென்று பார்த்து வருகிறாள்.கொரில்லாக் கூட்டம் ஒன்றில் பணியாற்றிய ஒலினா கோஸ்ட்யுக் பல ஆண்டுகளுக்குப் பிறகு தான் கருவுற்றிருப்பதையும் மறைத்து கொரில்லா கூட்டத்தில் சேர்ந்து பாலமொன்றைத் தகர்ப்பதோடு, காட்டில் வசித்த அந்த இளைஞர் கூட்டத்திற்குத் தாயாக விளங்கி உதவி செய்கிறாள். பிரசவத்திற்காக வந்த ஒலினா நாஜிக்களின் விசாரணைக் கூடத்தில் கொடூரமாகச் சித்திரவதை செய்யப்படுகிறாள்..... கொரில்லாக் கூட்டத்தினரைப் பற்றி இறுதிவரை எந்தத் தகவலையும் கூறாமல் ஜேர்மனியர்களால் குத்திக் கொல்லப்பட்டு கிழித்து எறியப்படும் ஒலினா, தன் கண்முன்னால் பிறந்த குழந்தையைக் கொன்று வீசியெறியப்படும் காட்சியைக் கண்டும் மௌனம் காக்கும் ஒலினா மனஉறுதியின் சிகரமாகப் படைக்கப்பட்டிருக்கிறாள்.

களஞ்சியத்தில் அடைக்கப்பட்ட ஒலினாவிற்கு ஒரு துண்டு ரொட்டியை காவலறியாமல் எடுத்து வந்தகுழந்தை மிஷ்கா சுடப்பட்டு இறந்தபோது, அவனைத் தன்வீட்டுத் தாழ்வாரத்திலேயே யாருமறியாமல் புதைத்துவிட்ட மல்யுச்சிக்காவிடம், "நீ என்குழந்தையைப் பார்த்துக் கொள்வாயல்லவா?" என்று ஜாமீன் கைதியாகப் போகும் செக்கோரிக்கா; ஜேர்மனியரால் பாலியல் வன்புணர்ச்சிக்காளாகி ஜேர்மனியின் கருவைச் சுமந்துகொண்டிருப்பதற்காக தன்னைத்தானே வெறுத்துக்கொண்டிருக்கும் மாலாஷா; கைதாகி நடந்து செல்லும் தங்களின் செம்படைத் தோழர்களுக்கு குழந்தைகள் மூலமாக ரொட்டித்துண்டுகளை அனுப்பிவைக்கும் கிராமத்துப்பெண்கள்; தன் குழந்தைகளுக்காக வைத்திருந்த ரொட்டித்துண்டை காவலர்களைப் பொருட்படுத்தாமல் செம்படை வீரனிடம் தர முயன்று அடிபடும் பன்புச்சிகா; இப்படி நாவல் முழுதும் விடியலுக்கான பெண்க ளின் போரை விவரித்து (கண்ணீர்விட வைக்கிறது) எழுச்சிகொள்ள வைக்கிறது வானவில்.

ஜேர்மனியர்கள் எடுத்துக்கொள்வார்கள் என்பதற்காக தானியங்களை பூமியில் புதைத்து வைக்கும் மக்கள் அத்துடன் தங்கம் போன்ற தாய்நாட்டின் இருதயத்தையும் இரகசியமாக ஒளித்துவைத்திருந்தார்கள் என்பது போன்ற கவித்துவமான வரிகள் வாசகனை உணர்வுகொள்ள வைக்கிறது. ஒவ்வொரு நிமிடமும் செம்படையின் வருகையை எதிர்பார்த்து காத்துக்கிடந்த மக்களின் நம்பிக்கை வீண்போகவில்லை. செம்படை வீரர்களுடன் கிராமத்து மக்களும் ஜேர்மனியப் படையினருக்கு எதிராகப் போரிடுகின்றனர்; மடிகின்றனர். இறுதியில் உறுதியான வெற்றியினைப் பெறுகின்றனர். செம்படையும் கிராமத்தினரும் மறுசீரமைப்பில் ஈடுபடுகின்றனர். இறுதியில் தங்களின் அன்புக்குரிய தோழர்களுக்கு விருந்தளிக்க விரும்புகின்றனர். செம்படைத் தோழர்களோ தமது அடுத்த போராட்டத்துக்குத் தயாராகி புறப்படுகின்றனர். 'முடிவு வரை போராடுங்கள்' என கிராமத்து மக்கள் அன்புடன் விடைகொடுத்து அனுப்புகின்றனர். வானில் தோன்றிய அந்த வானவில் கிழக்கின் வெளிச்சத்திற்கான குறியீடாகத் தோன்றி மண்ணையும் விண்ணையும் இணைக்கிறது. இந்த 'வானவில்' பெண்களின் வீரம்செறிந்த போராட்டத்தை உலகறியச் செய்வதற்காகவே எழுதப்பட்டது என்ற எண்ணம் உறுதியுடன் எழுகிறது. 1946-லேயே இந்நாவலை மொழிபெயர்த்த தோழர்கள் ஆர்.ராமநாதன், ஆர்.எச்.நாதன் இருவரும் .பாராட்டுக்குரியவர்கள். பல ஆண்டுகளுக்குப் பிறகு இந் நாவலை மறு பதிப்புச் செய் திருக்கும் 'அலைகள்' வழக்கம் போல் செயற் கரிய செய்திருக் கிறது.

**வானவில்,வாண்டா வாஸிலெவ்ஸ்கா**
**வெளியீடு அலைகள்**





# யுத்த நிறுத்தம் எதுவரை ஈய்ந்து கொடுக்கும்?

கொழும்பிலிருந்து வந்த ஒரு ஊடகக்காரர் சொன்னார்.... கடந்த தேர்தலின் போது படைத்துறை உயர் மட்டத்தில் பெரும்பாலானவர்கள் திரு ரணிலுக்கே வாக்களித்தவர்களாம். ஆனால் அடிமட்டச் சிப்பாய்கள் அதிகம் திரு மகிந்தவுக்கே வாக்களித்தவர்களாம். தேர்தல் முடிவுகள் வெளிவந்தும் சில தளபதிகள் தங்களுக்கிடையில் பின்வருமாறு கதைத்துக்கொண்டார்களாம்..." யுத்தம் ஒன்று வரட்டும் மகிந்தவுக்கு வாக்களித்த இவர்களையே முன்னுக்குத் தள்ளி விட வேண்டியதுதான்" என்று.

கடந்த சுமார் நான்கு ஆணடு கால யுத்தமற்ற சூழலில் சிறிலங்காவின் படைத்துறை அதிகாரிகளில் ஒரு பகுதியினர் மத்தியில் போரில் ஆர்வமற்ற போக்கே குறிப்பிடத்தக்க அளவுக்கு வளர்ந்திருக்கிறது. நீண்ட யுத்தநிறுத்தங்கள் எப்பொழுதும் இயல்புவாழ்வு மீதான மோகத்தைத் தூண்டி குறிப்பாக இளநிலை மற்றும் உயர்நிலை அதிகாரிகள் மத்தியில் மத்திய தரவர்க்க அபிலாசைகளை வளர்த்துவிடுகின்றன. இது அதன் இறுதி விளைவாக போர்க்குணத்தைக் குறைத்து விடுகிறது. இது முதலாவது.

இரண்டாவது,கடந்த சுமார் நான்கு ஆண்டுகால யுத்தமற்ற சுழலில் யுத்தகள அனுபவமுடைய மூத்த தளபதிகள் பலர் ஓய்வுபெற்றுச் சென்று விட்டதாகவும் ஒரு தொழில் சார் மரபு ராணுவம் என்ற ரீதியில் இது சிறிலங்கா படைத்துறை உயர் மட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தவல்ல ஒரு வெற்றிடத்தைத் தோற்றுவிக்கும் என்றும் விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். இது இரண்டாவது.

மூன்றாவது கடந்த சுமார் பத்து ஆண்டுகளில் குறிப்பாக யுத்தநிறுத்தத் துக்கு முந்திய சுமார் ஆறு ஆண்டு காலப்பகுதியில் ரிவிரச சண்டைகளுக்குப்பின் செய்த எந்தவொரு குறிப்பிடத்தக்க சண்டையிலும் சிறிலங்கா படைத்துறை அதன் இறுதி இலக்கை வெற்றிகொள்ளவில்லை என்பது. யாழ்ப்பாணத்தை வெற்றிகொண்டதன் பின் அவர்களுக்குக் கிடைத்த பெரும்பாலான வெற்றிகள் தற்காலிகமானவைகளாகவோ அல்லது பின்வரப்போகும் தோல்விகளின் தொடக்கமாகவோதான் அமைந்திருக்கின்றன. இத்தகைய தொரு விளக்கத்தின் அடிப்படையில் கூறின் யாழ்ப்பாணத்தில் பெற்றவெற்றி கூட ஒரு எதிர்மறைத் தொடக்கம் தான்இது மூன்றாவது.

நாலாவது, புலிகளின் வான்படை பற்றிய முற்கற்பிதங்களும், அச்சங்களும்.

ஐந்தாவது, ஈழப்போரில் இதுவரை செய்யப்பட்ட அநேகமாக எல்லா சமாதான முயற்சிகளின் போதும் யுத்த நிறுத்தம் முறிக்கப்பட்டு உடனடுத்து வந்த காலப்பகுதிகளில் பெரும்பாலும் புலிகளின் கையே மேலோங்கியிருக்கக் காணப்பட்டது.இனிவரப் போகும் ஒரு யுத்தத்திலும் அப்படியேதும் நடந்துவிடலாம் என்ற ஒரு கணிப்பு;அச்சம். இது ஐந்தாவது.

இந்த ஐந்து காரணங்களுக்காகவும் இவைதவிர வேறும் சில முக்கியமான பொருளாதார மற்றும் ராஜதந்திர காரணங்களுக்காவும் மகிந்த யுத்தத்தை ஒத்திவைக்கவே விரும்புகிறார். மேற்சொன்ன காரணங்களின் படி அவர் அரச யுத்த எந்திரத்தை பலப்படுத்தி வினைத்திறன் மிக்கதாக மாற்ற ஒரு குறிப்பிட்ட கால அவகாசம் தேவை.இது தவிர அவருடைய தேர்தல் மற்றும் பட்ஜெட் வாக்குறுதிகளை நிறைவேற்ற நிதியுதவிகள் தேவை. "ஏழைகளுக்கு நெருக்கமான அவருடைய பட்ஜெட் நாட்டை ஏழையாக்கிவிடும்" என்று கொழும்பில் உள்ள பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். எனவே நிதியுதவிகளைப் பெறவும் மேற்கு நாடுகளில் புலிகளைத்தனிமைப்படுத்தும் விதத்திலும் மேற்கு நாடுகளுடன் ஒரு குறிப்பிட்ட கட்டம்வரை ஒத்துப்போவது போல ஒரு தோற்றத்தைக் காட்டவேண்டியுள்ளது.

எனவே இந்த எல்லாக்காரணங்களுக்குமாக ஒரு குறிப்பிட்ட காலம் வரை இந்த யுத்தநிறுத்தத்தை நீட்ட வேண்டியிருக்கிறது. ஏனெனில் ஒரு யுத்த நிறுத்தம்தான் அவருக்குள்ள பல இலக்குகளை ஒரே நேரத்தில் சாதிக்க உதவும். சமாதான முயற்சிகளுக்கெல்லாம் அடிப்படையானது யுத்தநிறுத்தம். யுத்தநிறுத்தத்தை மகிந்த தானாக முறிக்கமாட்டார் என்ற ஒரு நிலை உள்ளவரை அவரால் குறிப்பிடத்தக்க அளவுக்கு மேற்கு நாடுகளைச் சமாளிக்க முடியும்.

இதனால் காசும் கிடைக்கும். கால அவகாசமும் கிடைக்கும். எனவே மகிந்த தானாக யுத்தநிறுத்தத்தை முறிக்கமாட்டார். சரத்பொன்சேகா தேர்தலில் யாருக்கு வாக்களித்திருப்பாரோ தெரியாது. ஆனால் அவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அரசாங்கம் உடனடியாக ஒரு சண்டையைத் தொடங்கும் நிலையிலில்லை.

இதன் அர்த்தம் மகிந்தவின் நிகழ்ச்சி நிரலில் யுத்தம் இல்லை என்பதல்ல. அவருடைய சிந்தனைகளின் படி இறுதித்தீர்வு எனப்படுவது ஒரு இராணுவத்தீர்வாகத்தான் அமையமுடியும். ஆனால் அது-எப்போது என்பதே இப்போதுள்ள கேள்வி.

கொழும்பில் உள்ள படைத்துறை மற்றும் புலனாய்வுத்துறை நிபுணர்களில் ஒரு பகுதியினர் மத்தியில் சிறிது காலத்துக்கு முன்புவரை ஒரு நம்பிக்கை இருந்தது. புலிகள் சண்டையைத் தொடங்கமாட்டார்கள் என்று. ஏனெனில் கிழக்கில் தோன்றியுள்ள புதிய நிலைமைகளால் புலிகள் இயக்கம் ஒப்பீட்டளவில் பலவீனமடைந்திருப்பதாக அவர்கள் நம்பினார்கள். மேலும் சர்வதேச சமூகத்துடனான புலிகளின் இராஜீய உறவுகள் காரணமாக புலிகள் முகத்தை முறித்துக்கொண்டு ஒரு யுத்தத்தைத் தொடங்க பின்னடிப்பார்கள் என்றும் அவர்கள் நம்பினார்கள்.

கடுமையான இனச்சாய்வுடைய சிங்கள மற்றும்ஆங்கில ஊடகங்கள்

**நிலாந்தன்**

இந்த நம்பிக்கையைப் பிரதிபலிக்கும் விதத்தில் எழுதியும் வந்திருக்கின்றன. ஆனால் நடந்து முடிந்த சனாதிபதித் தேர்தலில் தமிழ்மக்கள் எடுத்த முடிவுகள் அடிப்படையிலும் மாவீரர் நாள் உரையின் அடிப்படையிலும் இப்பொழுது அவர்கள் நம்புகிறார்கள் புலிகள் ஒரு யுத்தத்துக்குத் தயாராகி விட்டதாக.

எனவே புலிகள் நினைக்கும் ஒரு யுத்தத்தை புலிகள் நினைக்கும் ஒரு நேரத்தில் தொடங்கக்கூடாது என்று அவர்கள் சிந்திக்கிறார்கள். புலிகள் விரும்பும் ஒரு யுத்தத்தை புலிகள் விரும்பும் ஒரு நேரத்தில் தொடங்கினால் புலிகளின் வியூகத்துள் விழநேரிடும் என்று மகிந்த நம்புகிறார். எனவே புலிகளின் வியூகத்துக்கு எதிர் வியூகம் ஒன்றை அவர் வகுக்கத் தொடங்கிவிட்டார்.

இதன்படி யுத்தத்தை ஒரு குறிப்பிட்ட காலம்வரை ஒத்திவைப்பதுடன் அந்தக்கால அவகாசத்துள் பிராந்திய மற்றும் சர்வதேச அளவில் தன்னை ஸ்தாபித்துத் தனது வியூகங்களையும இறுதியாக்கிக்கொள்வதோடு அரசு யுத்த எந்திரத்தையும் போதியளவு பலப்படுத்த விடலாம் என்று அவர் திட்டமிடுகிறார்.

ரணிலுடன் ஒரு இணக்கத்துக்கு வர முயல்வது;பேராசிரியர் ஜீ.எல். பீரிசை சமாதான முயற்சிகளில் உதவுமாறு கேட்டது; அடுத்த ஆண்டுகான யுத்த பட்ஜெட்டை அசாதாரணமாக அதிகரித்திருப்பது மற்றும் அவருடைய உத்தேச இந்திய விஜயம் போன்ற எல்லா நகர்வுகளும் மேற்படி இலக்கை நோக்கியவையே.

தானாக யுத்த நிறுத்தத்தை முறிக்காமல் புலிகளாக அதை முறிக்கும் ஒரு நிலைவரும்வரைக்கும் அதை இழுத்திழுத்துக் கொண்டு போகவே அவர் விரும்புகிறார். புலிகளை சர்வதேச அளவில் தனிமைப்படுத்த இது மிக அவசியம் என்றும் அவர் நம்புகிறார்.

இந்தியாவுடன் சேர்ந்து அவர் வகுக்கத் திட்டமிடும் பிராந்திய வியூகம் இனிமேல்தான் இறுதியாக்கப்பட வேண்டியிருக்கிறது. குறைந்த பட்சம் அதுவரையிலுமாவது அவர் யுத்தத்தை ஒத்திவைக்கவேண்டியிருக்கிறது.

ஆனால் இப்பொழுது உள்ள பிரச்சினையெல்லாம் யுத்த நிறுத்தத்தை உடையவிடாமல் தடுப்பது என்பது தனிய அவருடைய தீர்மானத்தில் மட்டும் தங்கியிருக்கவில்லை என்பதே.

அண்மைக்காலங்களில் பூமியில் செய்யப்பட்ட யுத்தநிறுத்தங்களில் மிக அசாதாரணமாக அதிகம் ஈயுந்தன்மை வாய்ந்த ஒரு யுத்தநிறுத்தமாக இது காணப்படுகிறது. மெய்யாகவே பிரயோக நிலையில் இப்பொழுது ஒரு யுத்த நிறுத்தமே இல்லையெனலாம்.நாடு ஒரு அரை மென்தீவிர யுத்தத்தையே கடந்த பல மாதங்களாக யுத்தநிறுத்தம் என்று அழைத்துவருகிறது. யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவும் அது செயற்படும் அர்த்தத்தில் ஒரு யுத்தக் கண்காணிப்புக் குழுவாக மாறி பல மாதங்கள் ஆகிவிட்டன. இந்நிலையில் இப்போதுள்ள கேள்வியெல்லாம் இந்த அரைமென்தீவிர யுத்தம் ஒரு முழுத்தீவிர யுத்தமாக மாறுவது எப்பொழுது என்பதை யார் தீர்மானிப்பது என்பதே.

தானே தீர்மானிக்கவேண்டும் என்றே மகிந்த திட்டமிடுகிறார். ஆனால் பொங்கி எழும் தமிழர்களே அதைத்தீர்மானிப்பார்கள் என்று புலிகள் சொல்லுகிறார்கள். அண்மைக்காலங்களில் இந்த அரைமென்தீவிர யுத்தம் அதிகமதிகம் ஆயுதம் ஏந்தாத பொதுமக்களையே பதம்பார்க்கத் தொடங்கியிருக்கிறது. கடந்தவாரம் அது முட்டக்கூடாத ஒரு இடத்தில் அதாவது யாழ்பல்கலைக் கழகத்தில் முட்டுப்பட்டிருக்கிறது.

மாணவர்களே புரட்சியின் முன்னணிப்படை என்று அதாவது புரட்சியின் கூர்முனை போன்றவர்கள் என்று ஹோபட் மாக்கியூஸ் முன் பொருதடவை சொல்லியிருக்கிறார்.


யுத்தநிறுத்தம் வர முன்பு ஆனையிறவுச் சண்டையின் போது பளையில் யுத்தவலயத்துள் பீரங்கிகளின் கொல்லுந் தூரத்திற்குள் சிக்குண்டிருந்த பொதுமக்களை ராணுவம் ஒரு மனிதக் கேடயமாக பயன்படுத்துவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்த வேளை யாழ். பல்கலைக்கழகமே போராடி அந்த மக்களை மீட்டது என்பதை இங்கே நினைவுகூர வேண்டும். ஆனையிறவுச் சண்டையின் போக்கைத் தீர்மானித்த காரணிகளில் இதுவும் ஒன்று.

இப்பொழுதும் யாழ்பல்கலைக் கழகத்தைக் குறிவைத்து தாக்குதல்கள் நடத்தத் தொடங்கியுள்ளன. சரத்பொன்சேகா யாழ்ப்பாணத்தில் தளபதியாக இருந்த காலத்தில் எதையுமே கற்றுக்கொள்ளவில்லை போலத் தெரிகிறது.பதவியேற்றதும் அவர் ஆற்றிய உரையின் சாராம்சமும் அதைத்தான் காட்டுகிறது.

ஆயின் புராதன சீனாவில் வாழ்ந்த போரியல் மேதையான சன்சூவின் கூற்று ஒன்றையே அவருக்கு நினைவூட்ட வேண்டியிருக்கும்...." நீ உன்னையும் அறிந்திருந்து உனது எதிரியையும் அறிந்திருப்பாயானால் நூறு சண்டைகளின் விளைவையிட்டு நீ அஞ்சவேண்டியதில்லை. நீ உன்னை மட்டும் அறிந்து வைத்திருந்து உனது எதிரியைப் பற்றி அறிந்து வைத்திருக்கவில்லையென்றால் நீ பெறும் ஒவ்வொரு வெற்றியிலும் தோல்விகளும் இருக்கும். நீ உன்னைப்பற்றியும் அறிந்திராமல் உன் எதிரி பற்றியும் அறிந்திராமல் இருப்பாயானால் ஒவ்வொரு சண்டையிலும் நீ தோற்கடிக்கப்படுவாய்".

# நமக்கென...

## மானவர் சக்தியின் முன் சிறிலங்காப் படைத்தரப்பு



யாழ். பல்கலைக்கழக மாணவர் மற்றும் விரிவுரையாளர்கள் மீதான தாக்குதலை சிறிலங்கா இராணுவத்தின் புதிய இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா பலாலி இராணுவத்தளத்திலிருந்து மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

லெப்.ஜெனரல் பொன்சேகா ஒரு சமர் ஒன்றை வழிநடத்துவது போன்று நேரடியாக இந்தத் தாக்குதலை தனது கட்டளையின்கீழ் மேற்கொண்டிருக்கிறார்.

இந்தவகையில் சரத் பொன்சேகா இராணுவத்தளபதியாகப் பொறுப்பேற்ற பின்னர் மேற்கொண்ட முதலாவது நடவடிக்கையாக இது அமைகிறது.

உலகத்தில் அநீதிகளுக்கு எதிராக முதலில் பொங்கியெழுபவர்கள் மாணவர்கள். அவர்களின் கோபங்கள் எப்போதும் அநீதிகளுக்கு எதிராக பெரும் தீச்சுவாலையாக சுடர் விடுபவையாகவே இருந்து இருக்கின்றன.

ஆனால் மாணவர்களின் நியாயமான கிளர்ச்சிகளின் முன் அரசுகளும், அதிகாரத் தரப்புக்களும் இறுதியில் மண்டியிட்டதாகவே வரலாறு சான்று பகர்கின்றது.

இதேநேரம் மாணவர்களின் போராட்டத்தை இரும்புக்கரம் கொண்டு நசுக்கிவிடுகிறேன். மாணவர்களின் போராட்டத்தை அழித்து விடுகிறேன் எனப் புறப்பட்ட அரசுகள் அதிகாரத்தரப்புக்கள் என்றுமே வரலாற்றிலிருந்து அழிக்கமுடியாத கரையைத் தமக்குத் தேடிக்கொண்டவர்களாகவே இருந்துவருகின்றனர்.

இந்த வகையில் சீனாவில் மாணவர்களின் போராட்டத்தை இராணுவ டாங்கிகள் கொண்டு அடக்கியதாகக் கருதிய சீனாவுக்கு தினமென்சதுக்க படுகொலையானது உலகின் முன் நிமிர முடியாத பெரும் அவமானச் சின்னமாகவே இருந்துவருகிறது.

இந்த நிலையில் தற்போது யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் போராட்டத்தை நசுக்குவதற்கு இராணுவத்தினர் செயற்படுவதானது சிறிலங்கா இராணுவ இயந்திரம் தமிழ் மக்களுக்கும், மாணவர்களுக்கும் இழைத்து வைத்திருக்கும் கொடுமைகளின் அடுத்த தொரு கொடுமையாக இருக்கப்போவதுடன் அழிக்கமுடியாத அவமானத்தை தேடுவதாகவும் இருக்கப் போகிறது.

இதே நேரம் சிறிலங்கா இராணுவம் தமிழ் மாணவர்களின் சக்தியைப்புரிந்துகொள்ளாமல் செயற்படுவதானது எரியும் நெருப்பிற்குள் பெற்றோல் ஊற்றுவதாகவே முடியும்.

இறுதியில் சிறிலங்கா இராணுவமே அந்தத் தீயிற்குள் எரிந்து சாம்பலாகப் போகிறது. இதற்கே சிறிலங்கா இராணுவம் ஏற்பாடுகளை செய்கிறது.

## படையினர் குறிவைக்கும் ஊடகவியலாளர்கள்



புதிய இராணுவத் தளபதியின் தலைமையில் அடுத்ததாக குறிவைக்கப்பட்டிருப்பது ஊடகவியலாளர்கள்.

யாழ்ப்பாண அசம்பாவிதங்களின் போது பல ஊடகவியலாளர்கள் மீது படையினர் தாக்குதல்களை மேற்கொண்டிருப்பதுடன் பலரின் புகைப்படக்கருவிகளும் அடித்து நொருக்கப்பட்டுள்ளன.

பல ஊடகவியலாளர்கள் படையினரின் தாக்குதலால் கடுமையாகப் படுகாயமுற்று யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இந்த வகையில் பார்க்கும் போது இராணுவத்தினர் ஊடகவியலாளர்களின் குரல்வளையை நெரித்துக்கொண்டு வெறியாட்டம் ஆடுவதானது யாழ்ப்பாணத்தில் மாணவர்கள், பொதுமக்கள் மீது படையினர் மேற்கொள்ளும் கொடுமைகளை மூடிமறைப்பதற்கு மட்டுமன்றி தமிழ் மக்களின் அடிப்படை இருப்பையே அழித்தொழிப்பதுடன் அவை வெளித்தெரியாமல் தடுத்துக்கொள்ளவுமாகும்.

எப்படியோ புதிய இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சரத்பொன்சேகாவின் தலைமையில் தமிழ் மக்கள் மீது மிகப் பெரிய மனித உரிமை மீறல்களுக்கு படையினர் தயாராகி விட்டனர் என்பதையே காட்டுகிறது.

யாழ்ப்பாணத்தைப்பொறுத்தவரை மக்களினதும், மாணவர்களினதும் போராட்டங்களுக்குக் காரணம் படையினரே. ஏனெனில் சாதாரண இயல்பு வாழ்க்கையை மேற்கொள்ள முடியாது பொதுமக்களின் வாழ்விடங்களை ஆக்கிரமித்து வைத்துக்கொண்டு அதனை உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் அதிலிருந்து அகல மறுக்கின்றனர்.


மாணவர்களைப் பொறுத்தவரையில் அவர்களின் கல்விக்கூடங்களுக்குள்ளும், அதனை அண்டியுள்ள பகுதிகளுக்குள்ளும் படைமுகாம்களை நிறுவிக்கொண்டு அவர்களின் சுதந்திரமான கல்விச் செயற்பாட்டிற்கும் தடைவிதித்துக்கொண்டு மாணவர்கள் வன்முறை புரிகிறார்கள் எனப் படையினர் கூறுகின்றனர்.

உண்மையில் மாணவர்களினதும் பொதுமக்களினதும் கோபங்களைப் படையினரே தூண்டிவிட்டுவிட்டு பின்னர் அவர்களை சுட்டும், அடித்தும் இராணுவ வன்முறைகளை புரிகின்றனர்.

இச்செயற்பாடானது யாழ்ப்பாணத்தில் நிலைவும் அசாதாரண நிலமைக்குக் காரணம் படையினர் தான் என்பதை பறைசாற்றுகிறது.

இந்த நிலையில் இத்தகைய உண்மைகளை வெளிச்சத்துக்குக் கொண்டுவரும் ஊடகவியலாளர்களின் செயற்பாடுகள் தமது வெறியாட்டத்துக்கு தடையாக இருப்பதாலே ஊடகவியலாளர்கள் குறிவைக்கப்பட்டு தாக்கப்படுகிறார்கள்.

## ஒற்றுமைக்கான அழைப்பு!



தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுவது தொடர்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அழைப்பு விடுத்ததுடன் அச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டுள்ளது.

இதனொரு அங்கமாக தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களை இலங்கை தொழிலாளர் காங்கிரசை சார்ந்த குழுவினர் அண்மையில் சந்தித்துப் பேசியிருந்தனர்.

உண்மையில் தமிழ் பேசும் மக்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக குரல் கொடுப்பதாக இருந்தாலும் சரி, அதற்கு எதிராகப் போராடு வதாக இருந்தாலும் சரி ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும் என்பதில் தமிழீழ் தேசியத்தலைவர் அவர்கள் பெருவிருப்புக் கொண்டவர்.

நோர்வே அரசின் அனுசரணையுடன் இலங்கை அரசுடனான சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்பகாலத்தில் தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் மலையகத் தலைவர்களை இங்கு அழைத்து அவர்களுடன் பேச்சுக்களை நடாத்தி இதற்கான ஆரம்பத்தை அன்றே ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிலையில் இப்போது தென்னிலங்கையில் கட்சிகள் ஒன்றுபட்டு ஓரணியாக நின்றுகொண்டு சிறுபான்மை இனங்களின் உரிமைகளை ஏப்பம் விடும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனடிப்படையில் இப்போது அவர்களால் அடுத்த குறி வைக்கப்பட்டிருப்பது மலையக மக்களாகும்.


இந்த வகையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இதனை புரிந்து கொண்டு இணைந்து செயற்படும் செயற்பாட்டுக்கு வந்திருக்கிறது. இதற்கு அரசியல் கட்சிகள் தமது ஆதரவை தெரிவித்திருக்கின்றன.

இந்த நிலையில் இணைந்து செயற்படுகின்றதென்று இந்த செயற்பாடானது தமிழ் பேசும் மக்களின் எதிர்கால, மற்றும் நீண்டகால நன்மைகளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும் என்பதே தமிழ் பேசும் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

எந்த நிலையிலும் குறுகியதொரு நெருக்கடியை சமாளிப்பதை நோக்கமாகக் கொண்டதாக மட்டும் ஒருபோதும் இருந்துவிடக்கூடாது.

அத்தோடு எந்தவொரு நிலையிலும் இதன் உண்மையான அடிப்படையிலிருந்தும் மாறுபட்டுவிடக் கூடாது. என்பதே தமிழ்பேசும் மக்களின் உறுதியான அபிலாசையுமாகும். -

## மகிந்தவின் பசளைத் திட்டம்..?



சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் முதற்கனவு சனாதிபதிக் கதிரையைக் கைப்பற்றுவதாகவே இருந்தது.

இதற்காக சேரக்கூடாதவர்களோடெல்லாம் கூட்டுச்சேர்ந்தார். கொடுக்க முடியாத வாக்குறுதிகளை எல்லாம் வாக்குறுதிகளாகக் கொடுத்தார். ஆயினும் தன்னுடைய கனவான சனாதிபதிக் கதிரையில் அமர்ந்துவிட்டார்.

ஆனால் இப்போது வாக்குறுதிகள் ஒருபுறமும், தேர்தல் கூட்டு நண்பர்கள் இன்னொரு புறமுமாக சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இருபுறமுமாக நெருக்கிவருகிறது.

இந்த நிலையில் மகிந்தவின் சிந்தனையின் அடிப்படையில் விவசாயிகளுக்கான முந்நூற்று ஐம்பது ரூபாவுக்கான உரம் இன்னும் விவசாயிகளுக்குக் கிடைத்ததாகத் தெரியவில்லை. விவசாயிகளோ காலபோக நெல்லை வயலில் விதைத்த நிலையில் பயிர்கள் பசளை காணாது வெளிறிக் காணப்படுகிறது.

இந்த நிலையில் விவசாயிகள் முந்நூற்று ஐம்பது ரூபா மகிந்த பசளைக்காக உரிய இடங்களில் பதிந்துவிட்டு கையைபிசைந்தபடி காத்திருக்கின்றனர். ஆனால் பசளையோ பிள்ளையார் கலியாணக் கதையாக இருக்கிறது.

விவசாயிகளுக்குத் தேவையான நேரம் பசளைகிடைக்காது பின்னர்கிடைத்து என்ன பயன். பசளை வயலுக்குப் போடவோ அல்லது வீட்டுக்குள் போடவோ என்ற நிலையாக இருக்கிறது.

சனாதிபதி மகிந்தராஜபக்ஷ ஏழை எளிய சிங்கள விவசாயிகளின் மனங்களில் நம்பிக்கை நீர் ஊற்றி வாக்குப் பெறமட்டுமே இந்த முந்நூற்று ஐம்பது ரூபா பசளைத்திட்டக் கதை அளந்திருந்தால் இந்த விவசாயிகள் பரிதாபத்துக்குரியவர்கள்.

ஏனெனில் ஆரம்பத்திலேயே இந்த விவசாயிகளுக்கு முந்நூற்று ஐம்பது ரூபாவுக்கு பசளை பெறுவது முயல் கொம்பாக இருக்கிற நிலையில் இந்தத்திட்டம் எப்படி வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படப் போகிறது.

எனவே ஏழைச் சிங்கள மக்களை சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மிக விரைவில் ஏமாற்றப்போகிறார். இந்த நிலையில் ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன நாடு முழுவதிலும் உள்ள சகல விவசாயிகளுக்கும் முந்நூற்று ஐம்பது ரூபாவுக்கு உரம்பெறுவதில் பெரும் பிரச்சினைகளை எதிர்கொள்கின்ற படியால் இப்பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு ஜே.வி.பியினர் அரசுடன் இணைந்து பொதுமக்களுக்கு உரவிநியோகம் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமெனக் கோரியுள்ளார்.

ஏனெனில் மகிந்தவின் சிந்தனையை கிராமங்களுக்குள் கொண்டு சென்றவர்கள் இவர்களே. எனவே இவர்கள் இதனை நடைமுறைப்படுத்த உதவ வேண்டும் எனக் கோருவதில் நியாயமில்லாமல் இல்லை.

சரி. மகிந்த இனி அடுத்த கட்டம் என்ன செய்யப்போகிறார்?

**வேழினி**

# சிறிலங்கா அரசினால் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களின் மேம்பாடு முடக்கப்பட்டுள்ளது

## திட்டமிடலுக்கும் மேம்பாட்டிற்குமான செயலகப் பணிப்பாளர் ச.ரஞ்சன்.

**ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டு ஓராண்டு பூர்த்தியாகும் நிலையில் பாதிக்கப்பட்ட எம் மக்களின் வாழ்வு இன்றும் வழமைக்கு திரும்பிய தாக இல்லை. இன்றும் இடைத் தங்கல் முகாம்களின் அவல வாழ்வு தொடர்கிறது. இந்த நிலையில் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டது முதல் இன்றுவரை தமிழீழ திட்டமிடல் மேம்பாட்டுச் செயலகம் பல்வேறு வேலைத திட்டங்களை ஒழுங்கு படுத்தி வருகிறது. அந்த வகையில் அதன் செயற் பாடுகள் தொடர்பாக அதன் பணிப்பாளர் ச.ரஞ்சன் அவர்கள் எமக்கு வழங்கிய நேர்காணல்.**



**கேள்வி :- சுனாமியின் 01 வருட நிறைவின் போது சுனாமி நிவாரணப்பணிகள் தொடர்பாக மக்களின் மனநிலை எவ்வாறு உள்ளது?**

பதில்:- சுனாமி பேரழிவால் மக்களின் வாழ்வாதார பொருளாதார வளங்கள் யாவும் அழிக்கப்பட்டு, பெரும்பாலான உட்கட்டுமானங்களும் முழுதாகச் சிதைக்கப்பட்ட நிலையில் இருக்கும் எமது தாயகப் பகுதிகளில் 01ஆம் கட்ட,02ஆம் கட்ட நிவாரணப்பணிகள் நடந்திருந்தாலும் இப்பாதிக்கப்பட்ட மக்களின் நிரந்தரமாக குடியமர்த்தல் தொடர்பில் ஆரம்பகட்டங்களில் போல் விரைவாக பொறுப்பெடுத்தவர்களினால் செய்யப்படாமை குறித்து மிகவும் வேதனையாகவே உள்ளது. ஏனெனில் மக்கள் இன்னும் தற்காலிக வதிவிடங்களில் மிகவும் துன்பமான சூழலிலேயே வாழ்கின்றனர். அத்துடன் தற்போதைய கடும்மழை, வெள்ளம் போன்றவற்றால் மக்கள் சொல்லொணா துன்பத்தில் இருப்பது மிகவும் மனவேதனையை தருகின்றது.

**கேள்வி :- அமைப்பு சுனாமி அனர்த்தத்தின் மீட்புப்பணியினைக் கையாண்ட முறைமை குறித்து சர்வதேச மட்டத்தில் பேசப்பட்டதே அது எவ்வாறு சாத்தியமாகியது என்று கூறுவீர்களா?**

பதில் :- விடுதலைக்காகப் போராடும் ஒரு அமைப்பிற்கு அழிவுகளுக்கு முகம் கொடுத்தல், சிதைவுகளிலிருந்து மீண்டெழுதல் என்பன புதுமையான விடயங்கள் அல்ல. எங்களைப் பொறுத்தவரையில் பாரிய இயற்கை அழிவினை கையாண்ட முன்னனுபவம் இல்லை என்பதே தவிர ,எமது தேசத்தில் சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்பின் விளைவாக ஏற்பட்ட பாரிய இடம்பெயர்வுகளிற்கும் அனர்த்தங்களிற்கும் முகம் கொடுத்த அனுபவங்கள் நிறையவே எமக்கிருந்தது. நாம் செய்தது, யுத்த வடுக்களில் பெற்றுக்கொண்ட அனுபவத்தை சுனாமி பேரழிவின் மீட் புப்பணிக்காக உடன் மாற்றிக் கொண்டதுதான். இதில் கவனிக்கவேண்டியது என்னவெனில் மாற்றம் நடந்த வேகம் என்பதாகும். அதேவேளை எமது ஒழுங்கமைப்பு பற்றி உலகத்தின் மிகப்பிரபல்யமான இதழ்கள் சஞ்சிகைகள் செய்தியேடுகள் இவை பற்றி கருத்துக்கூறியது இதற்கு சான்றாகும். அதேவேளை இப்படியான மாற்றத்தை விரைவாகச் செய்தமைக்குரிய பிரதானமான காரணங்களில் ஒன்று போராளிகளுக்கு மக்கள்மீதிருந்த பற்று, எல்லாவற்றுக்கும் மேலாக மக்களின் துயர் துடைப்பதில் எந்த செயற்பாட்டிற்கும் தன்னை தயாராக்கிக்கொள்ளும் எமது தலைவரின்

**நேர்காணல்:-**
**மு. தமிழ்ச்செல்வன்**

மனிதநேயப் பண்பும், பரந்துபட்ட மனப்பான்மையும் மக்களின் நலன்களுக்காக ஏனைய எல்லாவிடயங்களினையும் விட்டுக்கொடுக்கும் தன்மையும் ஒருங்கிணைக்கும் தலைவரின் சிறப்பியல்பும் என்பன இந்த அடைவிற்கு பிரதான காரணங்களாகும்.

**கேள்வி :- தலைவரின் திட்டத்திற்கு எவ்வாறு செயல்வடிவம் கொடுக்கப் பட்டது? அது சரியாக நடைபெற்றதா?**

பதில்:- சுனாமி பேரழிவு அனர்த்தம் இடம் பெற்றவுடன் உடனடி மீட்பு நடவடிக்கைக்கான முழு படையணிகள் , துறைகளின் சகல வளங்களையும் திருப்பி உடனடி மீட்பு நடவடிக்கை நடைபெற்றது. அடுத்த கட்டமாக தற்காலிக வதிவிட வசதி, உணவு, உடை, மருத்துவம் என்பன உடனடி அவலநிலைத் தேவையாக இருந்தன. எனவே இவையாவற்றையும் கையாளக்கூடிய ஒரு புதிய செயலணி எங்களுடைய தலைமைப்பீடத்தின் திட்டத்திற்கு அமைவாக அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களால் உருவாக்கப் பட்டது. உதவிவழங்க முன்வந்த அனைத்து தரப்பையும் நெறிப்படுத்தி ஒன்றிணைத்து உதவிகள் உடனடியாக மக்களை சென்றடைவதை உறுதிப்படுத்த செயலணி என்ற வடிவம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதில் நாம் மக்களின் முன்னுரிமைகளுக்காக சிறிலங்கா அரசுடன் இணைந்து செயல்பட முன்வந்தோம் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் இச் செயலணியில் திட்டமிடலுக்கும் மேம்பாட்டிற் குமான செயலக பிரதிநிதி,மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர்,சர்வதேச, உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரச அதிபர் உள்ளடங்கலாக சகல மாவட்டங் களிலும் செயலணி உருவாக்கப்பட்டு மிகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக சீராக உதவிகள் வழங்கப்பட்டன. இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதி களில் கூட எம்முடைய மீட்பு மற்றும் நிவாரணப்பணி சிறப்பாகவே முன்னெடுக் கப்பட்டது. ஆனால் ஆரம்பத்தில் எமது செயற்பாடுகளை முன்னெடுக்க முடிந்தாலும் நாளடைவில் சிறிலங்கா அரசும், சிங்கள இராணுவமும் தமது வழமையான பேரினவாத நிலைக்குள் சென்று, தமிழின விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டபோது எமது செயற்பாடுகள் பாரிய சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப் பட்டன. முக்கியமாக கிழக்கில் இராணுவத் தலையீட்டால் செயலணி செயற்படாது போனது மட்டுமல்லாமல் அதிதீவிரமாக்களில் இருந்த மக்களிற்கான உடனடி உதவிகள் சரியாகச் சென்றடையாமல் முடக்கப்பட்டன, திசைதிருப்பப்பட்டன. செயலணியை செயற்படாமல் முடக்கக்கூடிய நடவடிக் கைகளை இராணுவம் செய்தது மட்டுமல்லாமல் மனிதாபிமான உதவி களை செய்யச் சென்ற போராளிகள், தொண்டர் அமைப்பு உறுப்பினர் களை தடுத்து தாக்கியதுடன் உதவிப்பொருட்களை வழங்க விடாது அசௌகரியங்களை மேற் கொண்டது மட்டுமன்றி மக்கள் தங்க யிருந்த தற்காலிக வதிவிடங்களுக் குச் சென்று பல அடாவடித்தனங் களையும் கலாச்சாரச் சீரழிவு களையும் திட்டமிட்டு மேற்கொண்டது. இவையனைத்தும் நாம் அறிந்ததொன்றாகும். அதேவேளையில் ஒப்பீட்டளவில் எமது ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் முதலாம், இரண்டாம் கட்டப்பணிகள் துரிதமாகவும் நேர்த்தியாகவும் செய்யப்பட்டது என்பதை எல்லோரும் ஏற்றுக்கொண்டனர். இதில் கவனிக்க வேண்டிய விடயம் என்னவெனில் ஒரு இயற்கை அனர்த்தத்தின் பின்னரான மனிதாபிமான நடவடிக்கைகளில் கூட எம்மக்கள் பாரபட்சமாக நடத்தப்பட்டது மட்டுமல்லாமல் முனைப்புடன் செயற்படுத்தப் பட்ட எமது மனிதாபிமான திட்ட முன்னெடுப்புக் கள் கூட சிங்கள பேரினவாதத்தின் தமிழ் விரோத வெறியினுள் சிதைத்துப் புதைக்கப் பட்டமைதான்.

**கேள்வி :- சுனாமி நடந்து முடிந்த பின்பு மீள்கட்டமைப்பு பணிகள் சம்பந்தமான தேசியத்தலைமையின் நெறிப் படுத்தலும் வழிகாட்டலும் எவ்வாறமைந்தது?**

பதில் :- மூன்றாம் கட்ட, நிரந்தரமான மேம்பாட்டு திட்டமிடல் பற்றி தலைவர் கூறும் போது இது எமக்கு இரண்டாவது சுனாமி என்றும் எமது மக்களை தங்கிவாழும் சமூகமாக மாற்றாமல் சொந்தக்காலில் நிற்கக்கூடிய மேம்பாட்டுத் திட்டங்களை வகுக்க வேண்டும் என்று பணித்திருந்தார். ஏனெனில் எமது பகுதிகளில் ஒரு வேறுபட்ட புறச்சூழல் உள்ளது. சுனாமிக்குப் பின்னான மேம்பாடு என்பது வெறுமனே சுனாமி பாதிப்பின் போது எவை இழக்கப்பட்டனவோ அவற்றினை மாற்றீடு செய்தல் என்ற நிலைக்கு அப்பால் இருபத்தைந்து வருடங்களிற்கு மேலாக யுத்தத்தினால் சிதைந்து பின் மீளவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதியை திட்டமிடும் போது மிகவும் கவனமாக சிந்திக்கவேண்டிய கடப்பாடு எமக்கிருந்தது. இதில் முக்கியமாக யுத்தமும் சுனாமியும் இல்லாவிட்டால் நாம் அடைந்திருக்கவேண்டிய மேம்பாட்டையும் அதனூடாக எதிர்காலத்தில் அடைய வேண்டிய மேம்பாட்டையும் கருத்தில் கொண்டே மேம் பாட்டு திட்டத்தினை வகுக்க வேண்டியிருந்தது. இதற்குரியவாறே மேம்பாட்டு திட்டம் வகுக் கப்பட்டது.

**கேள்வி:- இதற்கான செயற்படுத்தலை எவ்வாறு ஒழுங்குபடுத்தினீர்கள். அது சாத்தியப்படாமல் போனது ஏன்?**

பதில்:- நாம் முதலில் உள்ளூர் புலமைசார் ந்தோர்,மற்றும் புலம்பெயர் அறிஞர்களையும் ஒன்றிணைத்து தேவைகளை மதிப்பீடு செய்து ஒரு அறிக்கை தயாரித்து சர்வதேச உதவி வழங்கும் சமூகத்தின் முன் வைத்தோம். இதன் எண்ணக்கருவை முழுமையாக ஏற்றுக்கொண்ட சர்வதேச சமூகம் ஒரு பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தி அதனூடாக ஒரு வெளிப்படைத் தன்மையான பாரபட்சமற்ற உதவிகளை எமது பகுதி மக்களுக்கு வழங்க முன்வந்தது. அதே வேளை எமது தேசியத்தலைமையும் இயற் கையின் பேரழிவினை கருத்திலெடுத்து ஏனைய முரண்பாடுகளை பின்தள்ளி, மக்கள் நலனுக்காக மனிதாபிமான உணர்வோடு இணைந்து செயற்பட முன்வந்தது. ஆனால் சிங்கள தேசம் உடனடி மனிதாபிமான கட்டமைப்பை செயற்படுத்துவதில் கூட இழுத்தடிப்பை செய்து, 06 மாதத்தின் பின் இணக்கத்திற்கு வந்த வேகத்திலேயே அது முடக்கப்பட்டது. இதில் முக்கியமாக கவனிக்க வேண்டிய விடயம் என்னவெனில் வடகிழக்கு பகுதி அழிவை நாம் தெற்குடன் ஒப்பிடும் போது எமது பகுதியே மிகவும் பாதிக்கப்பட்ட தாகும். ஏனெனில் தெற்கில் உயிர், உடமை, சொத்தழிவுகள் ஏற்பட்டதே ஒழிய உட்கட்டுமானங்களோ, பொதுவசதிகளோ, தனியார் துறையோ, நிர்வாகக் கட்டமைப் புக்களோ பெரியளவில் பாதிக்கப்படவில்லை. எனவே தான் அவர்களால் 48 மணித் தியாலத்திற்குள் ஓரளவு இயல்பு நிலைக்கு திரும்பக்கூடியதாக இருந்தது. ஆனால் எமது பகுதிகளில் 48 நாட்களுக்குள் கூட வரமுடியவில்லை. இதில் உள்ள முக்கியமான அவலம் என்னவெனில் சுனாமி பேரழிவு கூட சிங்கள அரசாங்கத்தின் கருத்து நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. தமிழர் தேசம் மேம்பாடடைவதையோ அழிவிலிருந்து மீள் வதையோ அது விரும்பவில்லை என்பதே அடிப்படையாகும்.

**கேள்வி:- அப்படியானால் 03ஆம் கட்ட பணிகளின் தற்போதைய நிலை என்ன?**

பதில்:- நாம் திட்டமிட்ட மேம்பாடு என்பது சிங்கள தேசத்தின் போக்கினால் முடக் கப்பட்டுள்ளது. எனவே இத்தகைய சூழலில், மிகவும் பாதிக்கப்பட்டு உதவிகள் இல்லாமல் துன்புறும் மக்களிற்கான இந்த உதவிகளை நேரடியாக ஏதாவது ஒரு வழிவகையினூடாக மேற் கொள் ளுமாறு அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் சர்வதேச சமூகத்திடம் கேட்டிருந்தார். அதே வேளை தற்போது அரசசார்பற்ற நிறுவனங்கள், குறிப்பாக எமது புலம்பெயர் உறவுகளின் உதவிகளினூடாக தமிழர் புனர்வாழ்வுக்கழகம் போன்றவற்றினூடாக ஓரளவு மக்களிற்கான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் பணிகளில் ஈடுபட்டுக்கொண்டு வருகின்றோம். எனினும் மக்கள் இன்றும் தங்கி வாழும் நிலையிலேயே உள்ளனர். அவர்களை இந் நிலையில் இருந்து முழுமையாக விடுவிக் கப்பட வேண்டுமானால் தொழில்சார் கட்டு மானங்கள் நவீன உத்திகள், அழிவுட்டல்கள் வழங்கப்படவேண்டியது அவசியமாகின்றது.

*(19ஆம் பக்கம் பார்க்க)*

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 23. 12 . 2005
மின் அஞ்சல :–weekly @ eezhanatham.com

# சனாதிபதியின் மறுப்பு..!

யாழ். பல்கலைக்கழகச் சூழலில் அமைக்கப்பட்டிருக்கும் இராணுவத்தினரின் இரண்டு காவலரண்களும் அகற்றப்பட மாட்டாது என சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சனாதிபதியாக பொறுப்பேற்றதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் நடத்திய முதல் சந்திப் பிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள், மாணவர்கள் மற்றும் கல்வியலாளர்கள் மீது படையினர் கொடூரமானமுறையில் துப்பாக்கிகளால் சுட்டும் குண்டாந்தடி, சைக்கிள் செயின் போன்ற வற்றால் தாக்கியும் வெறியாட்டம் ஆடி வந்த சூழலிலேயே இந்தச் சந்திப்பு நிகழ்ந்துள்ளது.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்தின் முதன்மையான ஒரு விவகாரம் தொடர்பாக சனாதிபதியின் கவனத்துக்குக்கொண்டு வந்த தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ். பல்கலைக்கழக வளாகத்திற்கு அண்மையாகவுள்ள இரண்டு காவலரண்களை அகற்றி யாழ்ப்பாணம் இயல்பு நிலைக்குத் திரும்புவதற்குரிய வழிவகைகளை ஆரம்பித்து வைக்குமாறு கோரிய போதிலும் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதனை அடியோடு மறுத்து இராணுவத்தினரின் செயற்பாட்டிற்கு அங்கீகாரமளித்துள்ளார்.

உண்மையில், கூட்டமைப்பினரின் இந்தக் கோரிக்கையானது யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக மாணவர்களின் சுதந்திரமான கல்விச் செயற்பாட்டிற்கு பெரும் தடங்கலாக இருப்பதனால் இதனை சனாதிபதி புரிந்து கொண்டு செயற்படுவார் என்கின்ற வகையிலேயே ஆகும்.

ஆனால், சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூட்டமைப்பினருடனான சந்திப்பின் போது படைத்தரப்பின் இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொட, கூட்டுப்படைத் தளபதி அட்மிரல் தயாசந்தகிரி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ போன்றோரை அழைத்து பேச்சை நடத்தியபோது அவர்களின் வாதங் களுக்கே முதன்மையளித்து செயற்பட்டுள்ளார்.

இந்த நிலையில் கூட்டமைப்பினருக்கும் படைத்தரப் பினருக்குமிடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

எவ்வாறாயினும், சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களின் நலன்களை புறந்தள்ளுகின்ற ஒருவராகவே செயற்பட்டுள்ளார்.

இந்த நிலையில் புங்குடுதீவில் கடற்படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கழுத்து நெரித்து படுகொலை செய்யப்பட்ட இளம் பெண்ணின் விவகாரம் தொடர்பாகவும் வெறும் வாய் மூலமான பழைய வாக்குறுதிகளை மட்டுமே வழங்கியுள்ளார்.

சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனான தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரின் இச்சந்திப்பானது ஒரு உயர்மட்ட சந்திப்பாகவே இருந்துள்ளது. இந்த உயர்மட்ட சந்திப்பில் நாட்டின் சர்வாதிகாரம் கொண்ட சனாதிபதியினால் யாழ்ப்பாண மக்கள் இயல்பு வாழ்வுக்கு திரும்புவதற்காக விடுக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருப்பதானது யாழ்ப்பாண மக்கள் இயல்பு வாழ்வுக்கு திரும்புவது என்பது சாத்தியப்பாடானதொன்றுதானா என எண்ணத் தோன்றுகிறது.

படையினரின் தாக்குதல்களும் இப்போது பொதுமக்கள், மாணவர்கள் என மெல்ல மெல்ல விஸ்தரிக்கப்பட்டு யாழ்ப்பாணத்தின் அடையாளமாகத் திகழும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்துக் குள்ளேயே துப்பாக்கிச் சூடு நடத்தி, இராணுவ அராஜகத்தைப் புரியும் அளவுக்கு நிலைமை வளர்ச்சி பெற்றுள்ளது.

இந்த மிகப் பெரும் மனித உரிமை மீறல் தொடர்பாக இன்னும் மௌனிகளாகவே வெளிச்சமூகம் இருந்து வருவது மிகப் பெரிய வேதனையாகும்.

கடந்த சனாதிபதித் தேர்தலின் போது வடக்கு- கிழக்கு மக்களை புலிகள் வாக்களிக்க விடாது தடுப்பதற்கு அழுத்தத்தை பிரயோகித்ததாக எந்தவொரு ஆதாரமும் கிடையாது எனவும் தேர்தலை பகிஸ்கரிக்க கோருவதானது ஒரு அடிப்படை உரிமைதான் எனவும் இலங்கையின் தேர்தல் ஆணையாளர் தெரிவித்த பின்னரும் கூட புலிகள் தேர்தலில் மக்களை வாக்களிக்க வேண்டாம் என கோரியது கண்டிக்கத்தக்கது என அண்மையில் பிரசல்ஸில் கூடிய இணைத்தலைமை நாடுகள் தெரிவித் தமையானது தமிழ் மக்களுக்கு சமாதான முயற்சி என்ற பெயரில் தமிழ் மக்களின் சனநாயக ரீதியிலான உரிமைகளையும் இவர்கள் நிராகரிக்கின்றனரா என சிந்திக்க வேண்டியுள்ளது.

தமிழ் மக்களின் ஆயுதம் தாங்கிய போராட்டம் தொடர்பாக விமர்சனங்களை வெளிப்படுத்திவரும் இந்த நாடுகள் தமிழ் மக்களின் சனநாயக ரீதியிலான போராட்டங்களை புரிந்துகொள்பவர்களாகவும் சனநாயக போராட்ட உரிமைகளை ஆயுத பலம் கொண்டு நசுக்க முனையும் இராணுவ அராஜகங்களை விளங்கிக்கொண்டு அதற்கெதிராக குரல் கொடுப்பவர்களாகவுமே இருக்கவேண்டும்.

இத்தகையதொரு நிலைமையிலேயே இணைத்தலைமை நாடுகள் என்ற அவர்களின் செயற்பாட்டிற்கு மகத்துவம் நிறைந்ததாக இருக்கும்.

மாறாக நோக்கங்களின் அடிப்படையில் செயற்படும் பட்சத்தில் தமிழ் மக்களுக்கு சந்தேகங்களையே தோற்றுவிக்கும்.

# இராணுவ அராஜகத்தையடுத்து கிளர்ந்தெழும் மக்கள் படை



யாழ்ப்பாணத்தில் இன்று சிங்கள இராணுவத்தின் அடாவடித்தனங்கள் எல்லை மீறிச்சென்றுகொண்டிருக்கின்றன. அண்மை நாட்களாக அவர்களது நடவடிக்கை ஒட்டுமொத்த யாழ்ப்பாணத்தையே பெரிதும் பாதித்திருக்கிறது. சுற்றிவளைப்புக்கள், கைதுகள், விசாரணைகள், தாக்குதல்கள் என நிலைமைகள் யுத்த காலத்தைவிட மோசமாகச் செல்கிறது. இவர்களது அடாவடித்தனங்களை பொறுத்துக்கொள்ள முடியாத யாழ்ப்பாணச் சமூகம் அமைதி முறையில் மேற்கொண்ட வெகுசனப் போராட்டங்கள் மீதும் இந்த இராணுவத்தினர் காட்டுமிராண்டித்தனமாக தாக்குதல்களை மேற் கொண்டனர்.

இவர்கள் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்கின்ற இவ்வாறான அடாவடித்தனங்கள் என்பது சிங்கள இராணுவத் தலைமைகளால் நன்கு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதே. அதாவது இவர்களின் திட்டமெல்லாம் தமிழ்மக்களின் அண்மைக்கால எழுச்சியை நசுக்கிவிடுவதே. ஆனால் விளைவு இராணுவமோ அல்லது சிறிலங்கா அரசோ நினைப்பது போல் அமைந்துவிடப்போவதில்லை. மாறாக எதிர் மறையாகவே காணப்படப்போகிறது.

யாழ்ப்பாணத்தில் புங்குடு தீவில் இளம்பெண் ஒருவரைப் பாலியல் வல்லுறவுக்குப் பின் கொலைசெய்து கிணற்றில் போட்டவர்கள் உடல் எந்தச் சந்தர்ப்பத்திலும் மிதக்கக்கூடாது என்பதற்காக உடலோடு கல்லையும் கட்டிப் போட்டமையும், மற்றும் யாழ். பல்கலைக்கழகம், கல்விச் சமூகம் மீதும், பொது மக்கள் மீதும் மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதல்கள் என்பன இராணுவம் மீண்டும் திட்டமிட்டு தமிழ்மக்கள் மீது மேற்கொள்ளப்படும் அடக்கு முறையாகவே எண்ணத்தோன்றுகிறது.

எனவேதான் இவ்வாறான தாக்குதல்கள் நிறுத்தப்பட்டு தமிழ் மக்களின் வாழ்வுக்கு பாதுகாப்பளிக்க வேண்டுமென தமிழ் கூட்டமைப்பினர் சிறிலங்காவின் சனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தபோது அதனை அவர் நிராகரித்தமையும் இவற்றுக் கென விசாரணைக்குழுவை அமைத்து விசாரிப்பது என்பதும் சனாதிபதியின் அசட்டையீனத்தையே காட்டுகிறது.

சிறிலங்காவில் தமிழ் மக்களின் சார்பில் நியமிக்கப்படுகின்ற விசாரணைக் குழுக்களின் விசாரணைகளும் செயற்பாடுகளும் எப்படி அமையும் என்பது தமிழ் மக்களுக்கு நன்றாகவே தெரியும். அத்தோடு இப்படியான விசாரணைக்குழு நடைமுறை ஒரு ஏமாற்று வித்தை என்பதும் அவர்கள் நன்கறிவர். எனவே மகிந்த ராஜபக்ஷவும் இதயசுத்தி யோடு யாழ்ப்பாணப் பிரச்சினையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு முயற்சி எடுத்ததாகத் தெரியவில்லை. மகிந்தவின் இச் செயற்பாடு இராணுவத்தின் அடாவடித்தனங்களை மேலும் ஊக்குவிப்பதாகவே அமைகிறது.

இந்நிலையில் மகிந்த ராஜபக்ஷ தமிழ் கூட்டமைப்பினரை யாழ்ப்பாண நிலைமைகள் தொடர்பாக சந்தித்தமையும் ஒரு கண்துடைப்புச் செயற்பாடே. இல்லையெனில் யாழ்ப்பாணத்தில் பொதுமக்களைப் படையினர் தாக்கவில்லையென பொய் கூறியதும் பல்கலைக்கழக சூழலிலிருந்து படையினரை அகற்ற முடியாது எனக் கூறியிருந்தும் மகிந்தவின் நிலைப்பாட்டை தெளிவாகப்புரியவைக்கிறது

இந்த நிலையில் இராணுவம் ஒருபோதும் இவ்வாறான அராஜகங்களை விடுத்து வழமையான மக்களின் வாழ்வுக்கு வழிவிடப் போவதில்லை. நீதி கேட்டு அமைதிவழியில் போராட்டம் நடத்தும் மக்களை ஆயுதம் கொண்டு காட்டுமிராண்டித் தனமாகத் தாக்கும் படையினரின் செயற்பாட்டை இந்நாட்டின் தலைமைகளுக்கு எடுத்துக் கூறியும் நீதி கிடைக்கப்போவதில்லை. எனவேதான் இவர்களை இவர்களின் வழியிலேயே சந்திப்பதைத் தவிர தமிழ் மக்களுக்கு வேறுவழியில்லை.

இதற்கு இன்று எம்மக்கள் மத்தியில் உருவாகி இருக்கு படைகளால்தான் நல்ல பாடம் புகட்டமுடியும். பொங்கியெழும் மக்கள் படை என்றும் மண்மீட்கும் மறவர் படையென்றும், வன்னியன் படையென்றும் பொங்கியெழும் மக்களே இவர்களை அடக்கும் காலம் கனிந்துள்ளது. இவர்களுக்கு திருப்பி அடிப்பதைத் தவிர தமிழ் மக்களுக்கு வேறு மார்க்கம் இனி கிட்டப்போவதில்லை.

தமிழ்

# மாறுபட்ட பரிமாணத்தில் அண்மைய நிகழ்வுகள்

## நேர்நோக்கு



* தீர்வையற்ற முறையில் ஊடக வியலாளருக்கு கணினிகள்.
* செய்தியாளர்களுக்கு தீர்வையற்ற முறையில் உந்துருளிகள்.
* அச்சக மற்றும் இலத்திரனியல் ஊடக நிறுவனங்களின் ஆசிரியர்களுக்கு தீர்வையற்ற முறையில் வாகனங்கள்.
* ஊடகவியலாளர்களின் பிரச்சினைகள் குறித்து விசாரிப்பதற்கு ஒம்புட்ஸ்மன் ஒருவர் நியமிக்கப்படுவர்.
* திறமையான தனியார் அரச ஊடக நிறுவனங்களின் ஊடக வியலாளர்களுக்கு வெளிநாட்டு புலமைப்பரிசில்கள்.
* ஊடகவியலாளர்களுக்கு வருடந்தோறும் அரச விருது வழங்கும் வைபவம்.
* ஊடகவியலாளர்களுக்கு வீட்டுக கடன்.
* ஊடகவியலாளர்களுக்கு ஓய்வூதியமுறை.

இவையெல்லாம் எங்கே? இவையெல்லாம் "மகிந்த சிந்தனை" யில் உள்ளவை.

ஆனால் மகிந்த பதவியேற்று ஒருமாதம் பூர்த்தியாகமுன்,

* கொழும்பில் தினக்குரல் பத்திரிகையின் சிரேஷ்ட ஊடக வியலாளர் கைது.
* நமது ஈழநாடு அலுவலகத்தில் தேடுதல்.
* யாழ்.இல் ஈழநாதம் செய்தியாளரின் மீது இராணுவம் தாக்குதல்.
* யாழ்.இல் பேரணி குறித்து செய்திகளைச் சேகரிக்கச்சென்ற தினக்குரல், நமது ஈழநாடு, உதயன், தினகரன் செய்தியாளர்கள் மீது தாக்குதல்.

என்பன செய்தித் தலைப்புக்களாக வெளிவந்தவையாகும்.

இதிலும் ஒரு வேடிக்கையான அறிவிப்பு ஒன்றை சிறிலங்காவின் பொலிஸ்மா அதிபர் விடுத்துள்ளார்.

அதாவது கடந்த 17 ஆம் திகதி இரவு சிறிலங்காவின் தலைநகர் கொழும்பில் வைத்து தினக்குரல் நிறுவனத்தின் ஊடகவியலாளர் ஒருவரும் தொழில் நுட்பவியலாளர் இருவரும் வீதியில் சோதனையில் ஈடுபட்ட பொலிசாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையச் சிறைக் கூண்டில் அடைக்கப்பட்டனர். ஊடகவியலாளர் என்பதை உறுதிப்படுத்தி ஊடகத்துறை அமைச்சு வழங்கிய அடையாள அட்டையை அவர் காட்டியும்கூட அவர் இவ்வாறு அடைக்கப்பட்டிருக்கின்றார்.

அத்துடன் துயரம் முடிந்துவிட வில்லை. பொலிசார் அவ்வாறு செய்தது சரி என அந்தப் பொலிசாருக்கெல்லாம் தலைமை தாங்கும் பொலிஸ்மா அதிபர் கூறியிருக்கிறார். ஏனெனில் கொழும்பில் பல இடங்களில் போலிஅடையாள அட்டைகள் தயாரிக்கும் நிலையங்கள் இயங்குவதாகவும் அதனால் அடையாள அட்டைகளை நம்பியெல்லாம் நடந்துவிட முடியாது அதனை உறுதிப்படுத்துவது அவசியம் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

ஆனால் இவ்வாறு விளக்கமளிப்பது யாருக்கு வெட்கம்? என்பதை அவர் சிந்தித்துப் பார்க்கவில்லைப் போல தோன்றுகின்றது.

ஏனெனில் அவ்வாறான போலி அடையாள அட்டைகளைத் தயாரிக்கும் நிலையங்கள் இயங்குவது யாருடைய தவறால்? யாருடைய திறமையின்மையை அது வெளிப்படுத்துகிறது? என்பதையிட்டு அவர் கவலை கொள்ளவில்லை என்பதனையே இது காட்டுகிறது.

அதேவேளை ஊடகவியலாளர்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தைப் பற்றியெல்லாம் தெரிந்தவர்கள். எனவே அதிலுள்ளவையெல்லாவற்றையும் நம்பி பணிபுரியவுமில்லை பணிபுரியப் போவதுமில்லை.

பொரிய விழாவொன்றை நடத்தி வெளியிட்ட "மகிந்த சிந்தனையில்" இவ்வாறெல்லாம் தெரிவித்த ஒரு நாட்டின் தலைவரின் படைகள் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்திய குற்றத்தை மட்டுமல்ல அவர்களைத் தமது கடமையைச் செய்யவிடாது தடுத்த குற்றத்தையும் அவை செய்துள்ளன.

அவர்களைத் தமது கடமையைச் செய்வதை தடுக்காதிருந்தால் அன்றைய பேரணியில் நடந்தது என்ன? என்பதை ஆதாரங்களுடன் மக்கள் அறிந்துகொள்ள முடிந்திருக்கும்.

ஆனால் அதனைத் தடுத்து விட்டு இராணுவப்பேச்சாளர் கூறுவதை ஊடகவியலாளர் பிரசுரிக்க வேண்டுமென்றே சிறிலங்காவின் படைத்தளபதிகள் நினைக்கின்றனர் போல் இருக்கின்றது.

சிறிலங்கா அரசாங்கங்கள் ஊடகவியலாளர்களை எவ்வாறு நடத்தி வந்தன என்பதற்குப்பல உதாரணங்கள் இருக்கின்றன. உயர்கல்விச் சமூகமான பல்கலைக்கழகம் தமிழ்மக்கள்மீதும் தம்மீதும் சிறிலங்காப் படைகள் மேற்கொண்டுவரும் கெடுபிடிகளைக் கண்டித்து அதுகுறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யச் சென்றவேளை பெரும் தாக்குதலுக்கு இலக்காகியிருக்கிறது.

இதனைப் பதிவு செய்யச் சென்ற ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டு அவர்களும் போர்நிறுத்தக் கண்காணிப்பாளரிடம் முறையிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

ஆனால் அரசாங்கத்தால் கொழும்பில் நடந்த கைதுக்குஅடாவடி நியாயமொன்று கற்பிக்கப்பட்டிருக்கிறது. யாழில் நடந்த சம்பவங்களுக்கு விசாரணை நடத்த குழு நியமிக்கப்படும் என சிறிலங்காவின் பிரதமரும் இந்தத் தாக்குதலை நடத்திய படைகளின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான ரட்ணசிறி விக்கிரம நாயக்கா கூறியிருக்கிறார். இந்த விசாரணைக் குழுக்களின் முடிவு என்னவாகயிருக்கும் என்பதை ஊகித்துக் கூறக்கூடிய அனுபவம் தமிழ் மக்களுக்கு உண்டு.

ஆனால் இவ்வாறு எவரும் தாக்கப்படலாம். கொல்லப்படலாம். படுகாயப்படுத்தப்படலாம். கைது செய்யப்படலாம். அவையெல்லாம் நியாயமே என்ற வகையில் சிறிலங்கா அதிகார வர்க்கம் வழங்கும் தீர்ப்புக்களின் காரணமாகவே தமிழ் மக்கள் தமது விடுதலைக்கான போராட்டத்தை ஆரம்பித்தனர். அது வளர்ச்சியடைந்து வெற்றிபெறும் நிலையை எட்டியுள்ளது.

முன்னர் நடந்தவையே மீண்டும் மீண்டும் நடைபெறுகின்றன என்பது உண்மையே. ஆயினும் அதன் எதிர் விளைவுகள் மாறுபட்ட பரிமாணத்தில் ஏற்பட்டுக் கொண்டிருப்பது அண்மைய நிகழ்வுகள். முடிவுகளும் மாறுபட்ட பரிமாணத்திலேயே கிட்டும் என்பதும் வெளிப்படையான விடயமே.

**வேலவன்**

# வாக்கில் இனிமை வேண்டும்

எமது எண்ணங்கள் செயல்களாகி, பின் பழக்கங்களாகும் போது நமது எண்ணங்களே எமக்கு மறந்து போயிருக்கலாம். எண்ணம் திரும்பத்திரும்ப எழும்போது மனதில் அது நம்பிக்கையாய் வேர்விடும். எண்ணங்கள் எம்மைச்சுற்றிப் பரவும். அவை பிறரை பாதிப்பதாகவும் இருக்கின்றன. இந்த எண்ணத்திற்கு பெரும் சக்தியே இருக்கிறது.

ஒரு கிராமமோ, நகரமோ, நாடோ முன்னேறுவதற்கும், பின்நோக்கிச் செல்வதற்கும் அவ்விடத்தில் இருக்கும் பெரியவர்களையும், மக்களையும் பொறுத்தது. அங்கே நல்லவர்கள் இருக்கிறார்களா? சுயநலக்காரர்கள் இருக்கிறார்களா? என்பதைப் பொறுத்தது.

சில நாடுகளில் மகத்தான பெரியவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்று அவர்கள் வழங்கிய எண்ணங்கள் இந்திய உபகண்டத்தையே உயர்த்தியது. இவர்களின் திடமான எண்ணங்களால் உண்மை, வீரம், நிதானம், தியாகம், .இனிமை,பொறுமை என்பன மக்களுக்கு பரவின. இதனால் மக்கள் நம்பிக்கை கொண்டனர். நாடு விடிவுக்கு இதுவே காரணமாகியது.

எமது பிரதேசங்களில் கிராம ரீதியாக மக்களை நோக்குமிடத்து படித்தவர்கள், பாமரர்கள் என்று ஒன்றுகூடும் இடமாக வைத்தியசாலை காணப்படுகின்றது. இங்கு வருபவர்களின் எண்ணங்கள் நம்பிக்கையை இழந்துவிடும் நிலையில் இருக்கின்றது. ஒருவருக்கு நோய் ஏற்பட்டால்..... அவர் வைத்தியசாலை செல்வதற்குப் பயன்படுகின்ற போது..... நோய் குணமாவதற்கு தயங்குகின்றது. எமது வைத்தியசாலைகளைப் பொறுத்தவரையில் அடிப்படை வசதிகள் ஏதும் அற்ற நிலையில்..... வைத்தியர்கள், பணியாளர்கள் பற்றாக்குறை உள்ளபோது..... அங்கு பணியாற்றும் வைத்தியர்கள், பணியாளர் களின் எண்ணங்களின் உறுதியினால் நோயினால் துன்புறும் மக்களின் நோய்களை விரட்டுகின்றனர்.

அரச வைத்தியசாலைகளில் வைத்திய அதிகாரிகள் பெரும்பாலும் நோயாளிகளுடன் மிகவும் சாதுவாக உரையாடி நோய்களை இனங்கண்டு மாத்திரைகள் எழுதிக்கொடுக்கப் படுகின்ற வேளை ஊசி போடுமிடம், மருந்து கட்டுமிடம், மாத்திரை வழங்குமிடம் என்பவற்றில் நிற்கும் பணியாளர்களின் எண்ண அலைகள் நோயாளிகளை பயம்கொள்ளச் செய்வதாக இருக்கக்கூடாது. "மந்திரம் கால் மதிமுக்கால்" என்பார்கள். நோயாளிகளுடன் பேசும் போது மதிநுட்பமாகப் பேசுதல், நோயாளியின் எண்ணத்தில் இது என்னடா செய்யும்...? என்று மன உறுதியுடன் உட்சாகத்துடன் இருக்கச் செய்தல், வந்த நோயை விரட்டக்கூடிய விதத்தில் பணியாளர்களின் வார்த்தைகள் நோயாளியின் எண்ணத்தைப் பாதிக்கவேண்டும்.

நோயாளியுடன் விளையாட்டாக ஊசலாட முடியாது. உயிர் விலைமதிப்பற்றது.போனால் திரும்பிவராது என்பதை உணரவேண்டும்.

உள்ளத்தாலும் உடலாலும் சோர்வுற்றிருக்கும் நோயாளிகளுக்கு ஆதரவும் தேவைப்படுகின்றது. நோயாளிக்கு ஆதரவு சரிவர வைத்தியப்பணியாளர்களினால் கிடைக்கும் போது அரைவாசி நோய் குணமாகிவிடும்.

எண்ணங்களை ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கும் இடத்தில் நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளிக்கு வைத்தியர் "மருந்து" என்றுசொல்லி வர்ணத்தண்ணீரையும், "ஊசி போடுகிறேன்" என்று சொல்லி வெறும் தண்ணீரையும் செலுத்தி நோயாளிக்கு நம்பிக்கையூட்டக்கூடிய பேச்சுக்களை அவருடன் பகிர்ந்துகொண்டிருந்தாராம். சில நாட்களில் அந்த நோயாளி குணமடைந்து விட்டாராம். இங்கு மருத்துவரின் எண்ணம் நோயாளியை வலுவாகப் பாதித்து நம்பிக்கையை ஊட்டியிருக்கிறது.

எமது வைத்தியப் பணியாளர்கள் நோய் தீர்க்க வந்து மீண்டும் நோயை கொண்டு செல்பவர்களாக எந்தவொரு நோயாளியும் இருக்கக்கூடாது. சிங்கள அரசினால் திட்டமிட்டு வைத்தியசாலைகளின் அபிவிருத்திகள் முடக்கப்பட்டிருக்கும் வேளை குறைந்த பணியாளர்களுடன் வைத்தியசாலை இயங்க வேண்டியுள்ளது யாவரும் அறிந்ததே. இப்பணியாளர்களை நம்பியே நோயாளர்கள் சிகிச்சைபெறவருகின்றனர். மிகவும் பாதிக்கப்பட்ட, வசதிகள் ஏதுமற்ற ஏழை மக்களே பெரும்பாலும் நோய்களுக்கு இலக்காகின்றனர். இவர்கள் அரச மருத்துவமனைகளையே நம்பியிருக்கின்றனர். இவர்களையே அரச மருத்துவமனைப் பணியாளர்கள் கையாளவேண்டியுள்ளது.

நாம் பிறக்கும் போது பணம், சொத்து, செல்வாக்குடன் பிறப்பதில்லை. எம்மிடமிருக்கின்ற மிகப்பெரிய சொத்து மனம்தான். எம்முடைய அறியாமை, ஆணவம், அகங்காரம், திமிர், கர்வம், கவனக்குறைவு, கண் இருந்தும் குருடனாக வாழும் வாழ்வு எமக்குத் தேவையில்லை. செய்யும் தொழிலே தெய்வமாகக்கொண்டு மரியாதை, அடக்கம், பண்பு, அன்பு, பாசம், பணிவு என்பவற்றை நாம் உருவாக்கவேண்டும்.

பணியாளர்கள் எவரும் செல்வாக்குக் காரணமாகவும், தம்மை அதிகாரிகளாக பாவனை செய்துகொண்டும் நோயாளிகளின் மேல் எரிந்து விழுந்துவிடக் கூடாது. தமது கடமையை மறந்து நோயாளிகளை நெருங்க மறுக்கக்கூடாது. இந்த இடத்தில் நோயாளிகள் தமக்கு இழைக்கப்படும் கொடுமைகளைச் சொல்லத் தயங்குகின்றனர். உள்வீட்டுக்காரர்களுடைய பிரச்சினையை அவர்களிடமே சொல்லி என்ன ஆகப் போகிறது என்கிறார்கள். அப்படிச் சொன்னாலும் தமக்கு இன்னும் மோசமான திட்டு விழும்என்று அச்சப்படுகின்றனர். எமது பிரதேசங்களில் வாழும்மக்கள் 30 வருடகால போர் நெருக்கீடுகளில் அகப்பட்டு வாழ்ந்தவர்கள். இவர்களின் மனங்களில் எப்போதும் பய உணர்வு பாய்ந்தபடி இருக்கும். இவர்களின் எண்ணஅலைகள் பின்நோக்கியதாகவே காணப்படும். எமது நிலத்தில் எமதுமக்களின் துன்ப ரேகைகள் அழிக்கப்படவேண்டும். அவர்களின் எண்ணம் வெற்றியை நோக்கியதாகவழிகாட்டவேண்டும். நோய்வாய்ப்பட்ட மக்களைக்கொண்ட கிராமங்களாக எமது கிராமங்கள் மாற்றக்கூடாது. ஆரோக்கியமான மக்களைக் கொண்ட கிராமமாக மாற்றுவதற்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டும். நாளாந்தம் பணியாளர்களின் பணிகளை கவனத்தில் கொண்டு நோயினால் அவதிப்பட்டு மக்களுக்குரிய வகையில் அவர்களை அரவணைக்கவேண்டும். இன்முகத்துடன் வழங்கவேண்டும்.

"மனதில் உறுதி வேண்டும்
வாக்கினிலே இனிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்"

**அகவிழி.**

# மீள்திரும்பாத வாழ்வுக்குள் இன்னும் கரையோர மக்கள்!

வருடத்தில் ஒருமுறை வருகின்ற கிறிஸ்தவர்களின் மிகப்பிரதான பண்டிகை அல்லவா அதுதான் அந்த மக்கள் கிறிஸ்மஸ் பண்டிகையை சிறப்பாகக் கொண்டாடுவதற்கான முன்னேற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை மகிழ்ச்சியாகவே காணப்பட்டனர். ஒருவருக்கொருவர் வாழ்த்துக்களைக் கூறிக்கொண்டும், பண்டிகைக்கான உணவுப் பண்டங்களைத் தயாரிப்பதிலும் புதிய ஆடைகளை தெரிவுசெய்வதிலுமாக கரையோரப் பிரதேசம் பரபரப்பாகவே இருக்கிறது.

அழகான கிராமங்கள் அதில் பல வண்ண வடிவங்களில் வீடுகள், மிகவும் அழகான கடற்கரை கரையோர தென்னங்கீற்றை .வருடிச் செல்லும் உப்புக் காற்று கரையை மாத்திரமே தொட்டுச்செல்வேன் என இதுவரை கூறிக் கொண்டிருந்த கடற்கரை என எல்லாமே அழகாக காட்சியளித்தது.


அரச சார்பற்ற இணையங்களின் தலைவர் இ.கணேசபிள்ளை.

இது கடந்த ஆண்டு இந்தக் கரையோரப் பிரதேசங்களுக்குச் சென்றபோது எமது கண்கள் பதிவு செய்துகொண்ட காட்சிகள். மகிழ்ச்சியாகவே சென்று மகிழ்ச்சியாகவே திரும்பினோம்.

தற்போது அதே பெயர்களுடன் ஊர்களும் பாதைகளும் மட்டுமே. ஆனால் அதே நிலையில் இல்லை. இடம்மாறி வந்துவிட்டோமோ என்றவொரு உணர்வு இல்லையென்று தெரிந்தும் இந்த உணர்வு மேலிடுகிறது. எல்லாமே தலைகீழ் நிலைமை; பரபரப்பும் சோகமுமாக மக்கள் இன்று தங்களைவிட்டு பிரிந்த அந்த உறவுகளின் ஓராண்டு நினைவு நாளை அனுஷ்டிப்பதற்கான முன்னேற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். கிறிஸ்மஸ் பண்டிகையை பெரும்பாலான அந்த மக்கள் மறந்திருந்தார்கள்; இப்போ தெல்லாம் அவர்களது நினைவுகள் அரவணைத்து வாழவைத்த கடல் அன்னையின் அலைகள் எடுத்த உயிர்களின் மாறாத நினைவுகள்தான்.

கடந்தஆண்டு பார்த்த பல முகங்கள் இல்லை. ஆனால் அவர்களின் படங்கள்மட்டும் அந்தக் குடிசைகளின் கிடுகிலான சுவர்களில் இருந்தன. பழகிய பல மனிதர்கள் இல்லை. அழகான அந்த ஊர்கள் இல்லை. இயற்கை சுகந்தத்தை உள்வாங்க கடற்கரையைநாடும் அந்த உணர்வுகள் இல்லை. ஒவ்வொரு அலையையும் அச்சத்தோடு பார்க்கும் மனம் என எல்லாமே தலைகீழாக மாறியிருந்தது. சிதைந்து சின்னாபின்னமான ஊர்களும், புதிதாக அடுக்கிவிடப்பட்டு வெள்ளை கூரைவிரிப்பால் போர்த்திய தற்காலிக கூடாரங்கள். ஆங்காங்கே தகரத்திலான மலசலகூட கட்டடங்கள் இவற்றுகளுக்கூடாக தேங்கிநிற்கும் வெள்ள நீர் ஆங்கங்கு அழகான NGO களின் விளம்பரப் பலகைகள் என இப்போதைய காட்சிகள் விரிகின்றன.

26.12.2004 உலக மக்களின் மனங்களில் குறிப்பாக இலங்கை, இந்தியா, இந்தோனேசியா உள்ளிட்ட தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த மக்களால் மறக்க முடியாத நாள் இரண்டு லட்சம் பேரை ஆழிப்பேரலை அள்ளிச்சென்ற நாள். இந்த நாளும் ஏற்பட்டு ஓராண்டு ஆகப்போகிறதே தவிர அந்த மக்களின் வாழ்வும்,தொழிலும் இன்னும் வழமைக்குத் திரும்பியதாக இல்லை. 48 இற்கு மேற்பட்ட NGOகள் இங்கு சேவையாற்றுகின்றன. ஆனால் பாதிக்கப்பட்ட மக்கள் பொறுத்து அவர்களின் சேவை திருப்திகரமானதாக இல்லை. இந்நிலையில் பொதுக்கட்டமைப்பு மூலமாவது சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வை வளப்படுத்தலாம் என்றிருந்த வேளை தமிழீழத் தேசியத்தலைவர் குறிப்பிட்டது போன்று மனிதாபிமான உதவிக்கான அக்கட்டமைப்புக்கு சிங்கள இனவாதிகளால் சாவுமணி அடிக்கப்பட்டுவிட்டுவிட்டது. இதன் மூலம் சிங்கள அரசு தமிழ் மக்களுக்கான உதவிகளைத் திட்டமிட்டே நிறுத்திவிட்டது. இந்த நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகள் தங்களது அனைத்து கட்டமைப்புக்களை முழுமையாகப் பயன்படுத்தி பல வழிகளில் இந்த மக்களுக்கு உதவி புரிந்து வருகின்றனர்.

மேலும் அம்மக்களுக்கு உதவி செய்வது எனக் கூறிக்கொண்டு பல NGOகள் இங்கு வந்து குவிந்தன. அனைத்து நிறுவனங்களும் அம்மக்களுக்கு வாக்குறுதிகளை மட்டும் வாரி வழங்கியதே தவிர எவற்றையும் முழுமையாகச் செய்து முடிக்கவில்லை. ஒருசில நிறுவனங் களைத் தவிர பல NGOகள் இன்றைக்கும் அசட்டையீனமாகவே உள்ளன.

ஒரு சில NGOகளால் மனிதாபிமான வேலைத்திட்டங்களை விரைவாகவும் நேர்த்தியாகவும் செய்து கொடுக்க முடியும் என்றால் ஏன் ஏனைய நிறு வனங்களால் முடியாது? இவர்கள் ஏன் பெரும்பாலும் வாக்குறுதிகளோடு மட்டும் விட்டுவிடு கின்றார்கள்? போன்று பல்வேறு கேள்விகளுக்கப்பால் சில வேளைகளில் இவர்களது உதவி என்பது ஏதோவந்தோமாம் செய்தோமாம் என்ற நிலையிலும் உள்ளது.

எனவேதான் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு ஓராண்டு கடந்த நிலையில்தான் நாம் பின்வருவோரை தொடர்பு கொண்டு கேட்டபோது

***அரச சார்பற்ற இணையங்களின் தலைவர் இ.கணேசபிள்ளை.**

இங்கு கிட்டத்தட்ட 48 நிறுவனங்கள் சேவையாற்றுகின்றன. ஆனால் இவர்களது வேலை என்பது நாங்கள் இங்கு 600 ரூபாவுக்குச் செய்த வேலையை இவர்கள் 6000 ரூபாவிற்குச் செய்கிறார்கள். இருப்பினும் ஒழுங்காக எமது மக்களுக்கு இவர்களது வேலைகள் இன்னும் சென்றடையவில்லை. இவர்கள் இப்போதும் சுனாமி வேலைத்திட்டங்களுக்கு ஆளணிகளையும், வாகனங்களையும் உள்வாங்கிக்கொண்டிருக்கிறார்களே தவிர மக்களுக்கு ஒழுங்காக வேலை செய்வதாக இல்லை. உதாரணமாக இந்த NGO களால் இருநூறு வீடு கட்டுவதற்கு இவர்களால் பெறப்பட்ட சம்பளத்தைமட்டும் கொண்டு மேலதிகமாக 124 வீடுகள் கட்டலாம் இதைவிட இவர்களது நிர்வாகச் செலவு என அவர்கள் கொண்டுவரும் பணத்தில் பெரும் பகுதியை அவர்களது நாட்டிற்கே மீண்டும் கொண்டு செல்கின்றார்கள். எனவே இந்த NGOகள் சுனாமி வேலைத்திட்டங்களை மக்களுக்கேற்றவாறு செய்து முடிக்காது முடிக்கவும் இய லாது.

*** திருமதி இமெல்டா சுகுமார், அரச அதிபர், முல்லைத்தீவு மாவட்டம்.**

சுனாமிஅனர்த்தம் ஏற்பட்ட பின்னர் பல உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்கள் இங்கு வந்து என்னுடன் கதைத்து மக்களுக்கு உதவி செய்வது தொடர்பாக ஆராய்ந்து சென்றது மட்டும்தான் . அதற்கப்பால் அவர்கள் மக்களுக்கு எதையும் பெரிதாகச் செய்யவில்லை. இதைவிட மக்களுக்கு நிரந்தர வீடுகள் கட்டித்



தருவதாகக் கூறிய NGOகள் இன்னும் அவற்றை நேர்த்தியாக செய்து முடிக்கவில்லை அத்தோடு இந்த மாவட்டத்தில் மக்களுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டபடி அவர்களது தேவைகள் எவையும் பூர்த்தி செய்யப்படவில்லை என்று தான் கூறவேண்டும். இந்த NGOகள் இன்றும் கதைக்கும் போது மக்களுக்கு உதவிகள் செய்வதாகத்தான் கூறிக்கொண்டிருக் கிறார்கள். இதைவிட அம்மக்களின் தொழில் மற்றும் வாழ்வு வழமைக்குத் திரும்பவேண்டும் என்றால் அவர்கள் நிரந்தர வீடுகளிற்குச் செல்லவேண்டும். ஆனால் இந்த நிரந்தர வீடுகள் அமைத்தலில் NGO கள் அதிகளவு ஊக்கம் எடுக்கவில்லை. இருந்தாலும் நாம் அவர்களது சேவையை குறைகூற முடியாது. இருப்பினும் NGOக்களின் வேலைகளில் திருப்தி அடையவும் முடியாது.

எனவே PTOMS நடைமுறைக்கு வந்திருக்குமானால் நாம் எமது மக்களின் பிரச்சினைகளை பெருமளவிற்கு நிவர்த்தி செய்திருக்கலாம். ஆனால் அதுவும் சரிவரவில்லை. எனவேதான நாம் எந்தெந்த திட்டங்கள் மூலம் நிதியைப் பெற்று அம்மக்களின் வாழ்வை மேம்படுத்தலாமோ அந்தந்த வழிகளை நிச்சயம் பயன்படுத்துவோம்.

யாழமுதன்,

திட்டமிடல் செயலகப் பணிப்பாளர், முல்லைத்தீவு.



இதைவிட மூன்றாம் கட்ட வேலைகளை தற்போது ஆரம்பித்துள்ளோம் பல இடையூறுகள் தாமதங்கள் இருக்கின்றன. இருந்தாலும் NGOகளையும் இணைத்து மக் களின் வாழ்வு வழமைக்குத் திரும்புவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம்.

*** சு.பாலையா,**

**பணிப்பாளர் மாவட்ட திட்டமிடல் செயலகம், யாழ்ப்பாணம்.**

இங்கு நாம் ஆரம்ப கட்ட வேலைகளுக்கு கொழும்பில் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்படவில்லை. எனவே ஆரம்பகட்ட உடனடி



தேவைகளை நாம் எம்மிடம் உள்ள அனைத்து வளங்களையும் பயன்படுத்தி மேற்கொண்டோம். ஆனால் தற்போது மூன்றாம்கட்ட வேலைகளில் தாமதம். அதற்குப் பல்வேறு காரணங்கள் உண்டு. ஆனால் தென்பகுதியில் இடம்பெற்ற வேலைத்திட்டங்கள் போன்று எமது பிரதேசங்களில் இடம்பெறவில்லை. இங்கு அரச இயந்திரத்தோடு இணைந்த வேலைகளே தாமதமாக நடைபெறுகின்றன. எனவே சம்பந்தப் பட்டஏனைய நிறுவனங்கள் தாமதங்களை விடுத்து மக்களுக்கான வேலைத்திட்டங்களை நல்ல முறையில் முன்னெடுக்கவேண்டும் என்பது எமது விருப்பம்.

பாதிக்கப்பட்ட மக்கள்:-

ஆரம்பத்தில் எல்லா நிறுவனங்களும் வேகமாக வந்தார்கள். அதைச் செய்யிறம் இதைச் செய்யிறம் எண்டு சொல்லிக்கொண்டு. ஆனால் உருப்படியாக எதையும் செய்வதாகத் தெரியவில்லை. நிறுவனங்கள் ஆரம்பத்தில் இருந்த வேகம் இப்போது இல்லை. ஆயிரம் படகைத்தருவோம். ஐநூறு வலையைத் தருவோம் எண்டு சொன்னார்கள். பின்னர் ஐநூறு படகுகளையும் இருநூறு வலைகளையும் தந்தார்கள். என்னென்று கேட்டால் யப்பானில் பூகம்பம். அதனால் இங்குவந்த உதவிகளில் கொஞ்சத்தை அங்கு அனுப்பிவிட்டோம்

**சுழியன்**

என்கிறார்கள். இதைவிட வழங்கப்படுகின்ற நிவாரணப் பொருட்களில் புழுவும் பூச்சிகளும் என எல்லாமே பிரச்சினைய ாகவுள்ளது. முதலில் நாங்கள் இடைத்தங்கல் முகாமைவிட்டு போகவேணும். ஆறு மாதம் என்று கூறினார்கள். ஆனால் அடுத்த வருடமும் இடைத்தங்கல் முகாமில்தான் வாழவேண்டும் என்ற நிலையில் உள்ளோம்.

மேலும் படகைத் தருவார்கள், வலையைத் தரமாட்டார்கள். வலையைத் தந்தால் வெளியிணைப்பு இயந்திரம் தரமாட்டார்கள். இந்த நிலையில் அனைத்தையும் இழந்து நிர்க்கதியில் நின்ற நாங்கள்தான் என்ன செய்வது.

மேலும் கூறப்போனால் எங்களின்பெயரால் பலர் சம்பாதிக்கிறார்கள். எனவேதான் பாதிக்கப்பட்டவர்கள் என்ற வகையில் நாம் கேட்டுக்கொள்வது என்னவெனில் எம்மை முதலில் நிரந்தர வீடுகளுக்கு அனுப்புங்கள் என்றுகவர்ச்சியான வார்த்தைகளை தருகிறார்கள், காலத்தைக் கடத்துகிறார்கள். வேறு எதனையும் ஒழுங்காகச் செய்வதாகத் தெரியவில்லை எனப் பாதிக்கப்பட்ட மக்கள் புலம்புகின்றனர்.

## 20. 01. 2005 தகவல்களின் படி

| இல | மாவட்டம் | சொத்தழிவின் பெறுமதி (மில்லியன் ரூபா) | இறந்தவர்களின் எண்ணிக்க | காயப்பட்டோரின் எண்ணிக்கை | காணாமல் போனோர் எண்ணிக்கை | ந.பு.நி. எண். | குடும்ப எண். | அங்கத்தவர்களின்எண். | சே.அ. வைத்தி. | சே.அ. பாடசாலை | சே.அ. வீடு முழு. | சே.அ. வீடு பகுதி. | சே.அ படகு. | சே.அ வீதிKm |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | அம்பாறை | 9238.50 | 9051 | 676 | 2207 | 74 | 33418 | 150893 | 29 | 40 | 17345 | 9818 | 1662 | 374.9 |
| 02 | மட்டகளப்பு | 10652.38 | 2836 | 2375 | 1027 | 47 | 19614 | 69138 | 08 | 14 | 13530 | 5941 | 3315 | 382.9 |
| 03 | யாழ்ப்பாணம் | 11531.00 | 1256 | 1647 | 1240 | 24 | 9885 | 37255 | 03 | 16 | 3708 | 1700 | 3600 | 169.8 |
| 04 | கிளிநொச்சி | 2826.00 | 28 | 670 | 01 | 02 | 407 | 1603 | 01 | - | 246 | - | 620 | 67.5 |
| 05 | முல்லைத்தீவு | 3670.30 | 1932 | 2590 | 1068 | 23 | 5484 | 21128 | 02 | 14 | 5033 | 424 | 1871 | 198.9 |
| 06 | திருகோணமலை | 7206.50 | 1076 | ? | 337 | 47 | 21187 | 97376 | 09 | 38 | 4830 | 3835 | 2630 | 207.9 |
| 07 | வவுனியா | - | - | - | - | 01 | 03 | 10 | - | - | - | - | - | 20.1 |
| 08 | மன்னார் | 350.00 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| | மொத்தம் | 40481.342 | 16179 | 7958 | 5880 | 218 | 89998 | 377403 | 52 | 122 | 44692 | 21718 | 13698 | 1422.0 km |




# படுநாசத்தை நோக்கி நகரும் சிங்களப் படைகள்

**குடாநாட்டு மக்கள் பொறுமையின் எல்லையைக் கடந்து உணர்வுக் கொந்தளிப்பின் சிகரத்திலே நிற்கிறார்கள். இதற்கு அவர்களது அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்டதல்ல காரணம். அதைவிடவும் கீழாக அவர்களது வாழ்வியல் கூறுகள் முடக்கப்பட்டிருப்பதே காரணம். அந்த முடக்கம் கடந்த நான்குவருட சமாதான முயற்சிகளையும் தாண்டி முடிவேதுமின்றித் தொடர்வதே காரணம். இந்தக் கொந்தளிப்பு அவர்களை வன்முறைப் பாதைக்குக் கொண்டுவந்திருக்கிறது.**

தலைக்குத்தானே இறுதியைத் தேடிக்கொண்டிருக்கிறது சிங்கள இராணுவம். யாழ். குடாநாட்டில் அது செய்துகொண்டிருக்கும் காரியங்கள் சந்தேகமேயில்லாமல் அதற்கான புற நிலைகளைத் தோற்றுவித்துக் கொண்டிருக்கின்றன. யாழ்ப்பாணச் சமூகம் கல்வியையே தனது மையப் புள்ளியாகக் கொண்டிருக்கிறது. இதனாலேதான் 1970 களின் ஆரம்பத்தில் கொண்டுவரப்பட்ட தரப்படுத்தல் முறைமை தமிழ் இளைஞர்களிடையே ஆயுதப் போர்வழிமீது நாட்டங் இகொள்ளவைத்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்பது ஒருவகையில் யாழ்ப்பாணச் சமூகத்தின் கொடுமுடி இலட்சியம். அந்தப் பல்கலைக்கழக சமூகமே ஒட்டுமொத்தமாக வீதியில்வைத்துத் தனிச்சிங்கள சிறிலங்கா இராணுவத்தால் தாக்கப்பட்டிருக்கிறது. இது கிளறிவிட்டிருக்கும் கொதிப்பு. யாழ்ப்பாணக் குடாநாட்டினுள் சிக்கிக்கொண்டிருக்கும் பத்தாயிரக்கணக்கான சிங்கள இராணுவத்தினருக்கு இறுதி விளைவிப்பதாக அமைய வல்லது.

தமிழ்ச்சமூகம் தனது பெண்களிலும் அவர்களது மான உணர்விலும் மிகுந்த அக்கறையும் கூருணர்வும் கொண்டது. இந்த மானவுணர்வு பங்கப்படுத்தப்படுவதும் அவர்களைக் கடுமையாகக் கிளர்ந்தெழ வைக்கவல்ல மற்றொரு அம்சமாகும்.

இந்த இரண்டு விடயங்களுமே யாழ்ப்பாணக் குடாநாட்டில் அடுத்தடுத்து நிகழ்ந்தேறியுள்ளன. இவற்றுக்கெதிராக மக்கள் தமது எதிர்ப்பைக், கொதிப்பை வெளிக்காட்ட முனையும் போது அந்த ஒன்று திரள்தல் சிங்கள இராணுவத்தால் பலப் பிரயோகம் மூலமாக ஒடுக்கப்படும்

**பு.சத்தியமூர்த்தி**

போது அது மேலும் மேலும் திரட்சியும் எழுச்சியும் கொள்ளுமேயன்றி அடங்கிப் போகமாட்டாது. அது தான் யாழ்ப்பாண சமூகத்தின் ஆன்மபலம். ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தினதும் மனோநிலையும் அதுவே. அடக்க நினைத்து மிதிக்கும் போது ஒவ்வொரு தடவையும் தமிழ்ச் சமூகம் பீறிட்டு எழுந்திருக்கிறதேயன்றி அடங்கிப்போனதில்லை.

ஆனால் இதனை சிங்கள தேசம் உணர்ந்துகொண்டதாகத் தெரியவில்லை. கேடுவரும் பின்னே, மதிகெட்டுவரும் முன்னே என்பார்கள். இதன்படியே நிகழ்வுகள் நடந்தேற வேண்டு மென விதிக்கப்பட்டுள்ளதோ என்னவோ சிங்கள தேசத்தினதும் அதனது படைத்துறையினதும் தலைமைகள் அந்தத் திசையிலேயே காய்களை நகர்த்தி வருகின்றன. எந்தவித தரைப் பாதையும் ஒடிவரவேண்டும். எது எப்படியோ பல பத்தாயிரம் இளம் சிங்கள உயிர்கள் ஆபத்தின் விளிம்பில் நிற்கின்றன என்பது மட்டும் உண்மை.

இது மிகைப்படுத்தப்பட்ட கூற்றா? நாற்பதினாயிரம் படையினரால் குடாநாட்டைக் கட்டிக்காக்க முடியாதா? இதற்கு தற்போதைய குடாநாட்டின் களநிலை யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளுதல் அவசியம்.

குடாநாட்டு மக்கள் பொறுமையின் எல்லையைக் கடந்து உணர்வுக் கொந்தளிப்பின் சிகரத்திலே நிற்கிறார்கள் இதற்கு அவர்களது அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்டதல்ல காரணம். அதைவிடவும் கீழாக அவர்களது வாழ்வியல் கூறுகள் முடக்கப்பட்டிருப்பதே காரணம். அந்த முடக்கம் கடந்த நான்குவருட சமாதான முயற்சிகளையும் தாண்டி முடிவேதுமின்றித் தொடர்வதே காரணம். இந்தக் கொந்தளிப்பு அவர்களை வன்முறைப் பாதைக்குக் கொண்டுவந்திருக்கிறது.

இப்போது குடாநாட்டிலே பல்லாயிரம் ஆயுதப் பயிற்சிபெற்ற சாமானியர்கள் இருக்கின்றார்கள். இவர்களில் பலர் தம்மை வெளிப்படையாகவே இனங்காட்டிக்கொள்ளவும் துணிந்திருக்கிறார்கள். மிகப்பலர் தம்மை வெளிப்படுத்தாமல் உள்ளனர். இந்தத்



தொகை 8000 வரையானதாக இருக்கலாமென சிறிலங்காவின் புலனாய்வு வட்டாரத்தகவல்களை மேற்கோள்காட்டும் சிங்கள ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒன்றுக்கு மேற்பட்ட கையெறி குண்டுகளும் இருப்பதாகவும் அதில் மேலும் கூறப்படுகின்றது.

இதைவிடவும் தமது துணைவேந்தர், பீடாதிபதி, விரிவுரையாளர்கள் உள்ளிட்ட தமது ஒட்டுமொத்தச் சமூகம்மீது 19 ஆம் திகதி காலை நடத்தப்பட்ட தாக்குதல்களுக்குப் பிறகு ஆயுதப்பயிற்சியைத் தமக்குத் தரவேண்டுமென யாழ். பல்கலைக்கழகத்தின் 500 மாணவர்கள் கோரியிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.


இது எங்கே போய் முடியப் போகிறது? சரத் பொன்சேகா தான் யாழ் மாவட்ட முன்னாள் இராணுவத்தளபதி என்ற கோதாவில் ஒரு கௌரவப் பிரச்சினையாகவே யாழ்ப்பாண விவகாரங்களைக் கையாள முனைகிறார். உணர்வுபூர்வமாகத் தீர்மானங்களை எடுக்க முனையும் போது அங்கு அறிவு பின்தள்ளப்படவோ புறக்கணிக்கப்படவோ நேர்ந்து விடுகிறது. அந்த வகையிலேயே சிங்களம் யாழ்ப்பாணத்தில் நடக்க முனைகிறது. நடந்து கொள்கிறது.

ஏற்கனவே, எமது மக்கள்



தாக்கப்பட்டால் பல மடங்கு இழப்பு சிங்கள இராணுவத்திற்கு ஏற்படும் என பொங்கியெழும் மக்கள் படை எச்சரிக்கை விடுத்துள்ள பின்னணியிலும்; கோண்டாவிலிலும் இருபாலையிலும் நடாத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதல்களை தாங்களே நடத்தியதாகவும் இந்தப்படை உரிமை கோரியுள்ள நிலையிலும் யாழ்ப்பாணத்தில் அடுத்து வரும் நாட்களில் நடக்கக் கூடியது என்ன ? என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது.

சிறிலங்கா இராணுவம் குடாநாட்டில் மிகப் பலவீனமான நிலையிலேயே உள்ளது. ஆனால் அதனது போரிடும் வலு ஏறக்குறைய முழுமையாகவே குடாநாட்டுக்குள் இப்போது முடக்கப்பட்டுள்ளது. ஒரு இனங்காணப்படாத,பெரும் மக்கள் திரளுக்குள் மறைந்து கரைந்திருக்கும் எதிரியுடன் இந்த மரபுவழிப்படையணிகள் மோதிச் சேதங்களை எதிர்கொள்ளத்







தொடங்குவதானது மிகப்பெரிய உளவுரண் நகர்வுக்குள் சிங்களப்படைகளைக் கொண்டுபோய்ச் சேர்க்கும்.

அப்போது விடுதலைப் புலிகள் யுத்தத்தைத் தொடங்குவார்களாயின் சிறிலங்காவின் ஒட்டுமொத்தப் படைக்கட்டமைப்பே படுநாசத்துக்காளாகக்கூடும். மீளமுடியாதளவுக்கு இந்தப் பேரழிவு இருக்கக்கூடும்.

தமது மக்கள் மீது அடுத்தடுத்தும், மனிதாபிமானமற்ற முறையிலும் சிங்களப்படைகள் தாக்குதல்களை நடாத்திக்கொண்டிருந்தால் புலிகள் வாளாவிருக்க முடியாத புறநிலை மக்கள் மத்தியிலிருந்து தோற்றுவிக்கப்பட்டுவிட்டது.

இந்த இடத்தில் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் தமது பங்களிப்பை காத்திரமாக நல்குதல் வேண்டும். அறுகங்குடாப்பகுதியில் சிறிலங்கா விமானப்படையின் MI 17 உலங்குவானூர்தி மீது சுடப்பட்டதாகச் சொல்லப்பட்ட சம்பவத்தில் காட்டிய தீவிரத்தையும், அது தொடர்பாக கருத்து வெளியிடும்போது காட்டிய உறுதிப்பாட்டையும், யாழ். பல்கலைக்கழக சமூகமும் புங்குடுதீவில் மக்களும் தாக்கப்பட்ட சம்பவங்கள் மீதும் கண்காணிப்புக்குழு காட்ட வேண்டும். இல்லையேல் அதுவும் இனிமேல் ஏற்படவுள்ள சர்வநாசத்தில் ஏதோ ஒரு வகையில் பங்கெடுத்துக்கொண்டதாகவே கருதப்படும்.





முன்னின்ற மைந்தர்களின் கதை

# தாய்நாட்டின் விடுதலைக்கு கொடையானவர்கள்



லெப்.ஜெய்சுதன்

## கப்டன் வேலவன், சண்முகராசா சபேசன், எஸ்.எல்.எஸ் கடை, இரத்தினபுரம், கிளிநொச்சி.

ஜெயசிக்குறு களம் விரிந்து விட்டகாலம் அது, ஒருவரை ஒருவர் காண்பதற்கு பேராசைப் படுவதுண்டு. காரணம் சண்டை உக்கிரமடைந்து விட்டதனால் ஒருவரைக் காண்பதோ அல்லது கதைப்பதோ சந்தேகத்துக் குரியதொன்றாக இருந்தது.

ஒரே காவலரணில் நின்று விழுப்புண்ணடைந்து செல்லும் சக அர்த்தம் நிறைந்த சொற்களை எழுதி வைத்திருந்தவன்தான் மாவீரன் வீரவேங்கை கப்டன் வேலவன்.

பதுமையிலும், பதுமை யானவன்; இயல்பான தனிஅமைதி இதழ் விரியா சிரிப்பிற்குச் சொந்தக்காரன் அந்த மாவீரன், எவருடனும் இலகுவில் கதைக்கமாட்டான். அவனுடன் கதைத்தவர்களை முடியாத காரணத்தினால் அழுத வாறே வீடுவந்து சேர்ந்திருக்கிறான். அன்றிலிருந்து அவனது நடவடிக்கையில் மாற்றம் இருப்பதை அவனது வீட்டுக்காரர் அவதானித்திருக்கிறார்கள்.

"ஏனம்மா இப்படியெல்லாம் சிங்களவர் செய்யுறாங்கள் என்று அடிக்கடி கேட்டவன், அதற்கான தீர்வைக்காணத் துடித்தான்.

மாவீரன் கப்டன் வேலவன் போராட்டத்தில் இணைவது என்று தீர்மானித்த போதே அவனுக்கு முன்பாக அவனது தம்பியான சுதாகரன்(மாவீரன் வீரவேங்கை ஜெயசுதன்) 1990இன் ஆரம்பத்தில் இணைந்து கொண்டான்.

இந்த நிகழ்வானது அவனது இலட்சிய உணர்விற்கு தற்காலிக தடையாக இருந்தது. அதை நினைத்து குழப்பமடைந்தவன், என்ன தான் நடந்தாலும் தான் போராட்டத்தில் இணைந்தே தீருவது என்ற உறுதியான நிலைக்கு வந்தவனாய் செயல்படத் தொடங்கினான்.

1990 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஓர் நாள் மதியம் அம்மாவும் அப்பாவும் இல்லாத நேரம் வழமைக்கு மாறாக தான் போட்டிருந்த காற்சட்டையையும், மேல் சட்டையையும் கழுவிப் போட்டவன் அவனது அக்கா கேள்வி கேட்டிருக்கிறார்.

ஏனடா காலமதானே போட்டனீ; ஏன் இப்ப கழுவினாய்? என்றதுக்கு;

சும்மா எனச் சாட்டிவிட்டு சிறிது நேரத்தில் அதையே எடுத்து உடுத்திக்கொண்டு இணைந்து தமிழீழ தாயக விடுதலைக்காக போராடி இந்த தேசத்தின் உயரிய சேவையினை ஒரே குடும்பத்திலிருந்து செய்ததை இலகுவில் இந்த தேசம் மறக்காது.

கிளிநொச்சி இரத்தினபுரம் எஸ்.எல்.எஸ் கடை என்ற இடத்தில் 1975ஆம் ஆண்டு 05ஆம் மாதம் 25 ஆம் திகதி பிறந்த வீரவேங்கை கப்டன் வேலவன் (சண்முகராசா சபேசன்) தனது இளம் வயதிலேயே போராட்ட உணர்வை தன்னகத்தே வளர்த்துக் கொண்டவனாய் 1990 ஆம் ஆண்டு போராட்டத்தில் இணைகிறான்.

அடிப்படை பயிற்சிமுகாமை முடித்து வெளியேறியவன் வன்னி மாவட்டப் படையணியில் இணைகிறான். ஒரு சில நாட்களே அப்படையணியில் இணைந்து செயற்பட்டவனுக்கு, புதிய அழைப்பொன்று ஆர்வத்தைத்தர, அங்கு செல்வதையே விரும்புகிறான்.

1991 ஆம் ஆண்டு தலைவரால் ஆரம்பிக்கப்பட்ட சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியில் தன்னை இணைத்துக்கொள்கிறான். அப்போது சாள்ஸ் அன்ரனி சிறப்பு படையணிக்கு கடுமையான பயிற்சி வழங்கப்பட்டது, இரவு பகலென நடந்த தொடர்பயிற்சியில் பங்கு பற்றி திறமைமிகுந்த போராளியாகினான்.

சாள்ஸ் அன்ரனி எதிர் கொண்ட முதலாவது சண்டையான வன்னிவிக்கிரம களத்தில் இறங்கி தனது அணியோடு திறமையாகச் செயற்படுகிறான். அடுத்தடுத்து வந்த எல்லாச்சண்டைகளுக்கும் செல்லும் வாய்ப்பையும் பெறுகிறான்.

பதுமையான அவன் எப்போதுமே நிதானமாக நடப்பான். சண்டையிலும் அப்படித்தான் எதிரிக்கு சந்தர்ப்பம் கொடுக்கக்கூடாது என்பதை தன் சக போராளிகளுக்கு சொல்லி அப்போதைய நிலைமையை சமாளிக்கும் ஆற்றல் அவனுக்கேயுரியது.

தனக்கென தரப்படும் கடமைகளில் கவனமுடன் செய்வதிலும், என்னகடினம் வந்தாலும் பரவாயில்லை அதை செய்து முடிப்பதிலேயே ஆர்வமாக இருப்பான்.

சில காலங்கள் மருத்துவ உதவி நிர்வாகியாக இருந்தான், அதன்போதெல்லாம் இடர்கள் நிறைந்த கிளாலி பாதையூடாக வன்னியிலிருந்து நோயாளர்களையும், விழுப்புண்ணடைந்தவர்களையும் யாழ். வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று,மீண்டும் வன்னிக்குக் கூட்டி வந்துவிடுவான்.

போராளிகளிடத்தில் மிகுந்த அன்புகொண்டவன். தனக்குத் தெரிந்த எல்லாப் போராளிகளையும்.தனது வீட்டிற்குக் கூட்டிச் சென்று, உணவு பரிமாறி,மகிழ்ச்சியடைவான்.

ஆனையிறவு காவலரணில் வேலை செய்துகொண்டிருந்த போது, எதிரியின் எறிகணை வீச்சிற்கு காப்பெடுக்கவென, ஓடிச்சென்று பக்கத்திலுள்ள ஓர்அரணில் வேலவனும் அவனது அணியிலுள்ள இரண்டு போராளிகளும் காப்பெடுத்தனர்.

*(21 ஆம் பக்கம் பார்க்க)*



தோழன் கையசைத்து விட்டு போவான்! அதே காவலரணில் வீரச்சாவடைபவனின் வித்துடலையாவது பார்க்கக்கிடைக்கும்.

ஆனால் பல வருடங்களாக ஒரே அணியில் இருந்து அந்தக் களத்தில் வேறு அணியிலோ, பக்கத்துக் காவலரணிலோ விழுப்புண்ணடையும், வீரச்சாவடையும் எந்தத் தோழனையும் காணமுடியாத சோக வாழ்வு தொடர்வதுண்டு. இப்படியான ஒரு நேரமதில், அந்த அற்புதமான போராளியை சந்தித்து அவனது குறிப்பேட்டை பார்க்கக்கிடைத்தது.

### —க.மிரேசு—

"எதிரிகள் தலை கொய்வதாலே, தமிழர் தலை நிமிரும்" என்ற தனது சொந்த எண்ண ஆழத்தை எழுதி இருந்தான்.

அந்தப் போராளி! எதிரிகள் என்று எழுதியிருந்தது இந்திய, இலங்கை ஆக்கிரமிப்புப் படைகளை மட்டுமல்ல, எமது தாயக விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கு சிங்கள அரசுக்கு உதவி செய்யும் அத்தனை நாடுகளையுமே குறித்து எழுதி இருந்தான்.

அவனது இன்னுமோர் வரிகள் இப்படி இருந்தது. இருநூறு வருடமாய் நாட்டிற்குப் போராடிய நீயா? எம்மையழிக்கத்துடிக்கும் துட்ட கைமுணுவின் வாரிசுக்கு! தும்பிக்கை நீட்டுவது!

எனப் பல வரிகளை, பல கவிதைகளை, பல ஆழமான

தொடர்ச்சி 21 ஆம் பக்கம்

# காரசாரம்

## நெருப்பாக மாற பெண்கள் எழவேண்டும்



பழையபடியும் ஒரு பெண் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளார். இந்த வரலாறு எழுதப்பட்டும் எழுதப்படாமலும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதிலும் இராணுவ வன்முறைகளுள் மிக மோச மானதாக உள்ளதும் இவ்வகையான வன்முறைகளே.

பெண்களுக்கெதிரான குடும்ப வன்முறைகளுக் கெதிரான வாரம் நடைமுறையிலுள்ள போது மனித உரிமைகள் தினம் கொண்டாடப்படும் மாதத்தில், சமாதானத்துக்கான அழைப்பை ஒருபக்கம் விட்டுக்கொண்டே அரசபடைகளின் இந்த அத்துமீறல் கொலைச் செய்தியொன்று வெளிவந்து விட்டது. அதாவது ஒன்று வெளிவந்து விட்டது. ஏனையவை அமுக்கப்பட்டு விடுகின்றன.

அண்மைக்காலங்களில் வெளிவந்தும் கூட, விளக் கமளிக்க முடியாமல் அநேகமான பெண்களின் கொலைகள் மூடிப் போடப்பட்டுள்ளன. சில வேளைகளில் கொலைகள் மட்டுமே நிலுவையில் நிற்க, பெண்ணுக்கு ஏற்பட்ட இழப்பு, மறைக்கப்பட்டுப் போகிறது. ஏதாவது நடந்திருக்குமோ? அதன் பிறகுதான் கொலை நடந்திருக்குமோ? என்ற சந்தேகம் அநே கருக்கு வந்தாலும், தமது குடும்பமானத்தையும் கொல்லப்பட்டுப் போனவளின் கௌரவத்தையும் பாதுகாப்பதும், போனதெல்லாம் போகட்டும் இனி செத்துப்போனவைகளைக் கிண்டிக்கிளறாமல், வெட்டிக் கொத்தாமல் நேரகாலத்துக்கு அடக்கம் பண்ணி காடாத்தி, எட்டுக்குப் படைச்சு அந்தியேட்டியும் செய்துவிட்டு ஒய்ந்திருக்கவே உற்றாரும் பெற்றாரும் விரும்புகின்றனர். செத்துப்போன ஆன்மாவுக்கு தமது கடமைகளை செய்து விட்டால் அவர்கள் கடமை முடிந்தது.

இன்னும் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு அதை மறைத்து வாழ்பவர்களும் கூட எதிராளியைத் தண்டிப்பதை விட தொடர்ந்தும் தமது புனிதத்தன்மையை?! பேணிக்கொள் கின்ற மனக்குகையுள் பதுங்கிவிடுகின்றனர். ஒரு சிலர் மன நோயாளர்களாகியும் விடுகின்றனர். அப்படியும் மீறி சிலர் சட் டத்தின் உதவியை நாடப் புகுந்தாலும் தம்மைப் பூரணமாக வெளிப்படுத்த முடியாமலும் விசாரணைகளில் கேட்கப்படும் கொச்சைத்தனமான கேள்விகளுக்கு விடையளிக்க முடியாமலும் திகைத்து வெட்கி ஒதுங்கிவிடுகின்றனர்.

இன்னும் பெண்களின் வழிகளில் குறுக்கிடுபவர்கள் அதிகாரம் மிக்கவர்களும் ஓரளவு செல்வம், செல்வாக்கு என்பவை உடையவர்களாகவோ, சமூகத்தில் நன்மதிப்புள்ள பெரியவர்களாகவோதான் இருக்கின்றனர். இவர்களிடம் நீதி கேட்கவேண்டிய பெண்களே மிக வறுமை, கல்வியறிவின்மை, போக்கிடமின்மை போன்றவற்றால் சூழப்பட்டுள்ளனர்.

இராணுவ வன்முறையென்பது இவையெல்லாவற் றையும் கடந்தது. தன்னால் வெல்ல முடியாத ஒரு எதிரியைப் பழிவாங்குவதாகவே இச் சம்பவங்கள் நடந்தேறுகின்றன. பாலியல் சார்ந்த இச்சையின் வெளிப்பாடாக இது நேர்வதில்லை. மிகவும் கோழைத்தனமான, மிலேச்சத்தனமான இச் செயல்களின் பின்னால் இராணுவத்தின் ஆற்றாமையே புலப்படுகிறது. தமக்கெதிராக நிற்கும் எதிரியை அவன் இனத்தைப் பழிவாங்குவதாகவே இதை அவன் செய்கிறான். இதைவிட குறித்த பெண்களின் நடவடிக்கைகளைப் பொறுத்து எதுவித சந்தேகமுமில்லை. அவர்கள் குடும்பத்துடன் அமைதியாக வாழ்ந்து வந்தவர்கள் என்பது பற்றிய கேள்விகளை எழுப்பி அதில் குளிர்காயும் ஆணாதிக்கவாதிகளும் இருக்கவே செய்கிறார்கள்.

இவை எல்லாவிதமான கொடூரங்களுக்கும் சிகரம் வைப்பது இப் பெண்கள் பற்றிய செய்திகள் தான். நீதி விசாரணைகளுக்கு முன்னதாகவே அவளது நிலைபற்றி பத்திரிகைகளும் வானொலி தொலைக்காட்சி ஊடகங்களும் பேசத் தொடங்கிவிடுகின்றன. சில ஆண்களால் மானபங்கம் அடைந்து மன உளைச்சலுக்கும் தீராத அவமான உணர்வுக்கும் இன்னதென விபரிக்க முடியாத அருவருப்புணர்வுக்கும் உள்ளாகிவிட்ட அவளும், அவளுடைய உறவினரும் குறிப்பாக தாய், தந்தை, கணவன், பிள்ளைகள், தலைகுனிந்து வாழவேண்டியதாகிறது.

முதலில் அந்தப் பெண்ணுக்கு ஏற்பட்ட விபத்து என்ற எண்ணமே கிடையாது. உயிருக்கு நிகரான எதுவோ ஒன்றை இழந்துவிட்டாள் என்பதுடன் அதற்கு ஈடாக மரணமே பொருளாகிறது. முதலில் இராணுவத்தாருடைய எண்ணத்துக்கு எண்ணையூற்றிப் பற்றவைப்பதே எமதுகுறிக்கோளாகிறதோ? சிலர் இதுபற்றி அலட்டிக்கொள்ளவே மாட்டார்கள். இராணுவம் என்றால் அப்படித்தான் என்பதற்கு உலகநாடுகள் முழுவதுமே உதாரணம் உண்டு. என்றாலும், இலங்கை இராணுவத்துக்கு இதுவகையில் பரந்த அனுபவமும், அதற்குமேலாக நீண்டகுறைவற்ற அரச ஆதரவும் உண்டு.

இதுவரையில் கிருசாந்தியினதும் அவளது சகோதரன், தாய் ஆகியோரதும் கொலைக்கான விசாரணை மட்டுமே தீர்ப்பு வரை சென்றது. அதுவும் கூட இன்னும் தண்டனை நிறைவேற்றப்படவில்லை என்பது நினைவிற் கொள்ளவேண்டிய விடயம்.

மன்னார் மாவட்டத்தில் இதேபோன்று பாதிக்கப் பட்ட இரண்டு பெண்கள் இலங்கைப்படைகளின் செயல்களை அம்பலப்படுத்தியதை அடுத்து அவர்களது பிரச்சினை அரசியல்மயப்படுத்தப்பட்டு பரந்த அளவில் பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள் மனுக்கையளிப்புகள் எல்லாமே நடந்தன. இன்று அப்பெண்களின் நிலை என்ன? அதுபற்றி யாருக்காவது தெரியுமா? அல்லைப்பிட்டி, கோப்பாய், புங்குடுதீவு இன்னும் மட்டக்களப்பு என எத்தனையோ. இடங்களில் நடந்த சம்பவங்களின் பின்னணியில் அந்தப் பெண்களின் குடும்பங்களை மனிதியாகக் குதறி எறியப்பட்டுள்ளனர்.

"பனையால விழுந்தவனை மாடேறி மிதித்தது போல பாதிக்கப்பட்டு உயிர்தப்பியோர் சமுதாயத்தை விட்டு ஓடிவிட வேண்டியுள்ளது" பாதிக்கப்பட்டு இறந்துபோனவளின் குடும்பமும் இதே கதிக்குள்ளாகிறது. மீண்டும் மீண்டும் எம்மண்ணில் எதிரி நிலைகொண்டிருக்கும் வரை இந்த நிலை மாறப்போவதுமில்லை.

செய்வதையும் செய்துவிட்டு கேட்கப்போனவர்களை அடித்துக் கொல்லுமளவுக்கு இலங்கை ராணுவத்தின் செயல் அமைந்துள்ளது. அதுவும் தனித்தமிழர் வாழும் யாழ்ப்பாணத்திலேயே நடந்துள்ளது. ஒட்டுமொத்தமாகப் பார்த்தாலும் மக்கள் தொகையைவிட ராணுவத்தினரின் தொகை மிகக்குறைவு.மக்கள் எழுச்சியின் காரணமாக திகைத்துப் போயிருக்கும் நிலையில்-போக்கிலித்தனமான செய்கைகளால் எங்களைச் சீண்டி விட்டுடிக்கொண்டிருப்பதை நாம் ஏன் இன்னும் பொறுமையாக வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

**-மாயா-**

மக்கள் எழுச்சி என்ற பெயரில் இளைஞர்கள் வெளியேறி பொங்கியெழும்மக்கள் படையாக மாறியிருப்பது ஒரு நல்ல சகுனமாகும். எனினும் இன்னும் ஏராளமான இளைஞர்கள் சாதிச்சண்டை, பதவிச்சண்டை, சங்கங்களின் நிர்வாகத்தில் சண்டை என எம்மைத் தாழ்த்திக்கொண்டிருக் கிறோமே. நாங்கள் புலிகளாகப் பொங்கி எழுந்தபோது ஒரு மாபெரும் சக்தியாக மாறியது உலகுகண்ட உண்மை. பெண்களுக்கு நேரும் அவமானங்களைப் பெண்களே களைய வேண்டும். எப்போதும் ஆண்களின் முதுகுகளின் பின்னால் நிற்கக் கூடாது. எமக்கெதிராக இழைக்கப்படும் கொடு மைகளைக் களைந்தெறிய மக்கள் படை போதாது. மகளிர் படை தோன்றியாக வேண்டும். கைதொட்டால் வெடிக்கவும் கண்பட்டால் துடிக்கவும்,நெருப்பாக மாறப் பெண்கள் எழவேண்டும். வெறுமனே அலங்காரப் பதுமைகளாக நீங்கள் பூச்சுக்கள் பூசி அலங்கரிக்க நகமும், பொரித்ததை மெல்லவுமா பற்கள். நகங்களைப் புலிநகங்களாகவும்,பற்களை கோரப்பற்களாகவும் மாற்றிவிடுங்கள். காளியாகவும்-கூழியாகவும் மாறினால் கொற்றவை நீங்களே.



## விசுவிசுக் விசாலாச்சி

எடட...ச்ச..ச்சு என்ன கரைச்சலடாப்பா. உவள் பறுவதத்தின்ர கோழி வேலிக்கால புட்டுக்கொண்டு வருது. கோழியின்ர கதைய நினைச்சாப் போலதான் எனக்கு இன்னொண்டு நினைவுக்கு வருதடாப்பா. தமிழற்ற இடமெல்லாம் ஆக்கிரமிச்ச சிங்களக் குடியேற்றங்கள் இருக்கே அதில பாதி எல்லாரும் அறிய மேளதாளத்தோட நடந்த கலியாணம் போல பகிரங்கமா நடந்தது. பின்ன மேளதாளமில்லாம ரகசியமாக் காதுங்காதும் வச்சமாதிரி நடக்கிற கலியாணமும் இருக்குத்தானே. இதுபோல காதுங்காதும் வச்சமாரி குடியேறின மனலாறு,கோமரசங்கடவலி எண்டு இப்ப சொல்லுற குமரேசன் கடவை. பெரிய விளாங்குளம் எண்டு நிறையக்கிடக்கடா! இந்தக் குடியேற்றக்காறரைக் கொண்டு வந்து காணி குடுக்கவெண்டு தமிழ்க்கச்சேரியள்ள. சிங்கள ஜீயேமாரை வச்சும் மாளாம அன்ராசபுரக் கச்சேரிய இந்த விளையாட்டுக்களுக்கான மைதான மாயும் பயன்படுத்தினது உந்த சிறிலங்கா அரசு.


சிங்களக் குடியேற்றமெல்லாம் ஒருபக்கம் நடந்தாலும் தமிழற்ற எல்லைக் கிராமங்களக் காப்பாத்த வேணுமெண்ட எண்ணம் வந்தது. அடங்காத் தமிழன் சி. கந்தரலிங்கம் இருந்தாரே. அப்ப அப்பதான்ரா நாட்டில பயங்கரக் கொலையள் படுகொலையள் நடந்தது. இதை இண்டைக்கும் ,இனப்படுகொலை எண்டு சொல்லுறியள். அம்பத் தெட்டில நடந்ததெல்லாம் இனப்படுகொலை "வல்லானை வலியான கேட்டா வலியானைத் தெங்வங்கேக்குமெண்டு சொல்லுவினம். அதேபோல உந்தப்படுகொலையளுக்கும் பின்னால தங்களத் தாங்களே அழிச்ச கதையும் ஜே.வீ.பீக் காறற்ற ஆயுதப் போராட்டத்த மடக்க அரசாங்கம் பாவிச்சதுதான்.இது கிடக்க உந்தக் கள்ளக் குடியேற்றங் களை முடிச்சுவைக்க எல்லைக்காவலன் எண்டு அந்த நாளைல கூப்புடுற கருங்காலி சிவசிதம்பரத்தார் கொஞ்சக் குடியேற்றங்கள நடத்தினார். எப்பிடி மாவட்ட ஒதுக்கீட்டில தனக்கே தனக்கெண்டு ஒரு குளம். அந்த குளக்கட்டில நிண்டு பாத்தா கண்ணுக்கெட்டின தூரம்வரை பச்சப்பசேலெண்டு வயலடா. பின்ன. காட்டுருக்க பயிர்செய்ய வெளிக் கிட்டா முறுகசாதியள்விடுதே. காட்டானையெண்டும். பண்டியெண்டும் வந்து வயலை அழிச்சுப்போட்டுதுகள். அதோட உவளவு வயல்லயும் வேலை செய்யக் கூலியும் வேணுமே. அப்ப.. அம்பத்தெட்டில அடிபட்டு வந்த சனத்துக்கு குடும்பத்துக்கு அரையேக்கர் எண்டு குடுத்து குடியேத்தி... ஆரை மலைநாட்டில எத்துப்பட்டு வந்த ஏழைச்சனத்தை குடியேத்தினார். எங்க...? தன்ர வயலச்சுத்தி குளத்து வானை அண்டி காட்டுக்கும் வயலுக்குமிடையில. அப்ப மன்னார் றோட்டில மடுச்சந்தியில சிங்களச்சனம் நசுக்கிடாமக் குடியேறி பள்ளிக்கூடம். விகாரை. கடை கண்ணியள் எண்டிருக்கினம். இப்ப இந்தச் சனங் குடியேறின எது மலைநாட்டுச்சனங்கள் குடியேறின இடமெல்லாஞ் சிங்களவர் குறிவைச்ச இடந்தான். இதின்ர அடுத்த கட்டம் வாரிக்குட்டியுரை அண்டி கல்லாறு குடியேற்றம். இதுகும் மலைநாட்டுத் தமிழர்தான்.

ஓண்டும் சும்மாயில்ல. இவை ஒரு கல்லில ரெண்டு மாங்காய் விழுத்தின பணப்பேயள். எது ஓண்டு சேனைக்கு வேலையாள் மற்றது காட்டுக்கும் வயலுக்கும் இடையில முறுகசாதியள் இவையக் கடந்துதான் வயலுக்கு வரவேணும். சிங்களக் காடையர் புந்துடிச்சாலும் முதலடி இதுகளுக்கு இஞ்ச குழறிக்கேக்க மேற்படியார் தப்பிருவினம்.

இதே பிளானில தான் ஆசிகுளத்தில இருவத்தைஞ்சு வரியத்துக்கு மேலயா வீ சீ தலைவர். கிராமச்சங்கத் தலைவர். கோயில் தலைவர். பிறப்பு இறப்புத் திருமண பதிவாளர் இன்னும் பல தசாவதாரங்களுக்குச் சமகாலத்தில எடுத்த சிதம்பரப்பிள்ளையார் தன்ரபேர் விளங்க உருவாக் கினது சிதம்பரபுரம். மகாமயிலங் குளத்தையடக்கிய எல்லையாக எல்லப்பர் மருதன் குளம். துடரிக்குளம். சமளங்குளம் முருகனூர் படிவெட்டின கல் (கல்வாரி) எல்லாம் இப்ப இடம்பெயர்ந்து வவுனியா வுக்குள் போனது தழிழருக்கும். அங்கேயே இருந்த புளொட் இயக்க தொண்டர்மார் அவையட போராளியள் ஆதரவாளர் ஆகியோருக்கும் பகிர்ந்து குடுத்து வீதிகள் மாதிரிப் பாடசாலை. முன்பள்ளி எண்டு பல வேலையளை இப்ப நடத்தினது பாருக். இவர் மிகவும் வறிய குடும்பத்தில் திருமணஞ் செய்தவர் என்பதை விட நிறைய வாக்காளர் களைக்கொண்ட குடும்பங்களின்ர உறவினர் ஆனவர்.


முன்னர் நான் குறிப்பிட்ட எம்.பி கருங்காலி சிவசிதம்பரத்தின் வீட்டுக்குள் பகிரங்கமாகவே அரச படைகள் புகுந்து இரண்டுபேரைச் சுட்டு பண்ணைக்க போட்டாங்கள்-மயிலங்குளம் எல்லைக்க காணிவெட்டின மனியத்தாரை ராராவா சிங்களக்காடையர் புந்து வெட்டிக்கொண்டாங்கள்.

ஆசிகுளம் சிதம்பரப்பிள்ளையாரையும். பிள்ளையளையும். சிதம்பரபுரத்தில குடியேறின மலையகத்தமிழ்ச்சனத்தையும் சிங்கள காடையரும். மாறுவேடத்தில வந்த சிங்களப் படையுமா வெட்டியுஞ் சுட்டும் உயிரோட வைக்கற் போருக்க போட்டுக்கொன்றாங்கள். இப்ப அதெல்லாத்துக்கும் சிகரம் வச்சாப்போல ஈறப் பெரிய குளத்து அலகரை யிலயிருந்து அலகல்லதீருகம. மமிலங்குளமெண்டு சனத்த தமிழ்ச்சனத்த இருத்தினவனுக்கு கோவக்காறர் ஆர். எங்கட பொடியள எல்லாத்துக் கும் சாட்டுறது சுகமான வேலை. ஆட்காட்டி விரலை நீட்டி பொடிய ளக் காட்டிறியளே மற்ற மூண்டு விரலும் உங்களத்தானே காட்டுது. ங. வேண்டாத மாமியார் கைபட்டாலும் குத்தம் கால்பட்டாலும் குத்தம். வந்திட்டினம் கதைக்க.



சிறுகதை

# கூட்டிழந்த கதவு



வானம் செக்கச்சிவந்த ஆடையை உடுத்தி ஆதவனை அலங்கரித்து அழகுபடுத்தும் நேரத்தைக் கண்கொட்டாமல் பார்த்து ரசித்துக்கொண்டிருந்தேன்.

"ஏய்..... உள்ளுக்கை வாடி..."

வெளியே எட்டி எட்டிப்பார்த்து விழி பிதுங்கி முகம் வெளிறி மனிதமற்ற ஜடமாய் நான் இருந்தேன்.

"பிள்ளை பொழுது படுகுது. செக்கல் நேரம் ஏன் அங்கை நிக்கிறா... உள்ளுக்கை வா" பாட்டியின் அக்கறையான அழைப்பு. கூடவே அம்மாவின், பெரியம்மாவின், சித்தியின் அதட்டல்.

கூட்டுக்குடும்பமாய் வாழ்ந்ததனால் எல்லோருடைய கவனமும் என்மீது தான். அப்பொழுது எனது மனம் அவர்களைப் பற்றி உயர்வாக எண்ணவைக்கும். எவ்வளவு உண்மையான பாசம் என்னில், என் ஊடாட்டங்களில் எத்தனை கயிற்று முடிச்சு. நினைச்சுப் பெருமிதப்படுவன்.

பாடசாலை போகும் போதும், திரும்பி வரும்போதும் என் அருகில் பாட்டியோ, அப்பாவோ கட்டாயம் வருவார்கள்.

"இந்தக் காலத்தில பெண் பிரசுகள் தனியாப் போனால் காணுமே. எத்தினை ஆம்பிளையள் எறும்பு மொய்ச்சமாரி திரிவாங்கள்"

இது பாட்டியின் தின அர்ச்சனை. கொஞ்சம் நிமிர்ந்து, அக்கம் பக்கம் பார்த்து வீடுகள் வாசல்களை, தோட்டம் துரவுகளை, கடை கண்ணிகளை ஆசையாகப் பார்க்கேலாது.

"சுபா..... என்னடி..... நிமிர்ந்து நிமிர்ந்து நெளிச்சு நெளிச்சு நடக்கிறா..... ஆற்றை பரவணியோ தெரியாது. கீழே பார்த்து நட...."

நான் சுவிச் போட்டு ஆடும் பாவைப் பிள்ளைபோல உடனும் கீழே பார்த்து நடப்பேன். இது நான் பருவமடைந்த காலம் தொடக்கம் நடந்து வரும் நிகழ்ச்சித் தொடர். எனக்கு இதெல்லாம் நல்ல அத்துப்படி.

இரவில் தனியே எழும்பிப்போகப் பயம் எனக்கு. எங்கு பார்த்தாலும் கறுத்த உருவம். தலையை ஆட்டி ஆட்டி என்னைக் கூப்பிடுவது போல இருக்கும். பொழுதுபட்டால் எனக்கு ஆராவது துணை இருக்கவேண்டும். இல்லையென்றால் எனக்கு வயிற்றைக் கலக்கும்.

மின்மினிப் பூச்சிகள் என் அருகில் வந்தால் எனக்கு சர்வ உடலும் உதறல் எடுக்கும். கைகள் வெடவெடக்கும். நெஞ்சு படக்படக்கென்று அடிக்கும்.

பாட்டி சொன்ன "கொள்ளி வால்பேய்" தான் என்று பயத்தில் கத்துவேன்.

"ஏன் பிள்ளை கத்துறாய்...."

அப்பா வந்து சுற்றும்முற்றும் பார்ப்பார். நான் வெருண்டு வெருண்டு கத்துவேன்... அப்பாவுக்கு விளங்கிவிடும். ஆனாலும் என்னை... " ஏன் நீ வெளியால வந்தனி. பொம்பிளைப் பிள்ளையள் இரவுகளில வெளிய வரலாமே...!!

"ஓம்...ஓம்...அங்கை முன் வீட்டில பொம்பர் அடிச்சு ஒரே நாளில் எட்டுப்பேர் செத்த ஆவியள் திரியும். கன்னிப் பொம்பிளையளைக் கண்டா கெதியாய் தொத்திவிடும்...."

இது பெரியம்மா சொல்லும் புதுச்சங்கதி. எனக்கும்அதுதான் உண்மையாகிவிட்டது.

ஏனெனில் என் கண்களால் பார்த்த கோரச் சாவுதானே. உண்மையில்லாமல் இருக்குமே... என்னை வெளியுலகம் தெரியாமல், பக்கத்து வீட்டில் என்ன நடக்குதென்று தெரியாமல் வளர்த்து தாங்கள் நல்ல பெயர் வாங்கிவிட்டார்கள். எங்களுடைய சொந்த பந்தங்கள் எல்லோரும்...

"முத்தையற்ரை குடும்பம் தான் இந்த ஊரில நல்ல மரியாதையான குடும்பம். அடுத்தவீட்டுக்குத் தெரியாமல் என்ன மாதிரி பொம்பிளையள் வளருதுகள். நல்ல பண்பான குடும்பம்..."

நான் அடிக்கடி கேட்கும் பாராட்டு மொழிப்பத்திரம். எனது சிந்தனை சிறகடித்துப் பறக்கும்.

பள்ளிக்கூடத்தில எனது நண்பிகள் கதைப்புத்தகங்கள் வாசிப்பார்கள். அவர்கள் நல்ல கதை என்றால் எனக்கும் புத்தகத்தை தருவார்கள். ஒருநாள் வீட்டிற்குக் கொண்டு வந்து வாசித்தேன்.

சித்தி வந்தாள். பார்த்தாள். பெரியம்மாவுக்குச் சொன்னாள். அம்மா மணிமொழி வேகமாக ஓடிவந்தா.ஏதோ கள்ளனைப் பிடிப்பது போல. அவ வந்தவேகத்தைப் பார்த்து அப்படியே மலைத்துப் போனேன்.

புத்தகத்தைப் பறித்து எறிந்தா. "கண்ட... கண்ட புத்தகம் வாசிக்கவே பள்ளிக்குப் போறனி... உதை வாசிச்சுக் கெடப்போறாய். இனி உன்னை பள்ளிக்குவிட்டால் தானே..."

அம்மாவின் அனல் கக்கும் வார்த்தைகள் என்னைச் சுட்டுவிட்டன.

ஒரு நாள் மீசாலையில் இருக்கும் சுந்தரம் மாமாவிடம் போவதற்கு நான் அம்மா, அப்பா, சைக்கிளில் சென்றோம். சைக்கிளின் ரயர் காற்று அடிக்கடி போய்க்கொண்டிருந்தது. ஒட்டி ஒட்டுப் போனோம்.

குன்றும் குழியுமாய் இருந்த வீதியில் குலுங்கிக் குலுங்கிப் பயணித்தோம். செம்மணிப் பாதையால் சென்றுகொண்டிருந்தோம். நேரம் 6.00 மணி.

அப்பா வேகமாய் சைக்கிளைச் செலுத்தினார். "கெதியாய் போங்கோ... சுடலை வருகுது... குமர்ப் பெட்டையையும் கொண்டு வாறம்... உப்பிடி ஆமை பேல போனால் சரியே..."

"சும்மா இரு. நீங்கள் நோகாமல் இருந்துகொண்டு எனக்கு ஏசிக்கொண்டிருக்கிறியள்... நான் என்ன செய்ய... சைக்கிளும் ஓடாதாம்..."

"என்னப்பா... சைக்கிள் ஓடாதாமோ... எனக்கு பயமாக் கிடக்கு..."

"சும்மா...பயப்பிடாதைங்கோ... தேவாரம் படிச்சுக்கொண்டு வாங்கோ..."

அம்மா தான் நல்ல சத்தமாக பஞ்ச புராணத்தை ஓதிக்கொண்டு வந்தாள். நான் மூச்சுப் பேச்சு இன்றி கைகள் வெடுவெடுக்க இருந்தேன். "மூன்று பேரையும் பேய் அடிச்சுப் போட்டால் எங்கள யார் காப்பாத்தப் போயினம்..." என்ற சிந்தனை எனக்கு ஓட நான் பயத்தில் அழ ஆரம்பித்தேன்.

அம்மா "ஐயோ... பிள்ளை பயப்படுகுது... கெதியாப் போங்கே..." அம்மா வாயால் வேகப்படுத்தினா.

குனிஞ்சு குனிஞ்சு, வலிச்சு வலிச்சு அப்பா பெடலை மிதித்தார். அம்மா துப்பிக்கொண்டு வந்தா. கூடவே அப்பாவும் காறித்துப்பிக்கொண்டு வந்தார்.

நான் மனதால் முருகனை வேண்டிக்கொண்டேன். அப்பாடி ஒரு மாதிரி செம்மணிச் சுடலை தாண்டி வெளிக்கு வந்துவிட்டோம். "கடவுளே... பிள்ளையாரே... ஒருமாதிரி இஞ்சால வந்திட்டம்... கட்டாயம் இந்த வெள்ளிக்கிழமை மோதகப் பூசை அவிக்க வேணும்.." அம்மாவின் சந்தோசமான பிரார்த்தனை.

மீசாலை வந்து விட்டோம்... அன்று எனக்கு செத்தல் மிளகாயை என் உடம்பு முழுவதும் சுற்றி எடுத்து மூன்று தரம் எச்சில் துப்பி, அடுப்புக்குள் வேகவைத்த இரும்புத் துண்டொன்றை எனக்கு முன்னாலுள்ள நீர்ப்பானைக்குள் இட்டு உடல் முழுவதும் கழுவினாள் அம்மா. அன்றுதான் நிம்மதியான நித்திரை.

ஓரிரு வாரத்தில் புலிப் பாய்ச்சல் நடவடிக்கை ஆரம்பித்தது. பெருந்தொகையான எறிகணை வீச்சுக்கள் அயல் வீடுகள் பார்த்திருக்கப் பஞ்சாய்ப் பறந்தன. இராணுவம் மக்களை அழிக்க வெளிக்கிட்டுது. விடுதலைப் புலிகள் மக்களைக் காப்பாற்ற எல்லோரையும் வலிகாமத்தை விட்டு தென்மராட்சி வன்னிக்குச் செல்ல ஒலிபெருக்கி மூலம் அன்பாக வேண்டினார்கள்.

எங்கள் குடும்பம் பதறியது. எல்லோரும் கூடிக்கதைத்து மூட்டை முடிச்சுக்களை கட்டி முடித்தோம்.

"குறுக்காலை போவார் செல்லடிச்சு வாறாங்கள். நாங்க இஞ்சை நிண்டா சிதறிப் போவம். கெதியா எங்கையெண்டாலும் போற அலுவலைப் பாருங்கோ.கவனம்... பிள்ளை சுபா.. நான் இஞ்சை வீட்டைப் பார்த்துக்கொண்டு நிக்கிறன்..."பாட்டி கத்தினாள்.

"ஒருதரும் இஞ்சை நிக்கேலாது. மழை போல ஷெல் வருகுது நிக்கப் போறாவாம் தான்... வெளிக்கிடணை..." அப்பா பதறினார்.பட்டியில் மாடுகளைக் கட்டினார். ஆடுகளையும் கட்டிவிட்டார். கோழிகளைக் கூட்டில் அடைத்தார். பிறகு யோசித்துவிட்டு அவிழ்த்துவிட்டார். மாட்டு வண்டியில் சாமானை ஏற்றினார். அம்மா அலுமாரிக்குள் இருந்த உடுப்புக்களை எடுத்து உரபாய்க்குக்குள் அமத்தி வைத்தாள். குசினிச்சாமான்,பானை, கேத்தில்... அரிசி,மா,சீனி...எல்லாம்.

நான் எனது பள்ளிக்கூட பாய்க்கை மட்டும் தூக்கினேன். மக்களின் ஆரவாரம். இரவு ஆறுமணி. அலைபோல் அடித்த மக்களிடையே "ஷெல்" கூவி வந்த சத்தம் திடுக்கிட வைத்தது.

பழக்கப்பட்டுப்போன பங்கருக்குள் நான் ஓடினேன். அங்கே என் வீடு.. என் சாமான் சிந்திக்கவில்லை.பங்கருக்குள் எனக்கு மேல் பக்கத்து வீட்டு அண்ணாமார். இன்னும் யார்... யாரோ...

"என்ரை அம்மா எங்கை..."

"அவை எப்படியும் எங்கையாவது பதுங்கித் தப்பியிருப்பினம். பயப்பிடாதைங்கோ" பங்கருக்குள் இருந்தவர்களின் கத்தல் மெல்ல எட்டிப் பார்த்தேன்.

வெளியே எல்லாம் தரை மட்டம்...

"அப்பா எங்கை ... அம்மா எங்கை ...."வெளியில் ஏறி வந்தேன். என்னுடைய குரலைக் கேட்க இங்கு யாருமில்லை.

மீண்டும் ஷெல் கூவி வந்தது. நான் குப்புற விழுந்தேன்....

பங்கர்... அங்கே என்னோடு இருந்தவர்கள்... எல்லாமே இரத்தக் குவியல்... நான் மட்டும் எஞ்சினேன். அந்த கார இருளில்...

இப்போ எனக்கு மின்மினியும், இருண்ட வானமும், அந்த கார இருளும்... எல்லாம் என்னில் என் கையில்... என்னைப் பயப்படுத்திய வாய்கள்... கட்டிய கயிறுகள்... இல்லை... எங்களைக் குதறிய இராணுவப் பிசாசுகளைத் தேடி விரைந்தன அன்று எனது கால்கள்.



# சலனம்...

சி. சதாசிவம்பிள்ளை

கமலினி மண்வெட்டியை தூக்கி மூசிமூசி வெட்டினாள். மிக ஆழமாக வேரூண்டிய வடலிகளை அலவாங்கால் குத்தி எடுத்து இழுத்து வெளியில் போட்டாள். கமலினியோடு இன்னும் மூன்று பெண்கள் வடலி பிடுங்கிக்கொண்டிருந்தார்கள். மிக கஷ்டமான வேலை தான். காசு கஷ்டத்தை மறக்கச் செய்ததோ என்னவோ.

தென்மராட்சி மக்கள் இடம்பெயர்ந்து சிதறுண்டு சீரழிந்து எங்கெல்லாமோ சென்றார்கள். உயிர் பிழைத்தால் போதும் என்ற ஒரே எண்ணத்துடன் ஓடினார் கள்; அழுதார்கள்; அலைந்தார்கள்; அல்லற்பட்டார்கள். மரணித்தவர்களும் உண்டு. மனத்திடத்துடன் விடிவு வரும கொடுமைக்கு முடிவு வரும் என வாழ்ந்தவர்கள் பலர்.

இப்படி இடம்பெயர்ந்த அந்த நாட்களில் விழுந்த பனம் பழங்களை யாருமே தேடவில்லை; தேட முடியாத நிலை. அந்தப் பனம் பழங்கள் எல்லாம் விழுந்து விதையாகி முளைத்து வடலிகளாகி உட்புக முடியாத சிறு கூடல்களாகி நின்றதால் சில இடங்களில் வடலிகளைப் பிடுங்கினார்கள். பிடுங்குவது கவலைதான். வேறு வழியில்லையே. அளவாக விட்டு மிகுதி வடலிக ளை பிடுங்கிக்கொண்டிருந்தார்கள்.

கமலினி முப்பது வயதிருக்கலாம். மூன்று பிள்ளைகளின் தாய். ஒட்டி உலர்ந்த கொஞ்சம் நெடிய உருவம். சிரிப்பு மாறாத முகம். சாயம் போன பழைய நீண்ட சட்டை. தலைக்குப் பொலித்தீன் பையை கட்டி அதற்கு மேல் ஒரு தொப்பி சிரித்தால் பற்கள் இருக்கின்ற னவோ இல்லையோ என்று சொல்ல முடியாத காவிப் பற்கள். ஏனடி எந்த நேரமும் வெற்றிலை போடுகிறாய் என்று யாராவது கேட்டால் வெற்றிலை போட்டால் பசி தெரியாதம்மா என்று கவலையின்றி சொல்லிவிடுவாள். அவளுடைய பத்து வயது மகன் சின்ன அலவாங்கும் மண்வெட்டியும் எடுத்துக்கொண்டு சிறிய சிறிய வடலிகளை பிடுங்கிப் போட்டுக்கொண்டிருந்தான். அவனுடைய நோக்கம் ஆசையெல்லாம் பக்கெற்றுகளில் அடைத்து பாட்டாக் கடைகளில் தொங்கும் அந்த டிப்பி டிப்பியோ என்னவோ ஒன்று கொழும்புப் பகுதியில் இருந்து வந்து நம்மூர்க் கடைகளில் இறுமாப்புடன் தொங்கிக்கொண்டிருக்கும் அந்தப் பக்கற்றுக்கள் சிறுவர் சிறுமியரின் கனவு ஆசை எல்லாம். நித்யன் அது தான் கமலினியின் மூத்த பையன் இன்று எப்படியும் மூன்று பக்கற்றுகள் வாங்க வேண்டும். தங்கைக்கும் தம்பிக்கும் கொடுக்க வேண்டும் என்ற ஆசை.

ஏழு எட்டு நாட்களாக ஓயாது பெய்த மழை அன்று சிறிதளவு குறைந்துமிருந்தது. அதனால்தான் வடலி பிடுங்க ஆரம்பித்தார்கள். உடையெல்லாம் நனைந்து உடலெல்லாம் நனைந்தாலும் அவர்கள் ஏதோ யந்திர கதியில் வேலை செய்துகொண்டிருந்தார்கள். களைத்துப் போன நித்யன் கொஞ்சம் ஓய்வாக நிமிர்ந்து அம்மா நேற்று மிளாழைக் குளத்தடியில் முகிலோடு வந்து மீன்கள் விழுந்ததாம் பெடியள் சொன்னாங்கள். உண்மையா அம்மா என்று கேட்டான். கமலினி சிரித் தாள். யாருக்கு தெரியுமடா சில வேளை விழுந்தி ருக்கும். நீ உன்ர ரீச்சரிடம் கேட்டுப்பார் என்றவள் மறு படியும் வேலையில் ஈடுபட்டாள். கமலினி வேலியோரம் வடலி பிடுங்கிக்கொண்டிருந்தாள். வேலிக்கு வெளிப்பக்கம் இருக்கும் வளவுக்குள் வீடு கட்டிக் கொண்டிருப்பவர் கொஞ்சம் பணக்காரன். அவர் வேலிய ருகில் வந்து நின்று என்ன கமலி நாட்கூலியா வடலிக் கணக்கா என்றார் சிரிப்புடன். கமலினி நிமிர்ந்து என் னவோ தெரியாது அங்கே நிக்குதுகள் அதுகள் தான் கூட்டிட்டு வந்துதுகள். என்று கூறியதும் இல்லை வடலிக் கணக்கென்றால் ஒரு வடலி பிடுங்க மூன்று ரூபா. அப்படி என்றால் மளமளவென்று பிடுங்கத்தான் வேண்டும். இல்லையென்றால் ஏனிப்பிடி அவதிப்பட்டு பிடுங்குகிறீர்கள். காணிக்காரன் என்ன காசில்லாதவனா என்றார். அவள் எதுவும் பேசாமல் நிற்கவே அவர் முகத்தை தொங்கப் போட்டுக்கொண்டு போய்விட்டார்.

கமலினியின் கணவன் ரொம்ப நல்லவன். நல்ல உழைப்பாளி. சோம்பிக்கிடக்கமாட்டான். விறகு வெட்டி சைக்கிளில் கட்டிக்கொண்டு போய் யாழ்ப்பாணத்தில் விற்பனை. அதுதான் அவன் தொழில். அன்றும் அவன் சைக்கிளில் விறகு கட்டிக்கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி போய்க்கொண்டிருந்தான். கைதடி வெளி ஏதோ சத்தம். வாகன ஓட்டமும் குறைவான காலம். என்ன பொம்பராயிருக்கலாமோ அல்லது சீ பிளேனோ கடவுளே ஒதுங்கக் கூட இடமில் லையே. கண்டா அடிப்பான். ஆமாம் அவனுக்கு அது விளையாட்டு சந்தோஷம். அவன் அந்தப்பாவியின் மனம் ஆர்ப்பரிக்கும். ஆனால் விறகு கட்டிச் செல்லும் அந்த அன்றாடங் காய்ச்சிக்கு பாவம் அவன் சைக்கிள்கள் நடுங்கின. விரைவாக ஓடவும் முடியவில்லை. ஒதுங்கவும் முடியவில்லை. என்றாலும் வேகத்தை அதிகரித்து எங்காவது தங்குவோம் ஒளிப்போம் என்று எண்ணிய கணப்பொழுதில் சைக்கிள் தடம்புரண்டு விழுந்து துடித்தான். அப்புறம் என்ன எத்தனையோ நாட்கள் ஆஸ்பத்திரியில் கிடந்தான். கால் முறிந்துவிட்டது. எப்படியோ ஒரு விதமாக நொண்டி நொண்டி நடக்கக் கூடியதாக வீடு வந்து சேர்ந்தான். அவனால் உழைக்க முடியாத ஒரு நிலை. வயிறுநிறைய சாப்பிட முடியாத கொடுமை.

மளமளவென்று வடலி பிடுங்கினாலும் அவனுடைய நினைவெல்லாம் தன் வீட்டைச் சுற்றியே வந்தது. கணவன் மற்ற இரண்டு குழந்தைகள் என்ன செய்கிறார்களோ. சில வேளை கணவன் சமைத்து வைப்பான். சில நாட்களில் கமலினி போனபின்பே இருவருமாக சமைப்பார்கள். மழை தூற்றல் போட்டுக் கொண்டிருந்தது. அவளுடைய வீட்டுக்கு முன்பக்கம் ஒரு குளம் நிரம்பி வழிந்தது. தண்ணீரில் விளையாடும் ஆசையில் மற்ற இரு குழந்தைகளும் குளத்துக்குப் போவார் களோ பயமாக பதற்றமாக இருந்தது. எப்போ வேலைமுடியும் வீட்டுக்குப் போவம் என்ற பரபரப்பு.சந்நீக்கிலார் கோயிலில் மணி கேட்ட தும் பன்னிரண்டு மணி என தெரியும். பழைய நேரம் முதலாளி பணம் கொடுப்பார். ஓட்டமும் நடையுமாக வீட்டுக்குப் போவாள். நித்யன் தன் பணத்துக்கு டிப்பிடிப்பி வாங்குவான்.

கொஞ்ச நேரம் போனது மழைத் தூறல் ஓயவில்லை. ஆனால் தேவாலயத்தின் இனிமையான மணியோசை கேட்டது. அவ ளுக்கு அது தேவகானம். வடலி பிடுங்கிய பெண்கள் கூலியைப் பெற்றுக்கொண்டு புறப்பட்டார்கள். அரைமைல் தூரம் இருக்கும். அது அவர்களுக்கு ஒரு தூரமாகப்படவில்லை.

கமலினி வீட்டை அடைந்தபோது கணவன் அவளுக்காக காத்துக்கொண்டி ருந்தான். குழந்தைகள் இரண்டும் அம்மாவை யும், அண்ணனையும் கண்டதும் ஓடிவந்தார் கள். கொஞ்சம் இருங்கள் என்று ஓடிப்போய் குளத்தில் இரண்டு நிமிஷம் மூழ்கி எழுந்து உடைமாற்றி எல்லாரும் ஒன்றாக உட்கார்ந்தார் கள். சாப்பிட்டார்கள். கணவன் சமைத்த கரு வாட்டுக் குழம்பும் சோறும் நன்றாக இருந்தது. நித்யன் தம்பி தங்கையரை அணைத்து விளையாடத் தொடங்கினான்.

# நீங்களும் நாங்களும்


நாங்கள் விடுதலை வயல்களில்
மேயவந்த வெண்பகுக்கள்.
சுதந்திர வானில் சுற்றிப் பறந்த
சிட்டுக் குருவிகள்..... ஆனால்.....
நீங்களோ அதிகாரத் தூரிகையால்
இனவாத நிறம்தீட்டி எம்மை மாற்றினீர்.....
மன்றத்தில் கூடிக் கேலியும் கிண்டலுமாய்
சுட்டுத்தள்ளும் பயங்கரவாதத்தை சட்டமாக்கினீர்...
கசாப்புக் கடைகளில் பணிபுரிவதெப்படியென
ஒத்திகையும் பயிற்சியும் ஊதியத்தோடு வழங்கினீர்
ஆட்சிமன்றமே கசாப்புக்கடைபோலானது அதனால்
மீட்சிஅற்ற துயரினில் நாடு வீழ்ந்து சிதைந்துபோனது....

பகுக்களாகவும் சிட்டுக்குருவிகளாகவும் இருந்த நாங்கள்
சிறும்வேங்கை, சிறுத்தைகளாகவும் மாறத்தொடங்கினோம்
விபச்சார விடுதிக்குள் புத்தவிகாரங்களில்
அபச்சாரம் செய்தவர்கூட அரியணை ஏற மகிழ்ந்து வந்தார்
கலாச்சாரச் சிதைவினை கச்சிதமாய் முடிக்கும்
நிலாச்சோற்றை உண்னும் ஆலோசனைகள்.....

உலாப் போக முடியாத சிறைவாழ்வினுள் நாங்கள்
உதிரங்கள் உலுட்டுத்தனத்தால் சிந்திட மகிழ்ந்தீர்
வேங்கையும் சிறுத்தையும் விரைந்து பாய்ந்தபோது
அங்கும் உதிரம் சிவப்பென உணர்ந்து துடித்தீர்.....
பூங்கரமேந்திய புல்லாங்குழல்கள்
எங்கும் எதிலும் புகைந்து தள்ளின.....
வீங்கிய இனவாத சீழ்க்கட்டிகள் தம்மை
அறுவைச்சிகிச்சையில் அறுக்கத் தொடங்கின
வேங்கை பாய்ந்த பாய்ச்சலில பத்தாம் பசலிகள்
சாய்ந்து மடிந்து சரித்திரக் களங்கம் தீர்த்தார் எனினும்

புத்தனின் நிழலில் புடவை விரிப்போர் புகுந்து
சித்தமிழந்த சிறுமைகளாலே சிறுமையை விதைத்தீர்
பொங்கிய தமிழனின் புலிகளின் கூட்டம்
தீயதனைத்தையும் அதிர்ந்து தகர்த்தனர் ஓங்கி
எங்கள் வாழ்வின் இனியதாம் பக்கம்
சுதந்திர விடுதலை அதுவே எவர்க்கும்
எங்கும் எதிலும் எவரிடமெனினும் அதிலே
வஞ்சம் என்பது அறிந்திடாததுவாய்.....
பொங்கிய தென்றல் சுதந்திர விடுதலை
மங்கிடா வாழ்வென மார்தட்டி மலர்ந்தது
எங்கெங்கிருந்தோ எவரெவரெல்லாம்
இங்கே வந்தார் வல்லமை கண்டார்.....
சொன்னதும் கேட்டதும் அனைத்தும் மறந்தீர்
சின்னத்தனங்களின் சொந்தக்காரராய் நிமிர்ந்தீர்.....
நீங்களும் நாங்களும் சமமென வாழ்ந்திடும்
மானிடம் கற்பீர் மகத்துவம் பெறுவோம்
போரென வீழ்ந்தால் நீங்களும் நாங்களும்
நாடுகள் இரண்டின் மனிதராய் நிமிர்வோம்
எங்கள் நாட்டில் இன்னொரு குருசேத்திரம்
எப்போதுமே வாரா நாடாய் தமிழீழம்
ஒன்றே குலமும் ஒருவனே தலைவனும்
நன்றாய் இனிதே கொண்டு திகழும்
உங்கள் வயல்களில் உங்கள் விதைகள்.....
முளைத்திட முடியா பொய்மைகள் காண
இளைத்துப் போன புத்தனே வருவான் புன்னகையோடு
எங்கள் நிமிர்வினைக் கண்டு களிப்பான்.

■ வளவை வளவன்.



மனித உறவு என்பது ஆதிகாலம் தொட்டே இருந்து வருகின்றது. ஒருவன் இன்னொருவனால் நேசிக்கப்படுவதற்கும் வெறுக்கப்படுவதற்கும் பல காரணங்கள் இருக்கும். ஒரு நண்பனின் உண்மை நட்பு என்பது சந்தர்ப் பங்களிற்கு ஏற்றவாறு மாறுமா? இது ஒரு கேள்வி இருந்தும் சில இடங்களில் சில பொழுதுகளில் நட்பை சார்பாகப் பயன்படுத்தவும் கூடாது. நட்புத் தான் முக்கியம் என்ற எண்ணத்துடன் நடந்துகொள்ளவும் கூடாது. நட்பு என்பது பல கருத்துக்களில் பல கோணங்களில் பேசப்படுகின்றது. உண்மை நட்பு என்பது எந்தச் சந்தர்ப்பத்தில் எப்படித் தெளிவாகப் புலப்படும் என்பது அவரவர் இயல்புகளின் தன்மையைப் பொறுத்ததே.

எந்த ஒரு மனிதனும் எல்லோருடனும் ஒரே விதமாக தனது அன்பை அல்லது தனது உண்மை உள்ளத்தை வெளிப்படுத்துவான் என்றில்லை. தன் னால் ஏற்றுக்கொள்ளக்கூடிய தன்னைத் தனது குணநலன்களை ஏற்றுக் கொள்கின்ற ஒருவனைத்தான் நண்பனாக ஏற்றுக்கொள்ள முடியும். சுயநலம் என்பது நண்பர்களை ஆட்டிப்படைக்கும் ஒரு நாடகக் கத்தாபாத்திரம். சாதாரணமாக ஒரு மனிதனிடம் இருக்கும் சுயநலம் என்பதை விட நண்பர்களிடையேயான சுயநலம் என்பது மிகவும் ஆபத்தானது.

சிலரின் நட்பின் தன்மைகள் சுயநலத்தின் அத்திவாரத்திலே தான் அமைகின்றது தனது சுய தேவைகளை நிறைவு செய்யவும் தனது தனிப்பட்ட நலன்களுக்காகவும் நன்பனை உருவாக்கிக் கொள்பவர்கள் எந்த வகையைச் சார்ந்தவர்கள். காரியம் பெறும் வரை காலைப்பிடி என்பது போல் தனது சுயநலத்தினால் இன்னொரு வனை நண்பனாக்கி நட்பு என்னும் சொல்லைக் கொச்சைப்படுத்தும் மனிதர்களும் இருக்கிறார்கள்.

**தன்னால் ஏற்றுக்கொள்ளக் கூடிய தன்னைத் தனது குணநலன்களை ஏற்றுக்கொள்கின்ற ஒருவனைத் தான் நண்பனாக ஏற்றுக்கொள்ள முடியும்.**

ஒரு நண்பனைப் பெற ஒரேஒரு வழி நண்பனாக இருப்பதுதான். உண்மை நாம் ஒவ்வொருவரும் நட்பின் குணங்களைக் கொண்டவர்களாக நண்பனாய் ஒருவனை ஏற்றுக்கொள்ள எம்மை நண்பராய் மற்றவர் ஏற்றுக் கொள்ளக்கூடியவர்களாய் அதற்குடைய குண இயல்புகள். மன வெளிப்பாடு கொண்டவர்களாக இருந்தால் தான் மனிதர்களுக்குள்ள உறவு நிலை என்பதில் விரிசல் இருக்காது.

ஆபிரகாம் லிங்கன் ஒரு நண்பனின் சிறப்பை எப்படிச் சொல்கிறார் என்று பாருங்கள். இந்த அலுவலக நிர்வாகத்தை நான் எப்படி நடத்த விரும்புகின்றேன் ஏன்றால் இறுதியில் என் பதவியை விட்டு நான் விலகும் சமயத்தில் உலகில் நான் எல்லா நண்பர்களையும் இழந்து விட்டாலும் ஒரே ஒரு நண்பனாவது என்னுடன் இருப்பான் அவன் எனக்குள்ளே இருப்பான் உண்மை தான். நாம் ஒவ்வோருவரையும் அவர்கள் பற்றி இன்னொருவரிடம் கேட்டறிந்து கொள்வதில் எந்த நல்ல குண நலன்களையும் கண்டுகொள்ள முடியாது. நீங்களே உங்கள் மனதால் தொட்டு உணருங்கள். இயல்புகளைத் தெரிந்து கொள்ளுங்கள் அதுதான் உங்களுக்கான நண்பனை நீங்கள் தெரிந்து கொள்ளச் சிறந்த வழி. நல்ல நண்பன் சிறந்த புத்தகம். மனிதனைப் பாருங்கள் மனங்களைப் படியுங்கள். மனதுக்குப் பிடித்தால் நண்பனாக்குங்கள் இல்லையேல் உங்கள் பாதையை மாற்றுங்கள்.

ஈழவிழி.




நாம் ஒருவரோடு எவ்வளவுதான் சிநேகமாக இருந்த போதும் அது புனிதமானதா என்று ஐயப்படும் விதத்தில் எம் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

எம்முடைய நண்பனையோ அல்லது நண் பியையோ நாம் நல்ல மாதிரி நினைத்து மிகவும் விசுவாசமாக அவர்களோடு பழகுகின்றோம். ஆனால் அவர்கள் எங்களோடு நண்பர்கள் போல் பழகி எம்முடைய இரகசியங்களையும் பெற்றுவிடுகின்றனர். எமக்கு அவர்களின் போலித்தனம் விளங்காமல் அவர்களை நம்பி சகல விதமான இரகசியங்களையும் கொட்டிவிடுகின்றோம்.

எம்மிடம் நல்லவர் போல் நடித்தவர் பிறருடன் சேர்ந்து நாம் இல்லாத போது எம்மைப்பற்றிக் குறையாகக் கதைக்கின்றார். இதனை என்றோ ஒரு நாள் எம்மனம் அறியும்போது எம்மனம்படும் வேத னைகள் எழுத் தால் வடிக்க




முடியாது. உண்மையில் நாம் நம்ப நடக்கவேண்டும் ஆனால் நம்பி நடக்கக் கூடாது.

இன்று இப்படியான குணம் கொண்டோரை நாம் யாவரும் எம்முடைய வாழ்வில் சந்தித்துப்பழகி பலவித மான சொல்லொணா துன்பங்களுக்கும் ஆளாகியே உள்ளோம்.

இந்த விடயத்தில் நாம் யாவரும் ஒன்றை விளங்கிக்கொள்ள வேண்டும். என்னவெனில் எம்மோடு சேர்ந்து எமது நண்பியின் கதையைக் கதைப்பவர் நாளை எம்கதையையும் அடுத்தவரோடு சேர்ந்து கதைக்கமாட்டார் என்பதை நாம் தெளிவாகச் சிந்திக்க வேண்டும்.ஒருவர் இல்லாத போது அவரைப்பற்றி நாம் ஒரு நாளும் குறையாகக் கதைக்கக்கூடாது. அவருக்கு யார் சொல்லப்போயினம் இவர் ஏன் சொல்லப் போகின்றார் என்ற போலி நம்பிக்கையில் நாம் கதைப்பதால் ஏற்படும் பின் விளைவுகளையும் கொஞ்சம் மீட்டிப்பார்க்க வேண்டும். அப்படி நாம் முன் எச்சரிக்கையாக நடந்தால் எமக்கு எல்லோரும் நண்பர்களாய் இருக்க முடியும்.

ஒருவரோடு நல்லவர் போல் நடித்துவிட்டு அவரைப் போக விட்டு பின்னால் நின்று புறம் கதைத்தல் நல்ல நட்பாகாது. இரு நபர்கள் ஒன்று சேரும்போது தங்களுடன் இல்லாத ஒரு நபரைப் பற்றியே கூடுதலாகக் கதைக்கின் றனர். அதுகும் அவரைப்பற்றி தப்பா கவே கதைக்கின்றனர். இச்செயற் பாடு உண்மையில் தவறானது. ஏனென்றால் எம் பொன்னான நேரத்தை பிரயோசனமான முறையில் பயன்படுத்த வேண்டும்.

இருவர் சேர்ந்து பொழுதைப் போக்க வேண்டும் என்ற நினைப்பில் ஏன் வீணாக அடுத்தவரின் குறைகளைக் கிளற நாம் முற்பட வேண்டும். ஒருவரிடமுள்ள நல்ல குணாதிசயங்களை அலசிப் பார்த்தால் அதில் எமக்குப் பயன்படும் விதமான திடகாத்திரமான செயல்கள் கிடைக்கும். இதனை யார் உணர்கின்றனர். ஏதோ தங்கள் மனதில் பட்டவற்றை சரியோ பிழையோ அதுபற்றி கடுகளவும் சிந்தியாமல் கண்டபடி சிதறிவிடுகின்றனர். எங்கள் பக்குவமின்மையால் சிதறிவிடப்பட்ட அசிங்கமான வரிகள் எம்மையறியாமலே அடுத்தவர் பக்குவமாய் அள்ளிக் கொள்கின்றனர். அள்ளப்பட்டவரிகள் யாவும் வேறொருவருக்கு குவிக்கப்படுகின்றன. இதனால் எமக்கும் கெட்டபெயர் ஏற்பட்டு எம்முடைய நட்பும் முறிகிறது. புறஞ்சொல்வோருடன் நட்புக்கொள்வதைக் காட்டினும் நட்பே இல்லாமல் இருப்பது எமக்கு வரும் சிக்கல்களை தவிர்த்துக்கொள்ளமுடியும். பொதுவாக இப்படியான நிகழ்வுகளில் ஈடுபடுவோர் பெரும்பாலும் பெண்களாகவே உள்ளனர்.

எந்த மனிதனாக இருப்பினும் கிடைக்கிற நேரங்களில் எல்லாம் பிரயோசனமான முறையில் தம் காரியங்களை மேற்கொள்ள வேண்டும். சும்மா பிறர் குறைகளை கதைத்துக்கொண்டு எம் குறைகளைக் கூட்டிக்கொண்டு இருப்பதில் எம் பெருமை நசுக்கப்பட்டுக் கொண்டே இருக்கும்.

சு.சி.தமிழினி

**புறஞ்சொல்வோருடன் நட்புக்கொள்வதைக் காட்டினும் நட்பே இல்லாமல் இருப்பது எமக்கு வரும் சிக்கல்களை தவிர்த்துக் கொள்ள முடியும்.**

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை,கிளிநொச்சி.*

## நண்டுக்கறி




தேவையான பொருட்கள்:-

| | |
|---|---|
| நண்டு | -250 கிராம் |
| சின்ன வெங்காயம் | -6 |
| பச்சை மிளகாய் | -3 |
| கறிவேப்பிலை,றம்பை | -சிறிதளவு |
| வெள்ளைப்பூடு | -4 பல்லு |
| மிளகாய்த்தூள் | -1 1/2 மேசைக்கரண்டி |
| வெந்தயம் | -1 1/2 தேக்கரண்டி |
| தேங்காய்ப்பால் | -1தம்ளர் (முதற்பால்) |
| தேங்காய்ப்பால் | -1 தம்ளர் (பிற்பால்) |
| பழப்புளிக்கரைசல் | -11/2 மேசைக்கரண்டி |
| பெருங்சீரகத்தூள். | -அளவாக |

செய்முறை:-

★நண்டைச் சுத்தம் செய்து நன்கு கழுவி அளவான துண்டுகளாக்கிக் கொள்ளவும்.

★வெங்காயம்,பச்சைமிளகாய்,கறிவேப்பிலை,பூடு இவற்றைச் சுத்தம் செய்து வெட்டிக்கொள்ளவும்.

★நண்டுடன் வெட்டிய வெங்காயம் முதலிய பொருட்களையும் மிளகாய்த்தூள், வெந்தயம், தேய்காய்ப் பால்,புளிக்கரைசல்,உப்பு யாவற்றையும் கலந்து மூடி வேகவைக்கவும்.

★பின் நன்கு வெந்து கறி வற்றும் பருவத்தில் பெருஞ்சீரகத் தூளையும், சேர்த்து இறக்கிக்கொள்ளவும்.

★(விரும்பின் இஞ்சி சிறுதுண்டு சேர்த்துக்கொள்ளலாம்.)



## குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.

நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் முலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்– 79**

பெயர்:.....

முகவரி:.....

.....

**குறிப்பு:**
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

## சொற்சிலம்பு-118

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கொ | று | ங் | சீ | வா | அ | யா |
| மா | கு | லி | பா | ந் | மி | ம் |
| க | கி | தி | ரே | ங் | ன | ப |
| நெ | னா | ம் | லி | ளை | கீ | இ |
| கொ | டா | தா | ங் | ர் | யா | பி |
| நே | ர் | ய | க் | ஸ் | கி | ள |
| செ | ட் | கோ | ஞ | சி | த் | கை |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பிவையுங்கள்.

### சொற்சிலம்பம் -116 இன் விடைகள்

01. அவுஸ்திரேலியா.
02. ரஷ்யா.

### சொற்சிலம்பம் - 116 இன் பரிசுக்குரியவர்

க.தனுஜிகா-தரம்-4[A], கிளி/இராமநாதபுரம் ம.வி, இராமநாதபுரம், கிளிநொச்சி.

### சொற்சிலம்பம் - 116 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. இ.ராஜேந்திரன், தென்னிந்திய திருச்சபை, மாங்குளம்.
02. ந.டயாழினி, தரம்-9[B], யா/கொடிகாமம் -திருநாவுக்கரசு ம.வி,
03 செ.றெஜீஷா, தரம்-6[C], கிளி/அக்கராயன் ம.வி, அக்கராயன்.
04. சி.லக்சன், தரம்-8, மு/மாங்குளம் ம.வி, மாங்குளம்.
05. வி.ஜீவிதன், தச்சந்தோப்பு, கைதடி.
06. சி.திர்ஷாந்தினி, கிளி/கிளிநொச்சி ம.வி, கிளிநொச்சி.
07. பி.சுகந்தினி, பாரதி இல்லம், வள்ளிபுனம்.
08 ம.கவிப்பிரியா, 8ஆம் வட்டாரம். புதுக்குடியிருப்பு.

01. உலக வர்த்தக மாநாடு அண்மையில் எங்கு நடைபெற்றது?

01) .....

02. தற்போது உலகிலுள்ள ஒரேயொரு இந்து இராச்சியம்.

01) .....

சொற்சிலம்பம்-118
ஈழநாதம்,
யாழ்சாலை,
கிளிநொச்சி.

பெயர் :- .....

முகவரி :-.....

.....

.....




தென்கிழக்கு ஆசியாவில் ஏறக்குறைய 3000தீவுகள் அடங்கியநாடு இந்தோனேசியா சுமத்திராவிலிருந்து கிழக்கே, நியூகினியாவின் மேற்குப் பகுதியான இரியன் ஜாவா வரை சிறியதும் பெரியதுமான பல தீவுகள் உள்ளன. இத்தீவுக் கூட்டத்தில் தென்கிழக்கு முனையிலுள்ள சிறிய தீவுதான் கொமொடோ. இத்தீவின் பரப்பளவு 608 சதுர கிலோமீற்றர். இந்தத்தீவில் பல நூற்றாண்டு களாக மனிதக் குடியேற்றமே இல்லை. பதினாறாம் நூற்றாண்டு வாக்கில் இப்பகுதிகள் எங்கும் இஸ்லாமிய ஆதிக்கம் மேலோங்க ஆரம்பித்தது. அப்போது கீழ் அந்தாஸ் தீவுகளில் ஒன்றான சம்பாவாவின் சுல்தான் குற்றவாளிகளுக்கு தீவாந்தர தண்டனை கொடுக்க இத்தீவிற்கு அனுப்பி வைத்தார்.

அவர்கள் அங்கு மிகப்பெரிய ராட்சத பல்லிகள் இருப்பதாகத் தகவல் தெரிவித்தார்கள். ஆனால் அவர்கள் கூறியதை யாருமே நம்பவில்லை. வெறும் கட்டுக்கதை என்று ஒதுக்கி விட்டனர். 1912ஆம் ஆண்டுதான் முதன் முதல் இதைப்பற்றிய அறிவியல் பூர்வமான அறிக்கை வெளிவந்தது.

அவர்கள் வர்ணித்த அந்த ராட்சதப் பல்லிதான் கொமொடோ டிராகன் எனும் உடும்பு. பல்லி இனத்தைச் சேர்ந்ததுதான் இது. கொமொடோ தவிர ∴ப்ளோர் மற்றும் அதன் அருகிலுள்ள ஓரிரு சிறு தீவுகளிலும் இந்த இனம் உள்ளது. உலகில் இதுவரை வாழ்ந்த பல்லியினங்களில் இரண்டாவது பெரிய பல்லி இது. இதை விட பெரிய பல்லியினம் ஏறக் குறைய ஒரு கோடி பத்து லட்சம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த கடல் வாழ் உயிரினமான மெஸா ஸர் என்பது.

கொமொடோ டிராகன் என்ற



# உடும்பு


ழைக்கப்படும் உடும்பில் ஆண் இனம் மூன்று மீற்றர் நீளத்திற்கு மேல் வளரக்கூடியது. எடை 130 கிலோ வரை இருக்கும். இதன் நாக்கு பாம்பின் நாக்கு போல் நீளமாகவும் நுனியில் பிளவுடன் மெல்லியதாக இருக்கும். காற்றின் சுவையை அறிய உதவும் இந்த நாக்கை அடிக்கடி உள்ளும் புறமும் இழுத்துக்கொண்டிருக்கும். பற்கள் ரம்பம்போல் கூராக இருக்கும். பற்றிப் பிடித்துக் கொள்ள வசதியான கூரிய வளை நகங்களும் கொண்ட வலுவான கால்கள்.

குகைகள், பாறைகளிலுள்ள குழிகள் மரப் பொந்துகள் ஆகியவையே இதன் உறைவிடங்கள். பொதுவாக இறந்துபோன விலங்குகளையே தேடி உண்ணும். காற்றில் வரும் வாசனையை நாக்கின் மூலம் உணர்ந்து இறந்த விலங்குகள் கிடைக்குமிடம் போய்ச் சேர்கிறது. பன்றிகள், ஆடுகள், மான்கள் முதலானவற்றைக் கொன்று தின்றும் தனியாக வரும் சிறு குழந்தைகளையும் தாக்கக் கூடியதுதான் இது.

வயதான உடும்புகளும் பெரிய உடும்புகளும் இரையை முதலில் உண்ணும். இரையின் அருகில் வரும் இளம் உடும்புகளைத் தங்களது வாலினால் ஒதுக்கித் தள்ளிவிடும். இரையைத் தன் வயிறு கொள்ளும் வரை விழுங்கிவிடும். பின்னர் அந்த உணவை செமி பாடு அடையும் வரை ஏறக்குறைய ஒரு வாரம் வரை ஓய்வெடுத்துக்கொள்ளும்.

# காட்டில் ஒரு கடை

விலங்குகள் தங்களுக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக உதிரிப்பாக விற்பனை நிலையம் ஒன்று காட்டில் திறக்கப்பட்டது.




01

முள்ளம் பன்றி தனது முதுகிலுள்ள முட்கள் விழுந்தமையால் சிகிச்சை பெறுவதற்கு மருத்துவரிடம் செல்கிற போது வழியில் இந்தக்கடையைக் கண்டது.



02

முள்ளம் பன்றி கடையில் கொஞ்ச இரும்புக் கம்பிகளையும். ஒட்டுப் பசையையும் வாங்கித் தனது முதுகில் ஒட்டிக் கொண்டது.



03

ஒரு விபத்தில் முதலை தனது வாலை இழந்து விட்டது. எனவே வால் இல்லாமல் அவரால் எப்படி வாழ முடியும்?



04

எனவே தான் அவர் கடையிலுள்ள மரம் அரியும் வாள் ஒன்றை வாங்கி பொருத்திக் கொண்டார்.




05

காகம் கடைக்கு வந்து நல்ல வயர்களைக் கொள்வனவு செய்தது.




06


என்னால் குச்சிகளால் கட்டப்பட்ட ஒரு கூட்டை கண்டுபிடிக்க முடியாமல் இருக்கிறது. அதனால்தான் நான் கிலோக் கணக்கில வயர் வேண்டினால் ஒரு கூட்டைக் கட்டலாம்தானே.



07

துளையிடும் கருவி ஒன்று வேண்டுவமென்று வந்தனான்.

ஏன் மரம் கொத்தியாரே உமக்கு இந்தக் கருவி?



08

ஏன் தேவையில்லாமல் என்ர வாயைப் பயன்படுத்துவான். இனி என்னால் இந்தக் கருவியைப் பயன்படுத்தி மரத்தைத் துளையிட முடியும்.



நன்றி:- பன்டேடைம்ஸ்

09

(முற்றும்)

உலா 64




# ஏ9-ஏரம்பு

## இன்னுமின்னுமாய்... எத்தனை முறையாயினும் எழுவோம்..!

வணக்கம் வணக்கம் எல்லாருக்கும்! என்னமாதிரி உங்கட சுகங்கள் எல்லாம் ? ஓமோம், நான் நல்ல சுகமாய் இருக்கிறன். சாடையாய் கொழுத்திட்டன் எண்டும் பார்க்கிற ஆக்கள் சொல்லினம். அதுக்காக நீங்கள் நினைக்கக்கூடாது, 'இவர் மழைக்கு வீட்டுக் குள்ளை இருந்து நல்லாய் கொறிச்சுக்கொண்டி ருக்கிறார்' எண்டு. அதில்லைப் பாருங்கோ, எல்லாம் எங்கட சனங்களை நினைக்க வாற சந்தோசத்தாலதான் கொழுத்தனான்!

காலங்காலமாய் அடையாள அட்டை காட்டச்சொல்லி உள்ள வீதியெல்லாம் இறக்கி யேத்தி அநியாயம் செய்தவங்களை அடையா ளம் தெரியாமலே மக்கள் படையள் நொருக் கித்தள்ளிறதைக் கேட்க காதும் மனமும் குளிருது. இல்லை தெரியாமல்தான் கேட் கிறன்; லெபனானில எதிர்க்கட்சித்தலைவர் கொல்லப்பட்ட உடன கய்யாமுய்யா எண்டு தொழிலுக்கு உள்ளாடை மட்டுமே அணிஞ்சு கொண்டு போகோணும் எண்டு சட்டங்கள் கொண்டுவந்தவங்களுக்கு இப்ப மக்கள் சட்டம் நிறைவேற்றத் தொடங்கீட்டினம்.

இல்லைப் பிள்ளையள் கண்ணுக்கு முன்னால அநியாயம் நடக்கேக்கிளை ஆரால தான் கனகாலத்துக்கு பார்த்துக்கொண்டு இருக்கமுடியும் ! யுத்தம் வேண்டாம், சமாதான மாய் பேச்சுவார்த்தை மூலம் கதைச்சு பிரச் சினையளைத் தீர்ப்பம் எண்டு உண்மையிலயே அரசாங்கம் விரும்பினால் அதை நடைமுறை யில காட்டோணும். பேச்சுவார்த்தையளுக்கு அனுமதி வழங்காமல் தடைவிதிக்கிற அவை யின்ரயளுக்கு 'சமாதானச்செயலகம்' எண்டு பேர் வேற!

நோர்வேயைத் தவிர வேற நாட்டாக் கள் இஞ்ச கிளிநொச்சிக்கு வந்து கதைக்கவும் தாங்கள் அனுமதிக்க மாட்டினமாம். வழக்கமாய் இடத்தில தன்னட்ட இருந்ததை வெளிப்படுத்த மறுத்த காரணத்தால பல உயிர்களைக் காப்பாற்றிறதுக்காக அப்பிடிச் செய்ததில தப்பு எதுவும் இல்லை எண்டு எல்லாரும் ஒத்துக் கொண்டிட்டினம்.சரி நானும் ஏற்றுக்கொள்ளிறன்.

ஆனால், தீர்வுத்திட்டம் வைச்சிருக் கிறன், வைச்சிருக்கிறன் எண்டு கனகாலமாய் சொல்லிச்சொல்லியே சிங்கள அரசாங்கம் மக்கள்மேல அடாவடித்தனங்களை மேற் கொண்டு வருகிது. அவையளின்ர நடவடிக்கை யளைத் தொடர்ந்து பார்க்கேக்கிள 'மேல்வீடு' பிசகின கேஸ் எண்டிறது தெளிவாயிட்டிது. என்னமாதிரி முன்னம் சொன்ன முன்னுதார ணத்தை எங்கட சனத்தின்ர நன்மை கருதி நாங்களும் பின்பற்றலாம் தானே !

இன்னுமொரு சுவாரஸ்யமான வரலாற்றுச் சம்பவம். பிரித்தானிய மேலாண்மையில இருந்து விடுபட்டு சுதந்திரம் வேண்டிப் போராடின அமெரிக்க விடுதலைப்படையைச் சேர்ந்த சிலர் 1773 ஆம் ஆண்டு இதே டிசம்பர் மாசம் 16ஆம் திகதி பொஸ்ரன் துறைமுகத்துக்குள்ள புகுந்து பிரித்தானிய அரசுக்குச்சொந்தமான சரக்குப் பொதியளை நாசமாக்கி அழிச்சிட்டினம். இதுக் காக அவையள் செவ்விந்தியர் மாதிரி வேசம் போட்டுக்கொண்டுதான் போய் விளையாட்டுகள் காட்டினவை எண்டிறது முக்கியமான விசயம்.

குறும்புக்கார அமெரிக்கா, தான் எதை வேணுமெண்டாலும் செய்யும். ஆனால், மற்றாக் கள் நேர்மையாய் செய்தால் மூஞ்சையை நீட்டிக் கொண்டு கோவம்போல நடிக்கும். அண்டைக் கொரு சஞ்சிகையில 2 பேரின்ர படம் போட்டி ருந்தது. ஏதோ சினிமாவில வாற கதாநாயகனும் கதாநாயகியும் மாதிரி நல்லா நெருங்கிநிண்டு கைகுடுத்தவடி நிண்ட அந்த படத்தில நிண் டவை ஆர் சொல்லுங்கோ, பார்ப்பம்! போனவரு சம் வரைக்கும் ஜோர்ஜ் புஷ் அரசில பாதுகாப்பு அமைச்சராய் இருந்து ஈராக் போருக்கு முழுமூச் சாய் குரல்குடுத்த றம்ஸ்.பீல்ட் தான். சரி ஒண்டு அவர், மற்றது ? வேற ஆர் சதாம் குசைன் தான் ! வயசுபோன கிழவன் எங் கையோ இருட்டுக்கிள்ளை அரைகுறையாய் பார்த்திட்டு கதை அளக்கிதெண்டு நினைக் காங்கோ! சத்தியமாய் 'ஸ்பீகிள்' எண்ட சஞ்சிகையில பார்த்தனான். ஆனால், அது நடந்தது 1980களில.

50 லட்சத்துக்கும் குறையாமல் விற்கப்படிற அந்த வாரச்சஞ்சிகையில இருந்த தகவல்களின்படி; அமெரிக்கா வஞ்சகம் இல்லாமல் பரவலாய் விற்பனைசெய்து வந்த நச்சு-அழிவாயுதங்களை வாங்கினவையளில சதாமும் ஒருத்தர். ஆனால், அந்த மனுசன் சும்மா வாங்கி விலாசமாய் வைச்சிருக்கிறதை விட்டிட்டு, தனக்குப் பிடிக்காத குர்தீஸ் சனங் களுக்கெதிராய் பிரயோகிச்சதில ஒரேதட வையில 5 ஆயிரம் அப்பாவி மக்கள் வரைக் கும் கொல்லப்பட்டவை. அந்தக்காலத்தில சர்வதேச நிறுவனங்கள் சும்மா கண்துடைப் புக்கு 'சீச்சீ ! கூடாதபழக்கம். இனிமேல் உப் பிடி செய்யப்படாது' எண்டு சொல்லிப்போட்டு அடங்கீட்டினம். ஆனால், அமெரிக்காவின்ர அன்றைய சனாதிபதியான (1981-1989) றொனால்ட் றீகன் இதைப் பார்த்திட்டு, 'சே ! எல்லாருக்கும் தானே விற்கிறோம். ஆனால், சதாம் மாதிரி ஒரு துணிஞ்ச கட்டையை இது வரைக்கும் காணக்கிடைக்கேல. இப்பிடியான ஒருத்தரோட நாங்கள் நல்லுறவைப் பேணினால் தான் மத்திய கிழக்கில விலாசமாய் திரியலாம். மற்றது அந்தரத்துக்கு எண்ணெய் ஏதும் தட்டுப்பாடு எண்டாலும் கொஞ்சம் கேட்கலாம் தானே எண்டிட்டு சனாதிபதி றீகன் தன்னோட தூதராய் சதாமிட்ட அனுப்பின ஆள்தான் றம்ஸ்.பீல்ட். அதுக்குப் பிறகு அவையின்ர உறவு வலு நெருக்கமாகி ஈராக்-ஈரான் யுத்தகாலத்திலயும் ஆதரவாய் தொடர்ந்து 1991 இற்குப்பிறகு தெறிச்ச கதை உங்களுக் கெல் லாம் தெரிஞ்சதுதானே !

நீங்கள் நினைக்கப்படாது, இந்தாள் உள்ளுரை விட்டு இப்ப சர்வதேச மட்டத்தில நொட்டைநொடிசல்கள் பிடிக்க வெளிக்கிட் டிட்டிது எண்டு. இல்லை எங்களுக்கு பத்தையும் பலதையும் அறிவுறுத்திற தரப்புகளின்ர பின்புலத்தைப் பற்றி நாங்கள் அறிஞ்சிருக் கிறது நல்ல விசயம்தானே!

கிட்டடியில முன்னாள் சனாதிபதி பில் கிளின்ரன் வந்தவர் தானே ! சுனாமியால பாதிக்கப்பட்ட மக்களுக்கான மீள்புனர்நிர்மாண வேலையள் எப்பிடி இருக்கெண்டு பிபிசி-சர்வ தேச சேவைக்கு அவர் கருத்துத் தெரிவிக் கேக்கிள, வடக்கில (government in the north) இருக்கிற அரசாங்கம் மீள்புனர்நிர் மாணம் முன்னெடுப்புகளை நல்ல திருப்தியளிக் கக்கூடிய மாதிரி செய்துவருதெண்டு சொல்லி யிருக்கிறார்.

எனக்கென்ன சந்தேகம் எண்டால் இலங்கை ஒரு சின்னத்தீவு ! இதைப் பற்றி அவர் பாவம் அறிஞ்சு வைச்சிருக்கோணும் எண்டில்லை. முந்தியெண்டால் 1008 ஆலோச கர்மார் இருந்திருப்பினம். இப்ப பதவியில வேற இல்லை. சிறிலங்கா சனாதிபதியெண்டால் பென்சனில போகேக்கிளையும் 238 ஊழியர் களோட சந்திரிகா மாதிரி ஒரு சுருட்டல் சுருட்டிக கொண்டு போகலாம். ஆனால், அந்தாள் வெறும் அமெரிக்க முன்னாள் சனாதிபதி தான். ஆக அவர் தெற்கில இருக்கிற அரசைத்தான் மாறி 'வடக்கில இருக்கிற அரசு' எண்டு சொன்ன வரோ ? இல்லாட்டி உண்மையிலயே வடக்கில இயங்கிக்கொண்டிருக்கிற தமிழீழ அரசைப் பற்றிச் சொன்னவரோ எண்டு.

சரி சரி இணைத்தலைமை நாடு களைப் பற்றி சொல்லிறன் எண்டிட்டு ஒருநாட் டைப் பற்றி மட்டும் சொல்லிறது நியாய மில்லை. 2ஆம் உலகயுத்த காலத்தில யேர்மனியில ஹிட்லரால 6 மில்லியன் யூதர்கள் அழிக்கப்பட்ட வரலாறெல்லாம் உங்களுக்குத் தெரிஞ்சது தானே. ஆனால், அதுக்கு எந்த விதத்திலயும் குறையாத அட்டூழியங்களை நிகழ்த்தின யப்பான் யேர்மனி மாதிரி, உலக அரங்கில பாதிக்கப்பட்ட மக்களிட்டை மன்னிப் புக்கோரின சம்பவம் ஒண்டும் இல்லை. போர்க் காலத்தில யப்பானின்ர ராணுவ ஜெனரலாய் இருந்த ரோஜோ (Tôjô Hideki 1884-1948) 1948 இல தூக்கில இடப்பட்டாலும் பாதிக்கப் பட்ட கோடிக்கணக்கான சீன, கொரிய மக் களுக்கு முன்னால யப்பான் தன்ர கடந்த காலத்துக்காக இன்றுவரைக்கும் மன்னிப்புக் கேட்கேல்லை.

சீன, கொரிய சிறுமிகளை யப்பானிய ராணுவத்தின்ரை காமத்துக்கு சகட்டுமேனியாய் பலிகொடுத்தது உட்பட உயிருள்ள மனிதனை உறைகுளிருக்குள்ளை வைச்சிருந்து மருத்துவ பரிசோதனையள் மேற்கொண்டது எண்டு யப்பான் செய்யிற எல்லாத்தையும் செய்திட்டு கடைசியில ஜெனரல் ரோஜோ எண்ட தனிப்பட்ட ஒராளுக்கு தண்டனை குடுத்திட்டு எல்லாத்தையும் மூடி மறைச்சிட்டிது. யப்பா னால பாதிக்கப்பட்ட மக்கள் சீனர்தானே எண்ட தும் மேற்கின்ர மௌனத்துக்கான இன்னொரு காரணமாய் இருக்கிது. எல்லாத்துக்கும் மேலாக தான் புரிஞ்ச வரலாற்றுக்கொடுமையளைத் திரிபுபடுத்தி வேறமாதிரியான பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்த வெளிக்கிட்டதால தான் சில மாதங்களுக்கு முன்னால சீன மக்கள் கொதிச்சுப்போய் பரவலான ஆர்ப்பாட்டங்களை நிகழ்த்தினவை. அதுக்குப் பிறகுகூட யப்பான் தெரிவித்தது மன வருத்தமே தவிர, மன்னிப்பு அல்ல !

அப்பிடி உலகம் இருக்கிது. ஆனால், எல்லாத்தையும் வெட்டி ஒடினால், நாளைக்கு உவையள் எல்லாரையும் எங்களுக்குப் பின்னால ஓட வைக்கலாம். எத்தினை விண்ணர்மார் வந்தாலும் எல்லாத்தையும் வெட்டியோடக்கூடிய வழிகாட்டியும், ஒளிகாட்டியும் இருக்கிற எங்கட இனத்துக்கு என்ன தயக்கம் ! எங்கட மக்கள் எழுச்சியை மனதில இருத்தி மகிழ்வோம் ; இன்னுமின் னுமாய் எத்தினை முறையாயினும் எழுவோம்! வாறகிழமை சந்திப்போம், ரற்றா!!

கொண்டு தூக்கிப்பிடிக்கிற சர்வதேசம், எத் தினை இனப்படுகொலையளை எங்கட இனம் முந்தி சந்திச்சது, ஏதாவது வாய் திறந்தவையோ? இப்ப மட்டும் பெரீசாய் இஞ்சை நியதியளைப் பற்றி பேச வந்து நிற்கிற வெளிநாடுகள், ஆனையிறவை ஏங்கட பிள்ளையள் பிடிக்கிற துக்கு முன்னால எல்லாம் எங்க கிடந்தவை? சரி அதைவிடுவம்.

தேசியத்தலைவரின்ர உரையில அழுத்தப்படிற 'குறுகியகால அவகாசத்தை' 2006ஆம் ஆண்டு டிசம்பர் 31, இரவு 11:58 எண்டு அதிகபட்சமாய் தங்களுக்குத் தாங்களே அர்த்தப்படுத்திக்கொண்டிருக்கிற அரசு கஷ்ரங் களுக்கு மத்தியில இடம்பெயர்ந்து வாழிற தமிழ்மக்கள் உட்பட, 4 வருசத்துக்கு முன்னால ஒப்பந்தித்கப்பட்ட விசயங்களை தாங்கள் நிறைவேற்றோணும் எண்டிறது பற்றி எதுவித சிந் தனையும் இல்லாமல் இருக்கிது. யுத்தநிறுத்தம் தொடர்பான ஒப்பந்தத்தையே 4வருசத்தில நிறைவேற்ற எதுவித பிரயத் தனமும் எடுக்காத அரசை, சதுரங்கம் மாதிரி சகல திசையளாலும் தலைவர் நெருக்கீட்டார். உலகத்துக்கும் இப்ப விசயம் விளங்கீட்டிது.

இருந்தாலும் முதுகெலும்பில்லாத அரசு எண்டதொரு 'பிரத்தியேக அந்தஸ்து(?)' காரணமாக மேற்கு-நாடுகள் அரசாங்கத்தின்ர பக்கத்துக்கு கொஞ்சம் விசிறிவிடப் பார்க்கும். ஆனால், எங்கட தியாக தீபம் திலீபன் தம்பி 18 வருசத்துக்கு முன்னால தன்னை உருக்கி எங்களுக்கு உணர வைச்ச மக்கள் எழுச்சி இண்டைக்கு தமிழீழம் முழுக்க முழுஅளவில கைகூடியிருக்கிது.


அணுகுண்டு தயாரிப்பது எப்படி யெண்ட விசயமே இன்ரர்நெற்றில எடுக்கலா மெண்டு இருக்கெண்டால் கிளைமோர், கண்ணி வெடி எல்லாம் சின்னப்பிள்ளை சமாச்சாரம் பாருங்கோ. எங்கட வீடுவாசலுகளைப் பறிச்சு தங்கட 'உயர் பாதுகாப்பு வலயத்தை' விரிவு படுத்திக்கொண்டு, எங்கட சனங்கள் கடல் அடிக்கடி வாற யப்பான்காரரை இந்தமுறை அரசாங்கம் வன்னிக்கு அனுமதிக்கேலை. இருந்தும் அந்த மனுசன் சிங்கள பேரினவாதத் தின்ர கோரிக்கைப்படி பேச்சுவார்த்தையளை யப்பானில வைக்கலாம் எண்டு சொல்லியி ருக்கு. இல்லை இது சும்மா விசயமில்லை, எங்கட இனத்தின்ர சுயகௌரவம் சம்பந்தப் பட்டது. பக்கசார்பாய் கொண்டுவரப்பட்ட வரவேற்று மறுப்பை மீளப்பெற்ற நிலையில மேற்கு-ஐரோப்பிய நாடு ஒன்றிலதான் எங்கட இனத்தின்ர பிரதிநிதியள் பேச்சுவார்த்தையளில ஈடுபடோணும் எண்டு தமிழ்மக்களாகிய நாங் களும் வலியுறுத்தலாமோ இல்லையோ !

நோர்வேக்கு கட்டுப்பட்டு நடக்கோணும் எண்டிற கட்டாயம் தங்களுக்கில்லை எண்டு மகிந்தர் சொல்லிறார். அப்பிடிச் செய்யச்சொல்லி இஞ்ச ஒருத்தரும் கேட்கேலயே, ஒப்பந்தத்துக்கு கட்டுப்பட்டு நடந்தால் காணும்! எங்கட சீவனை விழுங்கிறதுக்கு வசதியாய் பலாலியில விமான தளம் அமைச்சுக் குடுக்கிற இந்தியாவை வேற இணைத்தலைமை நாடுகளுக்கிள்ளை கொண்டு வரப்போயினமாம்.

உந்த இணைத்தலைமையளைப் பற்றி நாங்கள் நாள் முழுக்க கதைக்கலாம். கிட்டடி யில கொஸ்ராறிக்கா எண்ட தென்னமெரிக்க நாட்டைப் பிறப்பிடமாகக்கொண்ட அமெரிக்கப் பிரஜை ஒருத்தர் Miami விமான நிலையத்தில விமானப் பாதுகாப்புக் காவலரால சுட்டுக்கொல் லப்பட்டிருக்கிறார். மனநோயாளியான அந்த மனிசன்ர கெட்டகாலம் பாருங்கோ, தன்னோட சூடகேசுக்கிள வெடிகுண்டு இருக்கெண்டு விமான நிலையத்தில வைச்சு கத்த வைச்சிருக்கிது. அதை தங்களிட்டை ஒப்படைக்கச்சொல்லி கேட்ட காவலர்களின்ர கதைக்கு அந்தாள் உடன் படேல்லை. பேந்தென்ன ஆளைச் சுட்டுப் போட்டினம்.

மனநோயாளியான ஒரு அப்பாவியை இப்பிடி அநியாயமாய் கொல்லிறதோ எண்டு ஒருசில கேள்விகள் எழுப்பப்பட்டாலும், அந்த

# நாதஸ்வரம், சித்திரத்தேர்களை அமைத்துவரும் சின்னத்தம்பி அமரசிங்கம் ஐயா





***நாதஸ்வரம், சித்திரத் தேர்களை அமைத்து வருகின்ற ஸ்தபதி சின்னத்தம்பி அமரசிங் கத்துடனான நேர்காணல்:-.***

மனிதன் தன் உணர்வுகளை வெளிக்கொணரவும் ஓய்வு நேரங்களை பயனுள்ள முறையில் கழிப்பதற்கும் கலைவடிவங்களைப் பயின்றான். பயிற்றுவித்தான். நாடிச் சென்றான். தமிழர் நம் பண்பாட்டு கலைவடிவங் கள் இனத்தின் இருப்பை பண்பாட்டு விழுமியத்தை கட்டிக்காப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன.

தெய்வீக இசை, நடன நிகழ்வு களுக்கு இசைக் கருவிகளின் அதீத பங்களிப்பு ஒருவித மனத் தளர்வை தெய்வீகச் சூழலை ஏற்படுத்துகின்றமை இங்கு குறிப்பிட்டுத்தான்

தகுதியான வேலை என சொல்லக் கூடிய வகையில் சிற்பாலயத்தை வழிநடாத்தி வருகிறேன். வேலை ஆட்களின் பற்றாக்குறையால் இந்தி யாவில் இருந்து கலைஞர்களை வர வழைத்து அவர்களையும் எம்முடன் இணைத்துள்ளேன்.

1967 ஆம் ஆண்டு காலப்பகுதி யில் இந்தியாவில் இருந்து இந்நாட்டு கலைஞர்களிற் கான நாதஸ் வரக் கருவிகள் கொண்டுவரப் பட்டன. இதில் பல்வேறு அசௌ கரியங்களை கலைஞர் கள் எதிர் நோக்கி

அறியவேண்டியதில்லை. நாதஸ்வர மங்கள இசை மங்களகரமான தெய் வீக வசீகரத் தன்மையை தோற்று விக்கவல்லது. இக்கலைகளின் ஊடாக நம்முன்னே கலைஞர்கள் வருவார்கள். கலைஞர்களிற்கு உயிர் கொடுக்கும் இசைக் கருவிகளை உருவாக்குவோர் அல்லது வடிவ மைப்போர் பற்றி நம்மில் பலர் சிந்திப் பதில்லை.

ஆடுபவனிற்கு முன் ஆட்டுவிப் பவனே முதன்மையானவன். அந்த வகையில் ஈழத்தில் நாதஸ்வரக் கரு வியை முதன் முதலில் வடிவமைத்த வரும் இன்றுவரை அதனைத் தொழி லாக மேற்கொண்டு வருபவருமான அராலியூர் ஸ்தபதி சின்னத்தம்பி-அமரசிங்கம், பாரம்பரிய சித்திரத் தேர் களை நிர்மாணவிதிகளிற்கு அமை

**இரா-வின்**

வாக நிர்மாணிக்கின்ற ஒருவர் என்ற பெருமையும் இவரையேசாரும்.

35வருடங்களிற்கு மேலாக நாதஸ்வரம்,தவில், சித்திரத்தேர், மஞ்சம், தெய்வவாகனங்களை ஈழத் தின் பல பாகங்களிலும் நிர்மாணித்து வரும் ராதாதி நாதஸ்வர சிற்பகற் பக,சிற்பகலா வினோதன் ஸ்தபதி அமரசிங்கத்தை நேர்காணலிற்காக சந்தித்தோம். அவர் பகிர்ந்துகொண்ட கருத்துக்களை நேர்காணல் வடிவில் வாசகர்களிற்குத் தருகிறோம்.

**நாம்:- துறைப் பிரவேசம் தொடர்பாக...?**

**அமரசிங்கம்:-** சிற்ப வேலை எமது குலத் தொழில். அராலி வடக்கு இளந்தைத் தாழ்வு முருக மூர்த்தி கோவிலுக்கு 1971 ஆம் ஆண்டு தேர் செய்வதற்கான வாய்ப்பு இறை வனால் அருளப்பட்டது. எனது தகப் பனார், சகோதரர்களின் ஒத்துழைப் புடன் அன்றிலிருந்து செயலாற்றி வருகிறேன். ஓரளவிற்கு உலக மக்களோ-ஏனைய சிற்பிகளோ ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில், வந்தனர். கோண்டாவில் நாதஸ்வர வித்துவான் வீ.ஏ. பாலகிருஸ்ணனின் வேண்டுகோளிற்கிணங்கி, நாதஸ் வரத்தை இங்கே கடைய வேண்டு மென்பதை சவாலாக ஏற்றுத் தொடங் கினேன்.

செய்யவேண்டும் என்ற எண்ண மும் என்மீது கொண்ட நம்பிக்கை யாலும் இன்றுவரை 1500 இற்கு மேற்பட்ட நாதஸ்வரங்களைக் கடைஞ்சு எம் கலைஞர்களின் பெரும் சுமையை நிவர்த்தி செய்து வருகி றேன். இங்கிருந்து இந்தியா,கனடா, பிரான்ஸ்,ஜேர்மனி,லண்டன் போன்ற பல நாட்டுக் கலைஞர்கள் நாதஸ்வரத் தைக்கொண்டு சென்று பயன்படுத்து கிறார் எனச் சற்றுப் பெருமையாகப் பதிலளித்தவரிடம்,

**நாம்:- சிற்பத் தொழில்-கலைஞர்கள் பற்றி...?**

**அமரசிங்கம்:-** சிற்பத்தில் எல்லைகாண முடியாது. என்னுடைய சிற்பங்களிலும் குறிப்பிட்ட சில வீதங் களே உள்ளன. முழுமைப்படுத்தப்பட் டுள்ளதென்று கூறமுடியாது.சில இடங்களில் மிகவும் பின்தங்கிய நிலையில் இத் தொழில் இருக்கின்ற மையும் உண்மை.

சிற்பங்களிற்கு அப்பால் தேர், சப்பறம் போன்ற ஊர்திகள் மக்க ளோடு மக்களாக வலம் வருகின் றமை அறிந்ததே. இவற்றின் அளவுப் பிரமாணம் மிகவும் முக்கியமாக கவனத்தில் கொள்ளவேண்டும். சிற் பத்திற்கு அழகு இருக்கவேண்டும். அளவு சரியாக இருந்தால் அழகு தானாகவே வரும்.

அண்மையில்கூட பொலிகண்டி உப்புக்கிணற்றில் பிள்ளையார் ஆல யத்தேர் வீதி உலா வரும்போது தேர் முன்னே குடைசாய்ஞ்சு பெரும் அவ லத்தை ஏற்படுத்தியது. இதுபோன்ற பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றை சிறந்த சிற்பியால் ஏற்றுக் கொள்ளமுடியாது. எமது தொழில் மிகவும் கீழ்த்தரத்திற்குப் போகக் கூடாதென்பதற்காகவே இதனைக் குறிப்பிடுகிறேன் எனக் கூறியவரிடம்,

**நாம்:-நீண்ட காலத்தில் குறிப் பிட்டசில தேர்களையே செய்துள் ளதாக அறிகிறோம் இதுபற்றி....?**

**அமரசிங்கம்:-** ஒரு தேரைச் செய்வதென்றால் **குறைந்தபட்சம் ஒருவருடமாவது எடுக்கும். வேலை நுணுக்கம், தொழிலாளர் கஸ்ரம், மூலப்பொருட்கள் கிடைக்காமை என பல்வேறு இடையூறுகளும் ஏற்படும். சிற்பியின் வாழ்நாளில் 100 இற்கு மேற்பட்ட தேர்களை செய்வதென் றால் அது தகுதியற்ற பொருளா கவே இருக்கும். திறமையான அதே நேரம் முழுமையான பொருளை அமைப்பதென்றால் மிக நேர்த்தியாக அளவுகளின் ஊடாக அழகை ஏற்படுத் தித் கொள்வதனாலேயே இன்றுவரை 18 தேர்களை வடிவமைத்துக்கொடுத் ததுடன் ஆறு தேர்களின் நிர்மாணிப் புப் பணிகளையும் மேற்கொண்டு வருகிறேன் என்றவரிடம்,

**நாம்:-மூத்த கலைஞர் என்ற வகையில் கலைஞர்களிற்கு கூறு வது...**

**அமரசிங்கம்:-**இக்கலை ஒரு வரிற்கு இறைவனால் அல்லது குரு வால் அல்லது அவரது தனிப்பட்ட முயற்சியால் ஏற்படுகின்றது. ஆனால் இன்றைய கலைஞர்களிடம் இவை எதுவுமே கிடையாது. தொழில் நுணுக்கங்களை, அளவு நிர்மாணங் களை அறிந்து விளங்கிக்கொள் கின்ற அறிவு பொதுமக்களிட மில்லை. ஆலய நிர்வாகிகளின் தொந்தரவு எனப் பல சீர்கேடுகள் இடம் பெறு கின்றன.

போட்டி மனநிலையுடன் வேலைகளைப் பொறுப்பேற்காது



பொதுமக்களின் விருப்பத்திற்கு அமைவாக சிற்பத்தேர் வாகனங் களை செய்வதற்கு ஆற்றல், திறமை இருந்தாலே இவற்றை ஏற்றுக் கொள்ளவேண்டும். இந்த வேலை யும் நானே எடுக்கவேணும். நானும் நாற்பது தேரைச் செய்துள்ளேன் என்ற பெயர்பெற வேண்டும் என்ற அபிப்பிரா யம் இருந்தால் இதனை முற்றுமுழு தாக கைவிட வேண்டும். ஈழத்திற்கும் எமது துறைக்கும் பெருமை சேர்க்கும் வகையில் ஒவ்வொரு கலைஞர் களும் அர்ப்பணிப்புடன் தொழிலில் ஈடுபட்டு தொழிலின் சிறப்பை நிலை பெறச் செய்ய வேண்டும்.

**நாம்:- இலங்கையிலே நாதஸ் வரத்தை செய்து வரும் ஒரேஒரு கலைஞர் என்ற வகையில்...?**

**அமரசிங்கம்:-** இலங்கை இந்தியக் கலைஞர்கள் பலர் எனது நாதஸ் வரத்தை பயன் படுத்துகிறார்கள். என்.கே. பத்மநாதன், காணமூர்த்தி, பஞ்ச மூர்த்தி போன்ற பல திறமையான கலைஞர்களிற்கும் வடிவம் கொடுத்து தளம் அமைத்து அவர்களுடைய திறமைகளை வெளிக்கொணரப் பங் காற்றிய பெருமை எனக்குண்டு. சமய கலாச்சார நிகழ்வுகளில் முதன்மை யாகப் பயன்படுத்தும்போது ஆத்ம திருப்தி ஏற்படுகின்றது.

**நாம்:-** வெளிநாட்டவர்கள் இங்கி ருந்து நாதஸ்வரத்தை எடுத்துச் செல்கின்றனர் இது பற்றி....?

**அமரசிங்கம்:-** இந்தியாவின் திருவாணக்காரவில் சுப்பிரமணிய ஆச்சாரியாரால் முதன் முதலில் நாதஸ்வரம் கடையப்பட்டது. பின்னர் ரங்கநாத ஆச்சாரியாரால் கடையப் பட்டது. இந்தியாவில் நரசிங்கப் பேட்டை, கேரளத்தூர், இலங்கையில் அராலி ஆகிய இடங்களிலேயே நாதஸ் வரம் கடையப்பட்டு வருகின்றது.

அரும் பொருளாக இருப்ப தனால் எவரும் சிரமப்படாமல் செய்ய முடியாது. இதனால் பலர் முன்வரா மையால் குறிப்பிட்ட சில இடங்களி லேயே நிர்மாணிக்கின்றார்கள்.

பாரிய சிரமத்திலிருந்த நாதஸ்வரம் வடிவமைக்கும் முறையை மிக இலகுவாக அதே நேரம் நேர்த்தியாகச் செய்யக்கூடிய முயற்சியையும் ஆராய்ச்சியையும் நான் செய்துள் ளேன். இது இறைவன் கொடுத்த வரம் என்றே கருத முடியும்.

**நாம்:-உங்களிற்குப் பின்னர் இத் தொழிலைத் தொடர்வது....?**

**அமரசிங்கம்:-** குலத் தொழிலாக இருக்கின்றமையால் எனது தம்பி கணேசலிங்கம், பெறாமக் களான சிற்சபேஷன்,(வாய் பேசா தவர்) ஆசிரியர் கிருஸ்ணமூர்த்தி, மன்மதராசா, எனது புதல்வர்களான அங்கரநேசன், நர்தனன், (மாணவன்) எனப் பலரை உருவாக்கியுள்ளேன். தொடர்ச்சியாக நாதஸ்வரக் கலைஞர் களிற்கு கை கொடுக்க நாம் தயாராக வுள்ளோம். இந்தியாவில் இப்பவும் கையாலேயே வடிவமைத்து வருகி றார்கள். நாம் இயந்திரத்தின் உதவியு டன் ஒரு நாளில் இருவர் இணைந்து ஒரு நாதஸ்வரத்தை வடிவமைக்கக் கூடிய சிறப்பில் உள்ளோம்.

**நாம்:- நாதஸ்வரத்தின் வகை, பயன்படுத்தும் மரங்கள் தொடர்பாக.....?**

**அமரசிங்கம்:-** நாதஸ்வரத் திலே பாரி, திமிரி என இருவகை உண்டு. பாரி என்ற நாதஸ்வரத் தையே நாம் பயன்படுத்தி வருகி றோம். இரண்டு கட்டைச் சுருதியில் உருவாக்கப்படுவது இதன் உழவு 29 அங்குல அளவுடையது. நாதஸ் வரத்தின் மேல்பாகம் உழவு எனவும் கீழ் பாகம் அனசு எனவும் இன் னொன்று நறுக்கு என்றழைக்கப்படும் சீவாளிப்பகுதியுமாகும். இதில் உழவு எனும் பகுதியை செய்ய அச்சா என்னும் மரத்தைப் பயன்படுத்து கிறோம். அனசுப் பகுதியை உருவாக் கக் கருவை, கல்வாகை, கருமருது போன்ற பல மரங்கள் பயன்படுத்தப் படுகின்றன. இவற்றை இலங்கையின் பல்வேறு இடங்களில் இருந்தும் பெற முடியும்.

சீவாளி என்ற பகுதிக்கு தேவையான மரத்தை இந்தியாவில் இருந்தே பெறவேண்டியுள்ளது. அனசுப் பகுதி 7 அங்குல நீளமும் 61/2 அங்குல விட்டமுடையது.


**நாம்:- இந்தியக் கலைவடிவங்களில், கலைஞர்கள் பற்றி....?**

**அமரசிங்கம்:-** இந்தியாவில் கலை வடிவங்கள் ஆரம்பித்திருந்தாலும், எல்லா இடங்களிலும் இந்து நாகரிகத் துறையோடு அமைந்த சிற்பக் கலையை ஒரே மரபைக் கொண்ட தாக அமைக்க வேண்டும். அமைப்பு சாஸ்திரவிதி, மரபு தவறாது இருக்க வேண்டும். இந்தியாவின் சில இடங் களில் சிற்பக்கலை கீழ் நிலையி லுள்ளது.

*(20ஆம் பக்கம் பார்க்க)*

# இலக்கியப்பகிர்வு

## வெளிச்சம் தேடும் விளக்குகள்






யாழ்ப்பாணம் நெல்லியடியைச் சேர்ந்த பொன். சுகந்தன் அவர்களின் வெளிச்சம் தேடும் விளக்குகள் சிறுகதைத் தொகுப்பு கரவெட்டி பிரதேச செயலக கலாச்சாரப் பேரவையால் வெளியிட்டு வைக்கப் பட்டுள்ளது.

பன்னிரண்டு சிறுகதைகளைக் கொண்ட இச் சிறுகதைத் தொகுப்பு பொன். சுகந்தன் அவர்களின் முதலாவது சிறுகதைத் தொகுப்பு என்பதை விட அவரது ஆரம்பகாலச் சிறுகதைகள் என்பதே மிகப் பொருத்தமானது.

அண்மையில் வாராந்த சஞ்சிகை ஒன்றின் கேள்வி பதில் பகுதியில் ஒரு கேள்விக்குப் பதில் அளித்த கேலிச்சித்திர காரர் ஒருவர் தெரிவித்த கருத்து பின்வரும் அம்சத்தைக் கொண்டது. ''மாங்காய்'' படம் போட்டுத்தான் எல்லோரும் வரைய (ஓவியங்களை) ஆரம்பிக்கின்றார்கள். ஆனால் அதற்காகத் தொடர்ந்து "மாங்காய்" படமாகவே போட்டுக் கொண்டு இருக்கக்கூடாது.

ஓவியத்திற்கு மாத்திரம் அல்ல எல்லாவற்றுக்கும் இது பொருத்தமானது. அந்த வகையில் ஆரம்ப படைப்பாளிகளாக இருந்தால் என்ன- எம்மைப் போல இரண்டும் கெட்டான் நிலையில் உள்ள படைப்பாளிகளாக இருந்தாலும் சரி ஒரு கட்டத்தில் இருந்து அடுத்த கட்டத்திற்கு போகவேண்டியவர்களே. எனினும் அவ்வாறான வளர்ச்சி என்பது ஒப்பீட்டு அளவில் குறை பாடாகவே உள்ளது.

இதனை சிறுகதையாளர் கள் உணர்ந்துகொள்ள வேண்டும். எனினும் தொடர்ந்து எழுதுவதன் மூலம் தான் இந்த நிலையை சீர் செய்ய முடியும். ஆனால் தொடர்ந்து எழுதுவது என்பது பல சிறுகதையாளர்களால் முடியாமல் உள்ளது.

எம்மிடையே இரண்டு வகை பிரச்சினை உள்ளது. சிறு கதைகளில் உச்சங்களைத் தொட்டவர்கள் என்று கூறப்படுபவர்கள். அதன் பின்னர் நகராமலே உள்ளனர். இவர்களை ஒரு வகையான பிரச்சினையாகக் கொண்டால் ஒரே வகையான அல்லது ஒரேதன்மையான படைப்புக்களைத் தொடர்ந்து எழுதிக் கொண்டு இருப்பவர்களை இரண்டாவது வகையான பிரச்சினையாகக் கொள்ளலாம்.

இந்த இரண்டு பிரச்சினைகளையுமே நாம் பெருமையாகக் கொள்ள முடியாது.

ஆனால் ஒரு நிலையை அடைந்து அசைய மறுப்பவர்களைக் கைவிட்டு பொன். சுகந்தன் போன்ற புதியவர்களை ஆரம்பப் படைப்பாளிகளை தூக்கிப் பிடித்து ஊக்குவிக்க வேண்டிய தேவை இருக்கின்றது. அதுவும் தொடர்ந்து மாங்காய்களைக் கீறிக்கொண்டு இருக்க வேண்டாம். என்ற அன்பான வேண்டுகோளுடன்-

சமூகப் பற்றோடு தனது பார்வையூடாக புதிதாக சில கருத்துக்களை முன்வைக்கும் பொன். சுகந்தன் இன்னும் சமூகத்தையும் உலகத்தையும் நன்றாகக் கூர்ந்து பார்த்து சிந்தித்து அதிகம் ஆக்க பூர்வமாக எழுதிப் படைக்க வாழ்த்துகின்றேன் என உடுவை எஸ். தில்லை நடராஜா அவர்கள் குறிப்பிடுவது இந்த அர்த்தத்தில் தான்.

"தன்னைச் சூழவுள்ள சகமனிதர்கள் சந்திக்கும் வாழ்க்கை அனுபவங்களால் ஏற்படும் உணர்வு நிலைகள் எழுப்புகின்ற அதிர்வுகள் மானுடத்தின் குரலாக எழுத்தாளனைப் பாதிக்கிறது. இத்தாக்கம் எழுத்துருவில் அவனூடாக வெளிவருகின்றது.

பட்டறிவு, எழுத்தாற்றல், துல்லியமான சமூகப் பார்வை, மொழி ஆளுமை என்பனவற்றின் துணையோடு பேச முற்படுகின்றான். பேசும் குரலில் குறை இருக்கலாம் ஆனாலும் அவனின் குரல் போலியாக இருக்கமுடியாது. ஏனெனில் அவனின் எழுத்தின் நோக்கம் புனிதமாக இருப்பதால்.

இந்த வகையான எழுத்தாளனாகவே பொன். சுகந்தனை என்னால் பார்க்க முடிகிறது. என முன்னுரையில் மதிப்புக்குரிய ஞானரதன் அவர்கள் குறிப்பிடுவது சிறப்புக் குரியது.

பொன். சுகந்தனின் படைப்பின் நோக்கம் அல்லது படைப்புக்கான உந்துதல் அவரை சிறப்படைய வைக்கிறது. அதன் காரணமாகவே படைப்பாக்கத்தின் குறைபாடுகள் இருந்தாலும் அவரை சிறுகதையாளனாக சுட்டிக்காட்டவேண்டி உள்ளது.

உண்மையில் இவ்வாறான படைப்புந்துதல் உள்ள படைப்பாளர்கள் தம் படைப்புக்களை மிகச் செம்மையாக வெளிக்கொண்டுவரும் போது மிகுந்த உன்னத நிலைக்கு வரமுடியும்.

பொன். சுகந்தனின் கதைக் கருக்கள் மிக நன்றாக அமைந்த போதும் ஏதோ ஒரு அவசரப் பாணியில் எழுதப்பட்ட கதைகளாக அவை அமைந்து விட்டன. என் கண்மணி மீனா வாத்தியார், நாடக மேடை போன்ற பல சிறுகதைகள் கதைச் சுருக்கங்கள் போல அமைந்து விட்டன.

இதற்கு ஒரு காரணமாக இக்கதைகள் வெளிவந்த பத்திரிகைகளை சுட்டிக்காட்ட முடியும். ஏனெனில் இந்தப் பத்திரிகைகள் இவ்வாறான கதைகளையே தொடர்ந்தும் தமது வசதிக்காக பிரசுரித்து வந்துள்ளன; வருகின்றன. அதன் பாதிப்பே பொன். சுகந்தனிலும் ஏற்பட்டு இருக்கவேண்டும்.

சிறுகதையாளர்கள் கவனிக்க வேண்டிய மிக முக்கியமான விடயம் சொற்சிக்கனம் ஆகும். அது தவிர பொருத்தமான இடத்தில் மிகப் பொருத்தமான சொற்களை பாவித்தல்.

"தங்கைக்காக" என்னும் கதையின் முதலாவது பந்தியில் சிறுகதையாளன் பின் வருமாறு எழுதிச் சொல்கிறான்.

"துள்ளிக் குதித்து எழுந்த பிரதீப் வேகமாகப் பல்லை ஒரு கையால் துலக்கிய படி கிணற்றடிக்கு விரைந்தான். கிணற்றடியில் தந்தை முகம் கழுவிக்கொண்டு நின்றார். வேகமாகச் சென்ற பிரதீப்!

இதில் வரும் வேகமாக என்ற சொல்- மீளவும் பயன் படுத்தப்பட்டது எழுத்து நடைக்கு ஒரு இடையூறாகவே இருக்கும்.

"நாடக மேடை" கதையில் வரிக்குவரி "பாறாத்தைப் பாட்டி" என்ற சொல் வந்து தேர்ந்த வாசிப்புக்கு இடையூறாக அமைந்து விடுகின்றது.

இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

தொகுப்பில் உள்ள கதைகளில் வெள்ளிநாதத்தில் வெளியான "மாறிவிட்ட மாற்றங்கள்" என்னும் சிறுகதை ஒப்பீட்டு அளவில் ஏனைய சிறுகதைகளை விட மேலோங்கியுள்ளது.

சிறப்பான கதைக் கருக்களை தேர்வு செய்யும் பொன். சுகந்தன் அதை சித்தரிப்பதிலும் தேர்ச்சி பெறவேண்டும். அதுவே அவரை மேலும் ஒளிர்விடச் செய்யும்.

## படித்ததில் பிடித்தது

# நிறங்களுக்குப் பின்

கடைசி அழிவு
முற்றிலும் வேறுவிதமாயிற்று
அழிவின் வழிமுறைகள்

அழிவு மழை
அழிக்கத் தொடங்கியது
ஒவ்வொன்றின் வண்ணமாக

தோட்டத்து மலர்கள்
எவ்வித எதிர்ப்புமின்றி
முதலில் கைவிட்டன
தம் வண்ணங்களை

இரத்தமாய் பெருக்கெடுக்கிறது
காட்டு மலர்களின் வண்ணங்கள்

பறவைகள்
கரையும் தத்தமது வண்ணங்களை
வியந்து பார்த்தபடி
பறந்துகொண்டிருக்க

பச்சோந்திகள்
வண்ணமிழந்த மரங்களில்
குழம்பித் திரிந்தன

வண்ணத்துப் பூச்சிகளுக்கு
சொல்லத்தான் ஆறுதல்
யாரிடமும் இல்லை

வண்ணங்கள் மறைந்த
ஓவியங்களின் வசீகரத்தில்
ஓவியன்
பீதியில் அழத் தொடங்கினான்
கவிஞனின் வரிகளிலிருந்த
வண்ணங்கள்

அரசியல் வாதியின் குரலிலிருந்த
வண்ணங்கள்

குழந்தைகளின்
சினுங்குதல் வண்ணங்கள்

காதலின் துரோகத்தின்
வண்ணங்கள்

கரைந்தோடும் வரை
நமக்குத் தெரியவில்லை
அவை எத்தகைய வண்ணங்களென்று

வெற்றிடங்களின் வண்ணங்களை
இன்று நாம் பார்க்கிறோம்
சொல்ல யாரிடமும் வார்த்தைகள் இல்லை

பெருக்கெடுக்கிறது நமக்கு களைப்பூட்டிவிட்ட
வண்ணங்களை அழிக்கும் ஊழியின் மழை

பின்னர் எதற்கும் இருக்கவில்லை
விசேஷப் பெயர்கள்
அழகுகள், அழகின்மைகள்,
ஒழுங்குகள், ஒழுங்கின்மைகள்.


அமைதியாக முழுகத் தொடங்கியது
கரைந்த வண்ணங்களின்
பெருங்கடலில் வண்ணங்களற்ற உலகம்.

தமிழில் - இ.றஜித்,
ஆங்கிலத்தில் - T.ரெக்கிபார்மாட்.

இனியவள்

**பெரும்பாலும் பெண்களும் தமக்கேற்படும் வன்முறைகளுக்கு எதிராகக்குரல் கொடுக்க அச்சம் கொள்கிறார்கள். அதன் விளைவுகள் பாரதூரமான விளைவுகளாகத்தொடரும். அச்சுறுத்தல்களையும் கொண்டிருக்கும். சுமப்பதே வாழ்வு என்ற நிலைக்கு அவளை வலிந்து தள்ளி பேசாதிருப்பதே பாதுகாப்பு எனும் நிலையை அடைவதாய் வேதனையே வாழ்வாகிறது.**

# பெண்களைக் களங்கப்படுத்தும் பிரச்சாரங்கள்



ஒரு பெண் பிறந்து வளருகின்ற ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும் பெற்றோர், குடும்பம், சமூகம் என்பன பெண்ணுக்குரிய இலக்கணங்களை அவள் மீது சுமத்தி அதனைச் சமூக நீதி- நடைமுறையாக்கி விடுகின்றனர். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற வரையறைக்குட் படுத்தி அவள் நிலத்தையே பார்த்து நடக்க வேண்டுமென்று சிறு வயதிலிருந்து சிந்தனையில் ஊட்டப்படுகிறது. ஆணுக்குச் சமமாக நீதி நியாயம் பேசினால் பெண்ணுக்குரிய வரையறைகளை மீறியவள் என்பதாக நிந்திக்கப் படுகின்றாள்.

இன்றைய காலகட்டத்தில் பெண்களுக்கு எதிரான பிரச்சாரங்கள் தவிர்த்துக்கொள்ள முடியாதனவாகின்றன. ஒரு பெண்ணுக்கு உளரீதியான பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் வேளையில், மனமொடிந்த நிலையில் தற்கொலை முயற்சிக்குக்கூட இட்டுச் செல்லக்கூடியது. பெண்ணைப் பெரிதும் பாதிக்கும் வேளையில், இந்நிலைமையானது இந்நிலைமையை ஏற்படுத்துபவருக்கு ஏதாவது ஒரு குறிக்கோள் நிறைவேறியதாக இருக்கலாம். ஒரு பெண்ணா னவளுக்கு இருக்கக்கூடிய ஒழுக்கம், வாழ்வியற்பண்புகளை கறை படியவைக்கும் இந்நிகழ்வானது பயமுறுத்தல், பழிவாங்கல், மிரட்டல், அறிவுறுத்தல் போன்ற இன்னோரன்ன பாணியில் நிகழ்கின்றது.

ஒரு பெண்ணுக்கேற்படும் களங்கமான பரம்பல் களுக்கெதிராக எவளவு தூரம் துன்புற்று எதிராகக் குரல் கொடுப்பினும் அவளது வாழ்வை சிதைத்து ஒழித்து நடைப் பிணமாக, வாழாவெட்டியாக, வாழ வைப்பதற்கே பெண்ணைக் களங்கப்படுத்துவோர் தன் முனைப்பாக இருப்பர். ஒரு தனித்த பெண்ணுக்கெதிராக, பல்வேறுபட்ட வதந்திகளும், வசைமொழிகளும் தனிப்பட்டவர்களோ அல்லது ஒரு குழுவோ அல்லது சமூகமோ ஏற்படுத்தினால், அவள் திரும்பி 'அப்படி இல்லை' என்பதாக தகுந்த காரணம் காட்டியும் ஏற்றுக்கொள்ளாமல் மறுபடியும் பிரசாரங்களால் அவளை இருளாக்குவதே குறியாகி விடுகின்றனர்.

பெண்மை என்ற காரணத்துக்காக குறிப்பிட்ட பெண்ணுக்கும் அவளது குடும்பத்துக்கும் இழிவு படுத்தும் கண்ணோட்டத்தில் அரங்கேறும் பிரச்சாரங்களை யாவரும் இனிதே வரவேற்பர். நியாயப் படுத்துவர். பெண் தன் பொறுமைகளைத் தாண்டிக் குரல் கொடுக்கும் ஒவ்வொரு கணமும் அவளுக்கு பலத்த அடிகள் போட்டு பலவீனப் படுத்தி விடுகின்றார்கள். ஒரு பெண்ணின் உளப்பாதிப்பை யாரும் கண்டுகொள்ளமாட்டார்கள் கருத்திலெடுக்க மாட்டார்கள்.

பெரும்பாலும் பெண்களும் தமக்கேற்படும் வன் முறைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்க அச்சம் கொள் கிறார்கள். அதன் விளைவுகள் பாரதூரமான விளைவு களாகத்தொடரும். அச்சுறுத்தல்களையும் கொண்டிருக்கும். சுமப்பதே வாழ்வு என்ற நிலைக்கு அவளை வலிந்து தள்ளி பேசாதிருப்பதே பாதுகாப்பு எனும் நிலையை அடைவதாய் வேதனையே வாழ்வாகிறது.

உளத்தாக்கங்கள் ஏற்படும் போது, யார்? யார்? என்ன செய்கின்றார்கள் என்பது புரியாதபோது அவள் தன் நிலை தடுமாறி கருத்துருவங்களை வெளியிடுகிறாள். தனக்கு நேர்ந்த அவலங்களை யாரிடம் கூறுவது என்று தெரியாமல் மீட்டிப் பார்க்கும்போது மென்மேலும் அவள் குற்றவாளியாக்கப் படுகின்றாள். நெருக்கடிக் காலத்து மனித இசைவாக்கமாக பெண் கூட அதீத மனவெழுச்சித் தாக்கங்களுக்கு உள்ளாகி நிற்கின்றாள். சில சந்தர்ப்பங் களில் உடல் நோய்களையும் ஏற்படுத்தி விடுகின்றது.

பெண் என்பதற்கு மேலாக இல் வாழ்க்கையி லிருந்து விடுபட்டவள், அவளுக்குரிய கடமைகள் என்றும் கண் விழித்தபடியே இருக்கும்போது தூக்கம் அவளிடமிருந்து நிரந்தரமாய் பறிபோய் விடுகிறது. கடமை கட்டாயமாகின்றது. தனியொருத்தி பல்வேறு விதமான அழுத்தங்களை அனுபவிக்கும் போது அல்லற் படுகின்றாள்.

பெண்கள் சக தோழிகளுடனோ, சுற்றத்தவருடனோ, அவர்கள் குறிப்பிட்ட இயல்புகளைக் கொண்டிருப்பார்கள். தம்மை மீளாத பெருந்துயருக்கு ஆளாக்குவார்கள் என்பதான நினைவுடன் பழகுவதில்லை. ஒரு பெண் சமூக வாழ்வில் எதிர்பாராத விதமாக பாதுகாப்பற்ற நிலைகளை, அதிகாரமான அணுகுமுறைகளை, வலிந்து திணிக்கும் போது பணிய மறுக்கின்றாள். அவள் மனிதநேயமற்றவளாக, வெறிபிடித்தவளாக வர்ணிக்கப்படும் போது அவளது வேதனையின் வெளிப்பாடாக, தனது மனித நேயச் செயல்கள் வெளிப்படுத்தப்படும் போது பரிகசிக்கப்பட்டு இழிவு படுத்தப்பட்டு விடுகின்றன.

"தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்"
-இயேசு

பெண்ணாய்ப் பிறந்த காரணத்துக்காக அவள் பிரசாரங் களின் வன்மையான போக்கில் இருளாக்கப்படுகின்றாள். விருப்ப மில்லாதவைகளுக்கு பணிந்த காரணங்கள் நிறையப் பெண்களுக்கு அனுபவங்களாகின்றன.

"ஒரு சுதந்திர மனநிலையுடன் ஒருவர் மற்றவருடைய வார்த்தைக்கு செவி மடுத்து உள்வாங்கி, நன்மை, தீமைகளை உணர்ந்து செயல் புரிந்தால், இச் செயலானது சுதந்திரத்தோடு கூடிய கீழ்ப்படிவாக இருந்திருந்தால் குறிப்பிட்ட நபர் பாதிப்புக்குள்ளாகமாட்டார்.

பிரச்சாரங்களை மேற்கொள்பவர்கள், ஒரு பெண்ணின் வாழ்வு தமது நடத்தைப் பாங்குகளால் அழித்தொழிக்கப் பட்டதையெண்ணி சற்றும் சிந்திக்காமல், அவளின் நிலையை மென்மேலும் மோசமாக்கி கருத்துக்கள் பரப்பலில் ஈடுபடுகின்றனர். ஏனெனில் தாம் நிம்மதியாக வாழ்வதாக நினைத்து விடுகின்றார்கள். இந்தப் பிரச்சாரங்களால் பாதிக்கப்பட்ட பெண் வேறு எவரிடமும் அணுகி, இந்தப் பெருந்துன்பத்தை துயருடன் கூறும்பொழுது "உன்னை வருத்தும், வேண்டுமென்றே புண்படுத்துவதற்காக எழுதப்பட்டவையாக இருக்கலாம். இனிமேல் இவ்வாறானவற்றை கண்கொடுத்து பார்க்க வேண்டாம். நீ மன ஆறுதலடைவாய்" இப்படியான ஒரு நிலை பெண் களுக்குத் தேவையா? எதற்கும் பெண் தானே வருந்துகிறாள்.

இந்தப் பிரச்சாரம் எனும் போர்வையில் வாழ்வின் அச்சுறுத்தலாகத் தொடரும் இந்நிலை பெண்களைச் சாடுவதாய் பிறப்பெடுக்கப்பட்டுள்ளது. "ஒரு மனிதன் இன்னொரு மனிதனை எவ்வாறு அபிப்பிராயம் கொள்கிறானோ, அதே அபிப்பிராயத்தை மற்றொரு மனிதனும் கொள்வதற்குரிய உரிமை இருக்கிறது. இலக்கியத்தில் கூட கண்ணகி மிகவும் மென்மையான குணம் படைத்தவள். கோவலனுடன் பாதயாத்திரை போகும் போது இயற்கையழகில் வயலில் மிதந்து கொண்டிருந்த கெண்டை மீன்களை பார்த்து பயந்தவள், இறுதியில் தன் நிலை மறந்து கோபமுற்று, மதுரையையே எரித்தாள். காரணம் செய்யாத பழியை தலையில் சுமத்தியமையே. ஆனால், இன்றைய சூழ் நிலையில் அநியாயங்கள் நியாயப்படுத்தப்பட்டுவிடும் அதைவிட தொடரும் பயமுறுத்தல்கள்... பழிவாங்கலாய் தொடர்ந்து கொண்டேயிருக்கும். தீப்பட்ட காயங்களாய் அடிக்கடி வலிகளைத் தந்துகொண்டேயிருப்பார்கள். உழைப்பவனுக்கு மரியாதை குறையுமிடத்தில், உதைப்பவனுக்கு மதிப்பு வளரும். உத்த மமான காரியத்திலும் மேன்மை பெறுவதற்கு எப்பொழுதும் பாடுபடுவோம். ●

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**கே:- இந்த பணிகள் தி.மே.செயலகத்தால் எவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்டு வருகின்றன?**

பதில்:- நாம் மக்களிற்கான அடிப்படைத் தேவைகளையும் கிராமத்திற்கான பொதுத்தேவைகளையும் இனங்கண்டு அதற்குரியவாறு நிறுவனங்களை தீர்மானித்து வேலைக்கான அனுமதியை வழங்குகின்றோம். 01ஆம் 2ஆம் கட்ட நடவடிக்கையை ஒருங்கிணைப்பதற்காக உருவாக்கப்பட்ட செயலணியை 03 கட்ட நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் நடவடிக்கைக்காக திட்ட அமுலாக்கல் ஒருங்கிணைப்பு செயலகமாக மாற்றி அச் செயலகமூடாக இந்நடவடிக்கைகளைக் கண்காணித்து ஒருங்கிணைத்து வருகின்றோம்.

**கே:- கிராமத்திற்கான தேவைகள் இனம் காணலில் மக்களின் பங்களிப்பு என்ன?**

பதில்:- புதிய கிராமத் திட்டமிடலில் தங்களது கிராமங்களை எதிர்காலம் நோக்கிய சிந்தனையுடன் திட்டமிட்டு நிறுவனங்களிற்கு தெரியப்படுத்தி புதிய நோக்கில் கிராமத்தை கட்டியெழுப்புவதற்காக ஆலோசனையை வழங்கும் பொறுப்பு மக்களிற்கு வழங்கப்பட்டுள்ளது. அந்நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காகவும் ஊரக மேம்பாட்டுப் பேரவை உருவாக்கப்பட்டுள்ளது. அவர்கள் இச்செயற்பாடுகளில் ஆலோசனைகளை வழங்குவதுடன் கண்காணிப்பு வேலை முன்னேற்றம் போன்றவற்றை அவதானித்து தெரியப்படுத்துகின்றனர். எனவே அவர்களின் பங்களிப்புடன் கிராமமட்டத்தில் இச் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது. அதேவேளை வீடுகள் தொடர்பான தீர்மானத்தில் மக்களினால் தீர்மானிக்கப்படும் வீட்டு வடிவங்களிற்கேற்பவே வீடுகள் அமைக்கப்பட வேண்டும் என நிறுவனங்களிற்கு அறிவுறுத்தியுள்ளோம்.

**கே:- கட்டுமானங்கள் தொடர்பாக நியமங்கள் ஏதாவது வழங்கப்பட்டுள்ளதா?**

பதில்:- எதிர்காலத்தை கருத்தில் கொண்டு கட்டுமானங்கள் தொடர்பாக நியமங்கள் நிறுவனங்களிற்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அந் நியமங்கள் பின்பற்றப்படுவதையும் பணிகளின் முன்னேற்றத்தையும் கண்காணித்து வருகின்றோம்.

**கேள்வி:- தற்போதைய மீள்கட்டுமானப் பணியின் முன்னேற்றம் தொடர்பான தங்களின் கருத்தென்ன?**

பதில்:- நிறுவனங்களின் வேலைகளின் வேகம் திருப்திகரமானதாக இல்லை. உதாரணமாக முல்லைத்தீவில் ஒரு சில நிறுவனங்களே வேகமாக செயற்படுகின்றன. ஏனைய நிறுவனங்களின் வேலைகள் மந்தகதியிலேயே இருக்கின்றன. வேலை முன்னேற்றம் தொடர்பாக எமக்கு பூரண திருப்தியில்லை.

**கேள்வி:- தற்போதைய முழுமையான மேம்பாட்டு திட்டங்களின் நிலை என்ன?**

பதில்:- தற்போது பொதுக்கட்டமைப்பை முடக்கிய அதே சக்திகள் ஆட்சியதிகாரத்திற்கு வந்துள்ளன. அதேவேளையில் சர்வதேச சமூகமும் எமது பகுதி அபிவிருத்தி தொடர்பாக மௌனமாகவே இருக்கின்றது. அத்துடன் புதிய அரசாங்கமும் புரியாத புதிரான நடைமுறையின் கீழ் ஏதோ செய்யப்போவதாக கூறிக்கொள்கின்றது. ஆனால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட மக்களின் முறையான பங்கேற்றலில்லாமல் இதனை எவ்வாறு செய்யப்போகிறது என்பது கேள்விக்குறியாக உள்ளது. இவர்கள் மாறி மாறி ஒவ்வொன்றை பேசுகிறார்களே தவிர ஒருவரும் உருப்படியான ஒரு திட்டத்தை எமக்கு முன்வைக்கவில்லை. இன்று மக்கள் விரக்தியின் வேதனையின் விளிம்பில் நிற்கின்றனர். எம்மக்களின் துன்பங்களிற்கு தக்க முறையில் தீர்வினை முன்வைப்பதற்கு எவரும் முன்வருவதாக தெரியவில்லை. நாம் எமது சொந்தக்காலில் நிற்கும் வரை எமது மக்களிற்கான பூரணப்படுத்தப்பட்ட மேம்பாட்டை அடையமுடியாதென்பது தொடர்ச்சியாக நாம் பெற்றுக்கொண்டு வருகின்ற படிப்பினையாகும். சுனாமி எனப்படும் மனித பேரவலத்தின் பின்னரும் இப்படிப்பினையே மீளவும் பெறப்பட்டுள்ளது. அதேவேளையில் இந்த அடிப்படைத் தேவைகளை செய்ய ஒத்துக்கொண்ட மனித நேய அமைப்புக்கள் வேலைகளின் முன்னேற்றம் திருப்திகரமானதாக இல்லையென்றாலும் ஒத்துக்கொண்ட உதவிகளை இயன்றவரை விரைவாக செய்திடுமாறு இடைவிடாது வலியுறுத்திவருகின்றோம். ●



# பொருண்மிய வாசல்

## எங்கள் பொருண்மிய வளம்

**சிதம்பரதிரு**

அண்மைக்காலமாக பொழிந்து தள்ளிய மாரிமழை பல பகுதிகளை வெள்ளக்காடாக்கியது. குடியிருப்புக்களை காவு கொண்டது. பயிர்களை அழித்தது. குளங்களை உடைப்பெடுக்கும் நிலைக்குக் கொண்டு சென்றது. சில குளங்கள் உடைக்கவும் செய்தது. எமக்கு இன்பமாகவும் இனிமையாகவும் இயற்கைதான். இவ்வாறு எம்மை காவுகொள்ளவும் கதி கலங்கவும் செய்கின்றது. புயல், சுனாமி,வரட்சி என்று எல்லாமே இயற்கையின் கட்டுப்பாட்டில்தான் இயங்குகின்றன. அதனால்தான் இன்பத்தையும் துன்பத்தையும் அவை தருகின்றன.

எமது நாட்டைப் போலதான் இந்தியாவின் தமிழகத்திலும் தொடர்ச்சியான மழை காரணமாக பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின. மக்கள் பலர் கொல்லப்பட்டனர். வேறுபல அழிவுகளும் நடந்தன.

எம்மைப்போல அங்கும் இம்முறை கடும்மழை எனக் கருத்துக்கள் சொல்லப்பட்டன. ஆனால் இயற்கை விஞ்ஞானியான நம்மாழ்வார் அவர்களின் கருத்து வேறுவிதமாக இருக்கின்றது.

இப்போது தமிழகத்தில் பெய்த மழை போலவே 1961,1971, 1977 ஆகிய வருடங்களிலும் கடும்மழை பெய்துள்ளது. ஆனால் அப்போது ஏற்படாத சேதம் இப்போதுதான் ஏற்பட்டுள்ளது.

இதற்கான காரணத்தை அவர் தமிழகத்து மக்கள் மீதுதான் சுமத்துகின்றார். இயற்கை தன் நியதியை மீறவில்லை. இயற்கை எப்போதும் போலவேதான் உள்ளது. ஆனால் மக்கள் ஆகிய நாங்கள் தான் எமது நியதியை மீறியுள்ளோம் என்கிறார் அவர்.

எங்கெல்லாம் வீடுகள் கட்டடங்கள் கட்டக்கூடாதோ அங்கெல்லாம் கட்டடங்களைக் கட்டியுள்ளோம். நீர்ப்பாசனக் கால்வாய்கள், நீர் ஓடும் பாதைகள் போன்றவற்றை ஆக்கிரமித்து பெரிய பெரிய கட்டடங்களை அமைத்துள்ளோம் என்று குறிப்பிடும் அவர் ஏரிகள், குளங்களை மூடி அமைக்கப்பட்ட கட்டடங்களின் விபரங்களையும் பட்டியல் இடுகின்றார்.

தண்ணீர் தேங்க வேண்டிய, ஓடவேண்டிய இடங்களை மனிதர்கள் ஆக்கிரமித்ததால் ஏற்பட்ட விளைவுதான் வெள்ளமும், அழிவும் என்கிறார் அவர்.

சிறப்புமிக்க அவருடைய கருத்தும் தனியே தமிழகத்துக்கு மாத்திரம் பொருத்தமானது அல்ல. எமது வளவுகளில் நாலு வேலிக்குள் நின்றுவிடுவது அல்ல இயற்கையின் செயற்பாடு.

எந்தக் காரியத்தை நாம் செய்தாலும் இயற்கையோடு இணைந்தே செயற்பட வேண்டும் என்பதை நாமும் உணர்ந்து கொள்வோம்.

*(17ஆம் பக்கத் தொடர்ச்சி)*

யாழ்ப்பாணத்திலும் ஏனைய இடங்களிலும் கோவில்களில் சுதை, கருங்கல், மரச் சிற்பங்கள் செய்த போதும் அவற்றிலும் பல குறைபாடுகளுள்ளன. சாஸ்திர ரீதியான, சாஸ்திர ரீதியற்ற சிற்பங்களின் அளவுகள் எனப்பல குறைகள் உள்ளன.

எம் தொழிலை தெய்வமாக மதித்து தெரிந்த வகையில் தப்பு தண்டா இடம்பெறாமல் செய்யவேண்டும். இத் தொழிலின் பாரம்பரியத்தை அறிந்து சிறந்த முறையில் மரபு தவறாமல், அவற்றின் அளவு ஒழுங்குவிதிகளிற்கு அமைவாக ஆரோக்கியமான கலைப் படைப்புகளை உருவாக்க வேண்டும். இதனால் ஆரோக்கியமான கலைஞர்களை உருவாக்க முடியும்.

**நாம்:- தனிச் சிறப்பு வாய்ந்த கலைஞர் என்ற வகையில் அங்கீகரித்த விருதுகள் பற்றி...?**

**அமரசிங்கம்:-** அரசாங்கத்தால் அங்கீகாரம் பெற வேண்டும். அவர்கள் வழங்குகின்ற விருதுகளைப் பெறவேண்டுமென்பது கட்டாயம் இல்லை. கலாபூசணம் என்ற விருது கலைஞன் கேட்டு வாங்குகின்ற விருது. கலைஞனை கௌரவிக்க மதிக்க வேண்டுமானால் உண்மையான கலைஞனை அவை தேடி வர வேண்டும். யாரிற்கு எங்க எப்படி என்னத்திற்காக என்ற தேடல் அரசாங்கத்திடம் இருக்கவேண்டும்.

ஈழத்து கலைஞர்கள், கல்வியாளர்கள், கோவில் தர்மகர்த்த சபையினர் எனப் பலர் விருது வழங்கிக் கௌரவித்துள்ளனர். சிற்பகலாரத்தினம், சிற்பசிரோண்மணி திட்டப நுட்ப சிற்பக்கலாமணி, சிற்பக்கலாநிதி சிற்பகலா வினோதன், ராதாதி நாதஸ்வர சிற்பகற்பக என்ற விருதுகளுடன் பதக்கம் அணிவித்து, பொன்னாடை போர்த்திக்கௌரவித்துள்ளமையே போதுமானது.

சித்திரத் தேர்க்கலை, நாதஸ்வரக் கலையில் மிகவும் மூத்த அனுபவமுள்ள கலைஞர் அராலியூர் அமரசிங்கம் மிக அபூர்வமான நாதஸ்வரக் கருவியை கடையம் ஒரே ஒரு கலைஞர் என்ற பெருமையுடைய கலைஞர் நம்மிடமுள்ளார்.

ஈழத்திலும் புலம் பெயர்ந்த நாடுகளிலும் பல சீர்களை உருவாக்கிய கலைஞர் அவர்களின் ஊடாக தன் தனித்துவத்தை வெளிக்காட்டி வரும் அன்றைய பாராட்டிற்குரியது.

ஒரே நேரத்தில் இரு வேறுபட்ட தளங்களில் இயங்கிவரும் கலைஞரை கௌரவித்து அவரது கலைவடிவங்களை ஆவணப்படுத்துவதே கலைஞரிற்கும் கலை வடிவங்களிற்கும் நாம் செய்யும் நினைவழியா நிகழ்வாக இருக்கும்.

## மரக்கறிப் பயிரைத் தாக்கும் பொதுவான நூச்சி பீடைகள்

விவசாய உற்பத்திப் பொருட்களின் விளைவில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகளில் பூச்சி பீடைகளும் ஒன்றாகும். இப்பீடைகளின் தாக்கத்தை விவசாயி சரியாக இனம் காணாததாலும், தவறான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதாலும் உற்பத்திச் செலவு அதிகரித்து பொருளாதார நட்டம் ஏற்படுவதுடன் இயற்கைச் சமநிலை குழப்பப்பட்டு பீடைகளின் பெருக்கம் அதிகரிக்கவும் வழிசெய்கின்றது. இதனால் பீடைகளைச் சரியாக அடையாளம் கண்டு உரிய முகாமைத்துவ முறைகளைக் கைக்கொள்வது அவசியமாகின்றது.

மரக்கறிப் பயிர்களைத் தாக்கும் பீடைகளைப் பொறுத்தவரையில் சில பீடைகள் குறிப்பிட்ட ஒரு பயிரையோ அல்லது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பயிர்களையோ தாக்கிச் சேதத்தை ஏற்படுத்துகின்றன.

வேறு சில பீடைகள் ஒன்றுக்கு மேற்பட்ட பல இனப்பயிர்களைத் தாக்கிச் சேதத்தை ஏற்படுத்துகின்றன.

ஒன்றுக்கு மேற்பட்ட மரக்கறிப் பயிர்களைத் தாக்கும் சில முக்கிய பூச்சி பீடைகளாவன;

1.இலைச்சுரங்க மறுப்பி
2.அழுக்கணவன்
3.வெண் ஈ
4.பச்சை இலை தத்தி
5. சிவப்பு சிற்றுண்ணி

### 1. இலைச்சுரங்க மறுப்பி:-

இது இலையான் குடும்பத்தைச் சேர்ந்த மிகச் சிறிய பூச்சியாகும். ஏறக்குறைய 2-3 மி.மீ நீளமுடையது. கறுப்பு நிறமான இதன் தலையின் இரு கண்களுக்குமிடையில் மஞ்சள் நிறம் காணப்படும்.

இலையின் மேற்றோலினூடாக இழையங்களில் செலுத்தப்படும் நீள்வட்டமான வெண்ணிற முட்டைகளிலிருந்து வெளிவரும் கருமை கலந்த மஞ்சள் நிறமான கீடங்கள்-அவற்றின் வாயுறுப்பில் காணப்படும் கொழுக்கி போன்ற அமைப்புடைய உறுப்புக்களின் மூலம் இலையில் மேல், கீழ் தோல்களுக்கு இடைப்பட்ட பகுதியில் ஊடறுத்து உணவு தேடும். இதனால் உணவு தேடும் பகுதி சுரங்கம் போல் ஊடறுத்து காணப்படும்.

தாக்கம்:- இப்பூச்சியானது கத்தரி,தக்காளி,பயிற்றை, வெண்டி, பாகல், புடோல், பூசணி போன்ற பல பயிர்களைத்தாக்குகின்றது.

தாக்கப்பட்ட இலைகளில் தாறுமாறான அமைப்பில் ஊடறுக்கப்பட்டு இலையின் கலங்கள் அகற்றப்படுவதனால் தாவரத்தின் ஒளித்தொகுப்பு பாதிக்கப்படுகின்றது.

இப்பீடைகள் தாக்கிய பகுதிகளினூடாக வேறு பீடைகள் பயிரைத் தாக்குவதற்கும் இதன் தாக்கம் ஏதுவாகின்றது.

**வாழ்க்கை வட்டம்:-**

இலைக் கலங்களினுள் இடப்படும் முட்டைகள் 2-3 நாட்களில் கீடங்கள் எனப்படும் இதன் புழு வெளிவருகின்றது. இவை கலங்களை அரித்து உணவு தேடுகின்றன. ஏறக்குறைய ஏழு நாட்கள் வரையில் இப்பருவம் காணப்படும்.

முதிர்ந்த கீடம் இலையிலிருந்து வெளியேறி மண்ணினுள் தனது கூட்டுப்புழுப் பருவத்தைக் கழிக்கின்றது.

கூட்டுப்புழுப் பருவம் சுமார் 7-14 நாட்களாகும். இதன் வாழ்க்கை வட்டம் வெப்பநிலையைப் பொறுத்து 15-28 நாட்கள் வரையில் வேறுபடும்.

**சுவாத்தியம்:-**

சூழல் வெப்பம் அதிகரித்து காணப்படும் போது இதன் தாக்கம் கூடுதலாகக் காணப்படும்.

ஆடி-புரட்டாதி வரையான காலப்பகுதியில் கூடிய தாக்கம் காணப்படும்.

இருப்பினும் இதற்கு உவப்பான சுவாத்தியம் நிலவும் ஏனைய காலங்களிலும் இதன் தாக்கம் அவதானிக்கப்படுகின்றது.

**விருந்து வழங்கி:-**

1.சாறணை (தடிச்சல்,சட்டி பசளி)
2.மூக்கறைச்சி.

**முகாமைத்துவம்:-**

1.தாக்கம் அவதானிக்கப்பட்ட இலைகளை வெட்டி அகற்றிவிடுவதால் தாக்கத்தைக் குறைக்கலாம்.

2.இது மஞ்சள் நிறத்தால் கவரப்படுவதால் மஞ்சள் நிற பொலித்தீனில் கிறீஸ் பூசி ஒரு மீற்றர் உயரத்தில் கட்டிவிடுவதால் முதிர்பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம்.

3.எல்லைப் பயிராக சணல் நாட்டிவிடுவதால் இது முதலில் சணலைத் தாக்கும். இதனை அவதானித்து சணலுக்கு மருந்து விசிறி கட்டுப்படுத்தலாம்.

**இரசாயனம்:-**

டிப் ரெக்ஸ் 400 மி.லீ /ஏக்



### 2. சிறுத்தலைவன்:-

இது மென்மையான உடலமைப்பையும் குத்தி உறிஞ்சும் வாயுறுப்பையும் கொண்ட ஒரு பூச்சியாகும். பொதுவாக இவற்றுக்கு இறக்கைகள் கிடையாது. இருப்பினும் முதிர்ந்த பெண் பூச்சிகள், தான் இருக்கும் விருந்து வழங்கித் தாவரத்தில்- உணவு இல்லாமல் போகும் போதும் இறக்கை முளைத்த பூச்சிகளை உருவாக்குவதால் இவை இடம்பெயரக்கூடியதாகவுள்ளது.

தாவரச் சாற்றிலிருந்து இவற்றினால் குத்தி உறிஞ்சப்படும் தாவரச் சாற்றில் மேலதிகமானது இவற்றின் வயிற்றின் பின்பக்கம் காணப்படும் முளைகள் போன்ற இரண்டு "புன்கொம்புகள்" வழியாக வெளியேற்றும். குளுக்கோஸ் கொண்ட இக்கழிவு தேன் கழிவு எனப்படும். இனிமையான இக்கழிவுகளை உண்பதற்காக இவை இருக்கும் இடங்களில் எறும்புகளின் கூட்டம் காணப்படும்.

தேன் கழிவை உண்ணும் எறும்புகள் இவற்றை இடம் மாற்ற உதவுகின்றன. இது "ஒன்றிய வாழ்வு" எனப்படும்.

**தாக்கம்:-**

இது கத்தரி, தக்காளி,வெண்டி,பயிற்றை போன்ற பல பயிர்களைத் தாக்குகின்றது.இவற்றால் தாக்கப்பட்ட பயிர்கள் வளர்ச்சி குன்றியும் இலைகள் வடிவம் மாறியும் காணப்படும்.

இவற்றால் வெளியேற்றப்படும் கழிவுகளில் "சூட்டி மோல்" எனப்படும் கரும்பூஞ்சணம் விருத்தியாவதால் தாவரத்தில் இவற்றால் பாதிக்கப்பட்ட பகுதிகள் கருமை நிறமடைந்து காணப்படும்.

இதுமட்டுமன்றி தாவரங்களில் "வைரஸ்" நோய்களைப் பரப்பும் காவிகளாகவும் தொழிற்படுகின்றன.

**வாழ்க்கை வட்டம்:-**

வரட்சியான காலங்களில் பெண் பூச்சிகள் கூடுதலான அணங்குகளை உற்பத்தி செய்கின்றன. சில சமயங்களில் இவற்றின் வயிற்றிலேயே முட்டைகள் பொரித்து அணங்குகள் வெளிவருகின்றன.

இது" கன்னிப் பிறப்பாக்கல்" எனப்படும். இவற்றின் அணங்குகள் தாய்ப்பூச்சியை ஒத்ததாகக் காணப்படும். 7-10 நாட்களில் இவை முதிர்ந்த பூச்சிகளாகின்றன.

**சுவாத்திய நிலை:-**

உலர்வான,வரட்சியான காலநிலையில் இவை கூடுதலாக விருத்தியடைகின்றன.

பங்குனி-சித்திரை மற்றும் ஆடி-ஆவணி மாதங்களில் கூடிய தாக்கம்.

**விருந்து வழங்கி:-**

பெரு நெருஞ்சி மற்றும் இப்பில் இப்பில் போன்றவை.

**இரைகௌவி:-**

பெண் லேடிபேட் வண்டு-இதன் முட்டைகளை உண்ணும்.

**முகாமைத்துவம்:-**

- ☐ எறும்புகளை கட்டுப்படுத்துதல்
- ☐ வயல் சுகாதாரம்
- ☐ சமச்சீர் பசளை
- ☐ விருந்து வழங்கிகளை அழித்தல்
- ☐ தாவர பீடை நாசினி-உள்ளி கரைசல்

**இரசாயனம்:-**

1.மார்சல் 400 மி.லீ / ஏக்
2.டைமீதோயேற்-400 மி.லீ / ஏக்

### 3. வெண் ஈ:-

Homoptera

ஓமோப்டரா-வர்ணம். இவை வெள்ளைப் பூச்சி என அழைக்கப்படும். வெண்ணிறமான மிகவும் சிறிய அந்து போன்ற அமைப்புடைய பூச்சியாகும்.

*(மிகுதி அடுத்தவாரம்)*

# தமிழ்தாயக விளையாட்டு மேலோண்மையை சர்வதேச தரத்திற்கு உயர்த்திவதற்காக உழைத்தவர்

## நாட்டுப்பற்றாளர் குணரட்ணம்

தமிழ்தாயகத்தின் விளையாட்டு மேலாண்மையச் சர்வதேச தரத்திற்குக் கொண்டுசெல்ல வேண்டும் என்ற அசையாத நம்பிக்கையுடன் வாழ்ந்து அதற்காகவே உழைத் துவந்த பிரபல விளையாட்டு வீரரும் நிர்வாகியுமான நாட்டுப்பற்றாளர் ஏ.எஸ்.குணரட்ணம் அவர்களைத் தமிழர் தேசம் இழந்துவிட்டது.

இவரின் ஆரம்பகாலம் அவர் கடந்து வந்தபாதைகள் கடினமானவை.சுவாரஸ்யமானவை. வரலாற்றில் என்றுமே மறக்கப்பட முடியாததுமாகும்.

சாதாரண குடும்பத்தில் பிறந்து கல்வியுடன் விளை யாட்டை நேசித்து வந்ததுடன் நீண்டதூர போட்டியில் (மரதன்) தன்னை பிரபலப்படுத்திக்கொண்டார்.

இந்தநிலையில் கால்பந்து,கரப்பந்து மற்றும் பல விளை யாட்டுக்களிலும் இவர் அதீத ஆர்வம் கொண்டிருந்ததுடன் அதன்பால் இளைஞர்களையும் கவரச்செய்தார். இறக்கும் வரை வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டுத் துறையுடன் முழுமையாகத் தன்னை இணைத்துக்கொண்ட குணரட்ணம் இலங்கை தேசிய மட்டத்தில் பெரிதும் மதித்து பேசப்படும் ஒருவராக இருந்தார். விளையாட்டுத்துறை தொடர்பான விதிகளை நிலைநிறுத்துவதில் உறுதியும் கடுமையும் காட்டும்அவர் விளையாட்டு வீரர்களுடனும் நிர்வாகி களுடனும் பழகுவதில் எப்பொழுதும் எளிமையான வராகவே காணப்படுவார்.



சாதாரண விளையாட்டு உத்தி யோகத்தராக தனது விளையாட்டுச் சேவையை ஆரம்பித்த நாட்டுப்ப ற் ற ா ள ர்

புகழும் பெற்றவராக குணரட்ணம் இருந்ததுடன் வைத்தீஸ்வரா வித்தியாலயத்துக்கும் புகழ்ஈட்டிக் கொடுத்தார்.

விளையாட்டுத் துறையில் நன்கு அறிந்திராத சாதாரண குடும்பத்தில் பிறந்த இவர் விளையாட்டுத் துறையில் ஒரு தனித்துவத்தையே கொண்டிருந் தார் என்பது வியப்பான ஒரு விடயமே.

பாடசாலையில் வருடந்தோறும் நடைபெறும் இல்ல விளையாட்டுப் போட்டியில் விவேகானந்தா இல்லத்தில் இடம்பெறும் அவர் தனது இல்லத்திற்கான முதலாவது புள்ளியை பெற்றுக்கொடுப்பதுடன் தனது இல்லத்தை ஆரம்பத்தில் முன்னிலை பெறச்செய்தவர். இறுதியில் அந்த இல்லம் கடைசியான இட்த்தையே பெரும்பாலும் பெறும் அதனை நகைச்சுவையாக ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மை கொண்டவர்.

ஆரம்பத்தில் இவர் மரதன் மற்றும் நீண்டதூர போட்டிகளில் பெற்றுக் கொடுக்கும் புள்ளி தான் அந்த இல்லத்தை முதலில் முதன்மை பெறச் செய்யும்.

இவருக்கு குறிப்பிடத்தக்க பெரிய வெற்றியாக அமைந்தது யாழ். மாவட்ட பாடசாலை விளையாட்டு போட்டிகளில் நீண்ட தூர ஓட்டங்களில் வெல்ல முடி யாத ஒருவராக இவர் இருந்ததுதான். இவரது இன்னு மொரு அறிமுகமாக 1960 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ். மாவட்டத்தில் வருடாவருடம் நடைபெறும் தினகரன் விளையாட்டுப் போட்டியில் பங்கேற்கும் வாய்ப்புக் கிடைத்தது.

அப்போது பல்வேறு விளையாட்டுகளும் நடைபெற்றதுடன் முழுமையான மரதன் போட்டியும் நடைபெற்றது. அதில் இலங்கையின் மிகச்சிறந்த ஓட்ட வீரர்களுடன் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. இதில் அவர் இரண்டாவது இடத்தைப் பெற்றார்.

முதலாவது இடத்தைப் பெற்றவர் அகில இலங்கையில் முதன்மையானவர் என்று கருதப்பட்ட கீன்பண்டா (இராணுவத்தை சேர்ந்தவர்)

இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால் கீன்பண்டாவுக்கும் குணரட்ணத்துக்கும் இடையிலான இடைவெளி 15 யார் தூரமாக அமைந்தமைதான்.

இதுவரை அவரை இலங்கை ரீதியான போட்டியில் கலந்துகொள்ளும்தரத்தை அடையாளப்படுத்திக் கொடுத்தது. அதன் பின்னர் அவர் இலங்கை ரீதியாக அறியப்பட்ட ஒருவராக வெளிக்கொணரப்பட்டதுடன் விளையாட்டுத்துறையில் முழுமையான ஈடுபாட்டைக் கொடுத்ததுடன் பெரும் சாதனைகளை ஈட்ட வேண்டும் என்ற உறுதிப்பாட்டையும் ஏற்படுத்தியது.

யாழ்.குடாநாட்டில் பாடசாலைகளுக்கிடையிலான மரதன் போட்டியில் ரசிகர்கள் மத்தியில் ஒரு புரட்சி யையே ஏற்படுத்தினார் என்றால் மிகையில்லை.

விளையாட்டுத்துறை ஆற்றலில் சந்தேகத்துக்கு இடமின்றி இருந்த அந்த காலத்தில் அவரை சிறிலங்கா அரசோ அல்லது அந்த நேரத்தில் யாழ்.குடாநாட்டில் ஏதும் கழகங்களோ அமைப்புக்களோ இருந்து உற் சாகப்படுத்தியிருந்தால் அவர் நிச்சயமாக சர்வதேச ரீதியில் சாதனை புரிந்தவராக வாழ்ந்திருப்பார்.

ஏனெனில் அவரிடம் அந்தளவுக்கு தேடலும் ஊக்கமும் இருந்தது என்கிறார் அந்த நண்பர்.இவரது காலத்தில் யாழ்.மாவட்டத்தில் விளையாட்டுத்துறைக்கு தட்டிக்கொடுக்கக் கூடிய நிலை இருக்கவில்லை. சாதா ரணமாக உதைபந்து, கரப்பந்து,கிரிக்கெட் போன்ற வற்றிலேயே நாட்டம் செலுத்தினார்.

இந்த நிலையில் Rek and fild இல் (சுவட்டு நிகழ்வு) தன்னை அடையாளப்படுத்தினார்.

நீண்ட தூர ஓட்டம் என்று எடுத்துக்கொள்ளும்போது யாழ். மாவட்டத்தில் ஜெரி என்று அழைக்கப்படுகின்ற அல்லது 'கொட்டப்பாக்கு' என செல்லமாக அழைக் கப்படும் குணரட்ணத்தின் பெயர்மறக்க முடியாதது.

குணரட்ணம் தனது அதீத திறமை மற்றும் மொழித் திறமை ஆகியவற்றால் மாகாண விளையாட்டுத்துறைக் கான உதவிப்பணிப்பாளர் பதவிவரை உயர்ந்தார். யாழ் வைத்தீஸ்வரா கல்லூரியில் தனது பாடசாலை வாழ்க்கையை ஆரம்பித்த குணரட்ணம் கல்வியுடன் தனது விளையாட்டையும் அங்கமாகக் கொண்டிருந்தார்.

இதனால் யாழ்.குடாநாட்டில் இருந்து முழு மையான விளையாட்டு வீரராக அகில இலங்கை ரீதிவரை சென்றவர்களில் இவர் முக்கியமானவர்.

அனைத்து விளையாட்டுக்களிலும் ஈடுபாடு கொண்ட இவர் தனது பிரதான விளையாட்டாக நீண்ட தூர ஓட்டங்களை தன்னகத்தே கொண்டிருந்தார். குறிப்பாக மரதன் போட்டியில் யாழ். மாவட்டத்திலேயே வெல்ல முடியாத வீரராக திகழ்ந்தார்.

களைப்பின்றி நீண்ட தூரம் ஓடும் இவரின் அழகு ஒரு வித்தியாசமான அனுபவம். வெற்றி தோல்விகளை சாதாரணமாக ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையை பிரதானமாகக் கொண்டிருந்த அவர் முழுக்க முழுக்க ஒரு விளையாட்டு வீரனுக்குரிய அனைத்து பண்புகளையும் கொண்டிருந்தார்.

இவரைப் பொறுத்து தான் தோல்வி அடையும் பட்சத்தில் வெற்றி பெற்றவரை தட்டிக்கொடுப்பது, தான் வெற்றி பெறும்போது அதனை பெரிதாக எடுக்காத பண்பும் அவரை விளையாட்டு வீரராக கடைசிவரை தொட ர பிரதானமான ஒன்றாக பின்பற்ற உதவியது.

இவரது குருநாதரான சிவப்பிரகாசபிள்ளை விளையாட்டில் குணரட்ணம் அவர்களை வளர்ப்பதற்கு ஆழமான உறுதி கொண்டிருந்தார்.

வைத்தீஸ்வரா வித்தியாலயம் கல்வியில் தரமான பாடசாலையாக இருந்தாலும் விளையாட்டு தரத்தில் மூன்றாம் நான்காம் தரத்தைக் கொண்ட பாடசாலையாகத்தான் இருந்தது. ஆனால் அதே பாடசாலையில் இருந்து ஒரு முதல்தர விளையாட்டு வீரராக வெளியில் வந்து யாழ்.மாவட்டத்தில் பேரும்

சியான்

(10 ஆம் பக்கத் தொடர்)

ஆனால் எதிரி எவிய எறிகணை அந்தக் காவலரணின் மேலே விழுந்து காவலரணை மூடுவதற்குப் பயன்படுத்தியிருந்த கட்டைகள் அவர்களுக்கு மேலே விழுந்துவிட்டன. உடனே ஏனைய அணிகளினால் தோண்டி எடுக்கப்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர்.

மருத்துவமனைக்கு சென்று சுகமடைந்து ஓய்விலிருந்தவன், ஒவ் வொரு நாளும் தன்னோடிருந்த போராளிகளைக் கூட்டிச் சென்று தனது வீட்டில், சாப்பாடு கொடுத்து மகிழ்ந்தான்.

சில காலங்கள் கப்டன் வேலவனும், அவரது தம்பியான வீரவேங்கை ஜெயசுதனும் சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியிலேயே இருந்தனர். அதே சமகாலத்தில் இவர்களது மூத்த அக்கா சிறிமதி (குறிஞ்சி வள்ளி) சோதியா படையணியில் போராளியாக இருந்தாள். இந்த மூன்று முத்துக்களும் தாயக விடுதலைக்காக போராடிக்கொண்டிருந்தனர். ஒரே படையணியில் தமயனும், தம்பியும் இருந்ததினால், பெரும்பாலான சண்டைகளுக்கு ஒன்றாகவே சென்று வந்தனர்.

இப்படியான நாள் ஒன்றில்தான்,முல்லைத்தீவுச் சண்டைக்கென இருவரும் சென்று வந்து, சத்ஜெய எதிர் நடவடிக்கைச் சமரில் குதித்தபோது , சத்ஜெய மூன்றில் வேலவனின் தம்பி வீரவேங்கை லெப்.ஜெயசுதன் வீரச்சாவடைந் தான்.தம்பி களத்திலேயே வீரச்சாவடைந்துவிட்டான் என்ற செய்தி அறிந் ததும், அப்போதிருந்த களநிலைமையைக் கருத்தில் கொண்டு விடு முறையோ, வீரச்சாவிற்குச் செல்வதற்கோ அவன் கேட்கவே இல்லை. இந்த நிகழ்வுதான் அந்தப் போராளியின் தாயக நேசிப்பிற்கு உச்சச்சாட்சியானது.

தம்பியின் வீரச்சாவிற்கு போகவில்லையா என்று பொறுப்பாளர் கேட்க, தம்பியின் வீரச்சாவைவிட தாய்நாடுதானே முக்கியம் என்று உணர்வோடு பதில் கூறினான்.தம்பி வீரச்சாவடைந்து ஒன்றரைமாதத்திற்குப் பிறகுதான் வீடு சென்றான். அப்போது அவனது வீட்டுக்காரர் இடம்பெயர்ந்து அக்கராயனில் இருந்தனர். அங்கு சென்று ஓரிரு நாட்களில் மீண்டும் களமுனைக்கே வந்துவிட்டான்.

தொடர்ந்து பரந்தன் ஆனையிறவு,ஜெயசிக்குறு எதிர்ச்சமர், தாண்டிக்குளம் சண்டைக்குச்சென்று போற்றத்தக்க வகையில் சண்டைசெய்கிறான்.

அதேகாலப்பகுதியில் தனது அக்காவை சந்தித்து கதைக்கிறான்."அக்கா தம்பியும் வீரச்சாவு" நீ வீட்ட போவன் என்றுசொல்ல அவள் மறுக்கிறாள். கப்டன் வேலவனும் வற்புறுத்தாமல் தான் நின்ற ஜெயசிக்குறு களத்திற்கு வருகிறான்.அதே நேரத்தில்தான் ஓமந்தை தாக்குதலுக்கு தலைவரினால் திட்டம் போடப்பட்டு, தளபதி தீபனின் தலைமையில் படையணி நகர்கிறது. அதில் கப்டன் வேலவனும் அணித்தலைவனாக தனது அணியுடன் சண் டைக்கு இறங்குகிறான்.

ஏற்கனவே தனது தம்பியை இழந்த நிலையில் இந்தக் களத்தில் மீண்டும் அக்காவும், தம்பியுமாக இறங்குகின்றனர். எதிர்முனையில் அக்காவும், மறுமுனையில் கப்டன் வேலவனும் இறங்கிச் சண்டைசெய்ய அந்தச் சண்டையோ மிகவும் மோசமாக உக்கிரமாக மாறுகிறது.

எதிரியும்நாமும் கலந்து கைகலப்புச் சண்டைவரை உக்கிரமடைய, தானும அக்காவும் இந்தச் சண்டையில் பங்குகொள்வதை நினைத்து என்ன எண்ணினான் என்பதை அறியும் முன்பாக அந்தக்களத்தின் வெற்றிக்காகத் தனது உயிர் கொடையை விலையாகக் கொடுத்து வீரச்சாவடைகிறான். அதே களத்தில் அவனது பாசம்மிகுந்த அக்கா விழுப்புண்ணடைந்தது அவனுக்கு தெரிவதற்கு நியாயமில்லைத்தான். நாட்டிற்காய் தம்பியைக் கொடுத்தான், தன்னையும் கொடுத்து வீரவரலாறு படைத்தான்.


## தமிழ் ஊடக அறிவியல் கல்லூரி

**ஊடகவியல் சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரல்**



ஊடகவியல் இன்றைய உலகை வனைகின்ற கருவியாகிவிட்டது. ஆனால் தமிழ் ஊடகவியலில் முறைமைசார் ஊடகவியலாளர்களுக்கு மிகுந்த பற்றாக்குறை காணப்படுகின்றது. இதற்கு தீர்வு காணும் நோக்கிலும், ஆரோக்கியமானதொரு ஊடகச் சூழலை ஏற்படுத்தும் நோக்குடனும் தமிழ் ஊடகவியல் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கற்கைநெறி வார இறுதி நாட்களில் ஒரு வருடத்துக்கு நடைபெறும். விரிவுரை, செய்முறை, செயல்விளக்கம், களப்பயிற்சி, கள ஆய்வு என்ற ரீதியில் கற்கை இடம்பெறும். கற்பித்தலும், வழிகாட்டலும் நவீன சாதனங்களின் பிரத்தியேகத்துடன் துறைசார் அனுபவர்களால் நடாத்தப்படும்.

முதற்கட்டமாக ஊடகவியல் சான்றிதழ் கற்கைநெறி 2006இல் ஆரம்ப மாகின்றது. இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:-**

- க.பொ.த. சாதாரண தரத்தில் தமிழ் பாடத்தில் திறமைச்சித்தி உட்பட சித்தியடைந்திருப்பதுடன் ஊடகவியலில் ஆர்வம்
- ஊடகத்துறையில் பணியாற்றுதல்.

**கட்டணம்.**

கற்கைநெறிக்கு 6000 ரூபா கட்டணம் அறவிடப்படும். இது மூன்று தவணைகளாகச் செலுத்தப்படலாம்.

**விண்ணப்பத் திகதி.**

அனைத்து விண்ணப்பங்களும் 03.01.2006 இற்கு முன்பாகக் கிடைக்கக்கூடியதாக, தமிழ் ஊடக அறிவியல் கல்லூரி, பிரதானசாலை அறிவியல் நகர், கிளிநொச்சி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விண்ணப்பத்துடன் சுய முகவரியிடப்பட்டு தபால்தலை ஒட்டப்பட்ட 8X4 அளவுள்ள கடித உறையை இணைக்கவும்.

தலைசாளர்,
தமிழ் ஊடகஅறிவியல் கல்லூரி,
பிரதான தெரு,
அறிவியல் நகர், கிளிநொச்சி.

(சி.13607)


# உளவியல் நவீனம்...

## அத்தியாயம்- 21

### பகுதி -78

இஞ்ச பாருங்கோ!.... இதுகள் வீதி அடையாளங்கள். இது இரண்டாவது சாலை. இஞ்ச நியூயோர்க்கிலயும் ஒரு இரண்டாவது சாலை இருக்குது. இது நில் போ சமிக்கை" தனது உலகை நிர்மாணிப்பதில் டிப்ஸ் மூழ்கிப் போயிருந்தான். "போ அடையாளம் இந்தா இருக்குது. நில் அடையாளம் இந்தா இருக்குது. இது ஒரு வேலி. இது ஒரு புதர் வேலி. இந்த விமானம் எல்லா இடமும் சுத்திச் சுத்திப் பறக்குது" என்று சொல்லி விட்டு மகிழ்ச்சிப் பெருக்குடன் அங்குமிங்கும் விமானம் வேகமாகப் பறப்பது போல் விமானத்தைக் கையில் வைத்து அபிநயித்தான்.

"படகு நதியில நிக்குது. அது நதியில அங்கயும் இஞ்சயும் போய்வருகுது. விமான நிலையத்தில மூண்டு விமானங்கள் நிக்குது. இஞ்ச ஒரு உல்லாச விடுதி இருக்குது. இத எங்க வைப்பம்? அத இஞ்ச வைப்பம். அதுக்கு முன்னால பத்திரிகை விற்கிறவரின்ர வண்டிய வைப்பம். இஞ்ச இன்னும் கொஞ்சம் வீடுகள வைப்பம் இப்ப கடையள் கொஞ்சம் வேணும்.



ஏனெண்டா ஆட்களுக்கு கடையள் வேணும் கடையள் எங்க இருக்குது?... ஆ... இங்க இருக்குதுகள். இங்க ஒரு ஆசுப்பத்திரி இருக்குது. ஒரு வாகனம் திருத்திற இடமும் இருக்குது. என்ர உலகத்த படைக்கிறதுக்கு தேவையான எல்லாம் இஞ்ச இருக்குது" என்றான் டிப்ஸ்.

"ஓம் அப்பிடித்தான் தெரியுது" ஆமோதிப்பது போல் நான் சொன்னேன்.

"இந்த ஆசுப்பத்திரி பெரிசா இருக்குது. நான் அத முதலாவது சாலையில வைக்கப் போறன். சாலையின்ர பெயர்ப்பலகை அப்பிடித் தான் சொல்லுது. அது தான் ஆசுப்பத்திரி. சுகமில்லாத ஆக்களுக்கு உரியது. அங்க நோய்களும் மருந்துகளும் மணக்கிறது போல இருக்கும். அங்க இருக்கயுக்குள்ள துக்கமாகத் தான் இருக்கும். இங்க ஒரு வடிவான வீடு இருக்குது. அது வீதிக்கு தெற்குப் பக்கமாக இருக்குது. இது ஒரு மிகப் பெரிய... சத்தம் நிறைஞ்ச நகரம். இதுக்கு ஒரு பூங்கா தேவை. இந்த இடத்தில நான் பூங்கா ஒண்ட ஆக்கப் போறன். இந்த மரங்களையும் புதர்களையும் அங்க வைக்கப்போறன். பள்ளிக்கூடம் இந்தா இருக்குது. இல்ல அது வேண்டாம்." சொல்லி விடடு பள்ளிக்கூடத்தை பெட்டிக்குள்ளேயே போட்டு விட்டான்.

"இது இன்னொரு வீடு இந்த வீடுகள் எல்லாம் நெருக்கமா இருக்குதுகள். அதுகளில ஆக்கள் இருக்கினம். அவயள் அயல் ஆக்கள். சினேகிதமானவை. இப்ப நான் விமான நிலையத சுத்தி வேலி போடப் போறன். பாதுகாப்புக்காகத்தான் அத வேலிக்குள்ள வைக்கப்போறன். இப்ப புதர்கள வைப்பம்."

பச்சை நிறமான நுரை றப்பரில் செய்த புதர்களை இப்போது எடுத்துக்கொண்டான்.

"இதுகள் எல்லாம் வளருற தாவரங்கள. இந்தப் புதர்களும் மரங்களும் தான் கனக்க மரங்கள் இருக்குது. சாலை நெடுக வரிசையா மரங்கள் நிற்குதுகள். இந்த மரங்களில எல்லாம் இலைகள் இருக்குது. இந்த நகரத்தில இப்ப கோடை காலம்."

மண்டியிட்டு அமர்ந்தபடி டிப்ஸ் என்னைப் பார்த்தான். தன் கைகளை அகல விரித்துக்கொண்டே புன்னகை செய்தான்.

"அருமையான... இலைகள் நிறைந்த... கோடை காலம்! நகரத்தின்ர வெளிவிளிம் புக்கு அப்பால பண்ணையொண்டு இருக்குது. அங்க கொஞ்சப் பசுக்கள விடப்போறன்" என்று சொல்லிவிட்டு ஒரு வரிசையில் பசுக்களை அடுக்கினான்.

"அதுகள் தங்கட கொட்டிலுக்குப் போகுதுகள். அதுகள் பால் கறக்குறதுக்கெண்டு வரிசையா நிக்குதுகள்." என்றவன் கீழே குனிந்து மேலும் உருக்களை வகை பிரிக்கத் தொடங்கினான்.

"இப்ப ஆக்களைப் பார்ப்பம் ஒரு நகரத்தில ஆக்கள் இருக்கவேணும். இந்தா தபால் காரன் இருக்கிறார்." என்று விட்டு அந்த உருவை நான் பார்க்கும்படி நீட்டிப்பிடித்தான்.

அவற்ர பை நிறையக் கடிதங்கள் இருக்குது. அவர் எல்லா இடமும் சுத்தி வந்து ஒவ்வொரு வீட்டிலயும் நிக்கிறதப் பாருங்க. ஒவ்வொருவருக்கும் அவையவைக்கெண்டே கடிதங்கள கொடுக்கிறார். டிப்ஸுக்கு என்ன மாதிரி? ஓம் டிப்ஸுக்கும் ஒரு கடிதம் இருக்குது. அதுக்குப்பிறகு அவர் ஆசுப்பத்திரிக்குப் போறார். சுகமில்லாத ஆக்களுக்கும் கடிதம் தாறார். அப்பிடி அவையளுக்கு கடிதம் கிடைக்கயுக்குள்ள அவையள் மனதுக்குள்ளேயே சிரிப்பினம். இங்க ஒரு ட்றக் விமான நிலையத்துக்கு வருகுது. விமானங்கள் உருண்டு வெளியில வந்து ஆக்களுக்கு அடிக்காம இருக்கிறதுக்காகத்தான் வேலிகள் வைச்சிருக்கு. இந்த விமானம் இப்ப வானத்தில கிளம்பிப் போகப்போகுது.

ஒரு விமானத்தை நகரத்தின் மேலாக பறப்பது போல் கொண்டு சென்றான்.

"இஞ்ச பாருங்க, நகரத்துக்கு மேலால... நகரத்துக்கு மேலால இது போகுது. பெப்ஸி கோலாவில இருக்கிற மாதிரி துவாரங்கள நீல வானத்தில வெட்டிவிடுகுது. அதுக்கூடாக வானமண்டலம் பிரகாசமாத் தெரியுது. பிறகு இந்த விவசாயி என்ன விசயமெண்டு பார்க்க வெளியில வாறார்...." தனது நாடகத்தை இடையிலேயே நிறுத்திக்கொண்டு தான் உருவாக்கிக்கொண்டிருக்கிற உலகத்தைப் பார்த்தபடி அமைதியாக அமர்ந்திருந்தான். நெடுமூச்சொன்று அவனிடமிருந்து வெளிக் கிளம்பியது. பெட்டியிலிருந்து வேறு உருக்களையும் அவன் வெளியே எடுத்தான்.

"இந்தா கொஞ்சப் பிள்ளையளும் அவையளின்ர தாயும் இருக்கினம்." என்று மீண்டும் தொடங்கினான். "அவையள் பண்ணையொண்டில இருக்கிற அன்பு நிறைஞ்ச வீட்டில ஒண்டா இருக்கினம். இஞ்ச கொஞ்சம் ஆட்டுக்குட்டிகளும் கோழிக்குஞ்சுகளும் இருக்குதுகள். இந்தா அம்மா வீதியால நடந்து நகர்ப் பக்கமா போறா. எங்க போறா அவ? சிலவேளை இறைச்சி வாங்க இறைச்சிக் கடைக்குப் போறாவோ தெரியேல்ல. அவ ஆசுப்பத்திரிக்குக்கிட்டவா போகும் வரைக்கும் நடந்து போய்க்கொண்டே இருக்கிறா. அவ ஏன் ஆசுப்பத்திரிக்குக் கிட்ட நிக்கிறா எண்டு நான் யோசிக்கிறன்"

"நானும் தான் யோசிக்கிறன்" என்று நான் சொன்னேன்.

டிப்ஸ் நீண்ட நேரம் அசையாமல் இருந்தபடி அந்த அம்மா உருவையே பார்த்துக் கொண்டு இருந்தான். இறுதியிலே "ஓம் அவ அந்தா நிற்கிறா ஆசுப்பத்திரிக்கு பக்கத்தில தான் அவ நிற்கிறா. வீதியில பல கார்களும் ஒரு தீயணைப்பு வண்டியும் ஓடிக்கொண்டிருக்கு. தீயணைப்பு வண்டி வரயுக்க மற்ற எல்லாம் வழிவிட்டுக் குடுக்கவேணும். கார்களையும் தீயணைப்பு வண்டியையும் வீதியில் அங்குமிங்குமாக தள்ளிக்கொண்டே தானே அவற்றினுடைய ஓசைகளையும் எழுப்பினான்.

"சரி எங்க அந்தப் பிள்ளையள்? ஓ..... இந்தா ஒரு பிள்ளை இருக்குது. அவன் தனியா நதிபபக்கமாப் போறான். பாவம் அந்தப் பிள்ளை. யாருமில்லாமத் தனியாத்தான் இருக்குது. நதியில முதலைகள் நீஞ்சிக்கொண்டிருக்குதுகள். இந்தா... இங்க ஒரு பாம்பும் இருக்குது. சில நேரங்களில பாம்புகள் தண்ணியிலயும் இருக்கிறதுகள். அந்தப்பிள்ளை நதிக்குக் கிட்டக்கிட்டப் போறான். ஆபத்துக்குக் கிட்டவாப் போறான்."

மீண்டும் ஒரு முறை தன் செயற் பாட்டை நிறுத்திய டிப்ஸ் தன்னுடைய உலகத்தின் மீது பார்வையைச் செலுத்தினான். திடீரென்று அவன் புன்னகை செய்தான். "நான் நகரங்கள கட்டுறவனா ஆகியிற்றன்" என்றவன் தொடர்ந்தான்."இது சமையல் காரன். குப்பைகள வெளியில கொட்டிக்கொண்டிருக்கிறார். இந்தப் பெண் கடைக்குப் போறா. ஆனா இந்தப் பெண் கோயில்ல போய் பாட்டுப் படிக்கப் போறா. அவ ஒரு நல்ல பெண்."

ஏற்கெனவே நதிக்கரையில் நின்று கொண்டிருந்த சிறுவனுக்குப் பக்கத்தில் இன்னொரு சிறுவனை வைத்தான்.

"இந்தப் பையன் முதல் போன பையனத் தேடிப்போறான்" என்று விளக்கினான். "அந்தப் பையன் நதியுக்குள்ள இறங்கி தண்ணிக்குள்ளால நடந்து போறான்.

அவனுக்கு முதலைகள பற்றியோ பாம்புகள பற்றியோ எதுவும் தெரியாது. ஆனா மற்றப் பையன் இவன்ர நல்ல சினேகிதன்: அவன் இவனுக்கு எச்சரிக்கைக் குரல் கொடுத்து படகொண்டில ஏறும்படி சொல்கிறான். அப்ப அந்தப் பையன் படகுக்க ஏறிக் கொள்கிறான்.... கண்டீங்களா? படகுக்க இருக்கிறதுதான் பாதுகாப்பானது. இரண்டு பையன்களும் ஒரு படகுக்குள்ள ஏறிக்கொள்ளுகினம். அவையள் இரண்டு பேரும் நல்ல சினேகிதர்கள்" அந்த இரண்டு பையன்களையும் ஒரு படகுக்குள் வைத்துவிட்டான்.

இந்தா ஒரு பொலிஸ்காரர் இருக்கிறார். அவர் வாகனங்கள நிப்பாட்டிக்கொண்டும் போகவிட்டுக் கொண்டும் இருக்கிறார். "எல்லாரட நன்மைக்காகவும் தான் அவர் அப்பிடிச் செய்கிறார்." மேலும் பல வீதி அடையாளங்களை அங்குமிங்குமாக வைத்தான். "சில வீதிகளில போகலாம்... வரலாம். சில வீதிகளில ஒருதிசையில மட்டும் போகலாம். இது ஒரு ஒருவழிப் பாதை" சொல்லிவிட்டு பெட்டிக்குள் இருந்த பாடசாலை ஒன்றை எடுத்தான். "இதில பாடசாலை இலக்கம் ஒன்று எண்டு எழுதியிருக்கு. எங்களுக்கு ஒரு பள்ளிகூடம் வேணும். பிள்ளைகள் போறதுக்கு ஒரு பள்ளிக்கூடம் வேணும்." சொல்லிவிட்டுச் சிரித்தான். "பிள்ளையளுக்கு பாடம் சொல்லிக் குடுக்கிறதுக்கெண்டு ஒரு பள்ளிக்கூடம் இந்தா இருக்கிற பிள்ள... இது ஒரு சின்னப் பொம்பிளப் பிள்ள. அவ வீட்டிலேயே இருப்பா. தன்ர அம்மா அப்பா சகோதரனோட அவ வீட்டில இருப்பா. அவ தனிமையில இருக்கக்கூடாதெண்டு தான் வீட்டிலயே இருக்கட்டும் எண்டு அவை விரும்பினவை.

பெட்டிக்குள்ள இருந்த சிறிய மனித உருக்கள் எல்லாவற்றையும் எடுத்து தான் உருவாக்கிக்கொண்டிருக்கிற உலகத்தில அங்குமிங்குமாக வைத்தான். மனிதர்கள் நிறைந்த உலகமொன்றை அவன் உருவாக்கியிருந்தான்.

"இதுதான் வீடு" என்று ஒரு வீட்டைச் சுட்டிக் காட்டிக்கொண்டே சொன்னான். "இந்த வீட்டின்ர பின் வளவில ஒரு பெரிய மரம் நிற்குது. அது மிகவும் விசேஷமான மரம். இந்த மனிதர் வீதியால நடந்து வாறார். அவர் வீட்ட வாறார். அவர் தான் அப்பா" (தொடரும்)




# உலகை ஆட்டிப் படைக்கும் புதிர் விளையாட்டு

**புதிர் -13**

அதனுடைய சித்திரவதையை அனுபவியுங்கள். அதுதரும் பேரின் பத்தை உணருங்கள்.

இந்தப் புதிரில் ஒருபெரிய சதுரத்துள் 3X3 அளவிலான 9 சிறிய சதுரங்கள் உள்ளன. இந்த ஒவ்வொரு சதுரங்களுக்குள்ளும் 1-9 வரையான எண்களை நிரப்ப வேண்டும். ஒருமுறை பயன்படுத்திய எண்ணை இந்தச் சதுரங்களில் மீண்டும் பயன் படுத்தக் கூடாது.

அதேபோலவே பெரிய சதுரத்து நிரைகளிலும் நிரல்களிலும் ஒரு முறை பயன்படுத்திய எண்ணை மீண்டும் பயன்படுத்தக்கூடாது.

ஒருகுறிப்பிட்ட புதிருக்கு ஒரு சரியான தீர்வு மட்டும் உள்ளது.

*(இதற்கான விடை அடுத்தவாரம்)*

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | | 5 | 6 | | 2 | 9 |
| 2 | | 5 | | | | 6 | | |
| | | 3 | 4 | | | 1 | 5 | 8 |
| 5 | | | | 9 | | | | 1 |
| 3 | 2 | | 8 | 4 | 1 | | 9 | 6 |
| 6 | | | | 2 | | | | 4 |
| 8 | 5 | 9 | | | 7 | | 3 | |
| | | 6 | 2 | | | | 1 | 5 |
| 1 | 4 | | 5 | 3 | | 8 | | |

## சுடோக்கு (SUDOKU)

ஒற்றை இலக்கம் என்று அதற்கு பொருள். றூபிக்சதுர முகிக்குப் பின் (Rubik Cube) உலகிலேயே ஆகப் பிரபலமான எண்- விளையாட்டாக உருவாகியிருப்பது சுடோக்கு ஆகும்.

இப்புதிரை தீர்க்கத்தொடங்கினால் அதைக் கீழே வைக்கவே மாட்டீர்கள்.

எண்கணித அறிவு எதுவும் இதற்குத் தேவையில்லை. உங்களுக்குத் தேவையானதெல்லாம் தர்க்கபூர்வமான மனமும் ஒரு பென்சிலும் ஒரு அழிறப்பரும் மட்டும்தான். முயற்சியைத் தொடங்குங்கள்.

**புதிர்-12இற்கான விடையினை சரிபார்த்துக் கொள்ளுங்கள்**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 6 | 2 | 8 | 5 | 4 | 9 | 7 | 3 |
| 4 | 8 | 9 | 1 | 3 | 7 | 2 | 5 | 6 |
| 5 | 7 | 3 | 9 | 6 | 2 | 1 | 8 | 4 |
| 9 | 2 | 8 | 4 | 7 | 1 | 3 | 6 | 5 |
| 3 | 4 | 1 | 5 | 2 | 9 | 8 | 1 | 7 |
| 7 | 5 | 6 | 3 | 8 | 6 | 4 | 2 | 9 |
| 8 | 1 | 4 | 7 | 9 | 5 | 6 | 3 | 2 |
| 6 | 9 | 5 | 2 | 1 | 3 | 7 | 4 | 8 |
| 2 | 3 | 7 | 6 | 4 | 8 | 5 | 9 | 1 |

# பாவலன் பதில்கள்

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதிஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை,கிளிநொச்சி.*

*பாவலா!*

*அன்பும் பண்பும் நிறைந்த ஒரு மனிதனை எப்படி இனங்காண்பது?*

*டெனி,*
*பூநகரி.*

அப்படியான ஒரு மனிதனை அதே போன்ற தன்மைகள் கொண்ட இன்னொரு மனிதனால் தான் இனங்காண முடியும். நீங்கள் எப்படிப் பட்டவர்?

*பாவலா வணக்கம்!*

*நான் ஒரு கதை எழுதப் போகின்றேன் அதில் உம்மை கதாபாத்திரமாக தெரிவு செய் துள்ளேன் சம்மதமா பாவலா!*

*ஆ.ஆனந்தி,*
*புளியங்குளம்.*

உமது கதைக்காக என்னை கதாபாத்திரமாக்கப் போகிறீரா? அல்லது என்னை கதாபாத்திரமாக்க வேண்டும் என் பதற்காகவே கதை எழுதப் போகி றீரா? முதலில் அதை விளக்கும்!

*பாவலரே!*

*கனவுகள் எப்படி இருக்கவேண்டும்?*

*யாமினி,*
*யாழ்ப்பாணம்.*

பாரதி சொல்கிறார் கனவு மெய்ப்பட வேண்டும் என்று.

*பாவலா!*

*குடும்பத்தினருக்கு பயந்து சில ஆண்கள் தன் காதலியை ஏமாற்றுகின்றார் களே ஏன்?*

*S.ரூபி,*
*வரணி.*

காதலியோடு குடும்பம் நடத்துவதற்கு அச்சப்பட்டுத்தன் குடும்பத்தினருக்கு பயப்படுகின் றனர்.

*பாவலா!*

*சனாதிபதி மகிந்தவின் இந்திய உறவு பற்றி நீர் என்ன நினைக்கின்றீர்?*

*ப.மனோகரி,*
*கிளிநொச்சி.*

சமாதான முயற்சிகளை சீர்குலைப்பதற்கான உறவு என்றே நான் நினைக்கின்றேன்.

*பாவலா!*

*ஒரு மனிதனுக்கு கோபம் இருக்கவேண்டும் என்று நான் சொல்கின்றேன் நீர் என்ன சொல்கின்றீர்?*

*ஜெயா,*
*இரத்தினபுரம்.*

சிறுமைகண்டு பொங் யெழும் கோபம் ஒரு மனிதனுக்கு அவசியமானது தான்.

*பாவலா?*

*செவிடன் காதில் ஊதிய சங்குபோல் உள்ளவர்களுக்கு தங்கள் அறிவுரை என்ன?*

*பிரியா,*
*ஆனந்தநகர்.*

சங்கு ஊதியதையே கேட்காத காதுக்கு அறிவுரை கூறுவதால் என்ன பயன்.

*பாவலரே!*

*யார் வழிகாட்டலாம்?*

*சிவாஜினி,*
*வவுனியா.*

யாருக்கு வழிகாட்டுவது என்பதை விளக்கினால் தானே யாரை வழிகாட்டியாக்குவது என்று தீர் மானிக்கமுடியும்.

*பாவலா!*

*வாழ்க்கையில் சோகம் வந்துவிட்டால் என்ன செய்ய வேண்டும்?*

*S.சிவரூபி,*
*வரணி.*

துவண்டு விழுந்து விடக் கூடாது, துணிவுடன் நிமிர்ந்து எழ வேண்டும்.

*பாவலா!*

*தேடல் என்பது என்ன? பாவலா?*

*தர்சினி.*
*ஸ்கந்தபுரம்.*

ஞானத்திற்கான பாதை.

*பாவலா!*

*முன்னாள் சனாதிபதி சந்திரிகா அம்மையாரின் நாடாளு மன்ற ஆசனம் தொடர்பான திட்டம் பற்றி உமது கருத்து?*

*ப.மயூரா,*
*கிளிநொச்சி.*


இதைத்தான் சொல்வது பிச்சைக்கார புத்தி என்று. பதவிப்பித்து யாரைத்தான் விட்டது.

*பாவலா!*

*ஒரு தோளில் அம்பையும் மறு தோளில் வில்லையும் மகிந்த வைத்துக் கொண்டு கையில் புறாவை பறக்கவிடு கின்றார் அப்படியானால் புறா வின் கதி அதாவது சமாதானத் தின் கதி என்னாவது?*

*அனித்தா,*
*கிளிநொச்சி.*

சமாதானத்தின் கதி அதோ கதிதான்.



# பாவலர் பதில்கள்




கடுகு சிறுத்தாலும் காரம் போகாது. ஆள் சின்னன் வாயப்பார். கடைவாய் வரைக்கும் நீளுது.

ஏ என்ன நடந்தது.

சன்லைட் வேணுமெண்டு கேட்டுது காசுமில்லைக் கடன்.

ஏன் பிறகு தரமாட்டுதுகளே-

தேப்பன் சம்பளமெடுத்தபிறகு கொணந்து தருங்கள்.

அப்பிடியெண்டாப் பிறகென்ன. கணக்க போட்டிட்டு சாமானக் குடுங்கோவன்.

அது சரியப்பா ஆர் இல்லையெண்டது.சன்லைட்டுக் கேட்டாள் இருவத்து மூண்டு ரூபாயெண்டன். அதுக்கு... அது கேட்ட கேள்வி.

அது கேட்ட கேள்வி... இருக்கட்டும் உதென்ன சன்லைட் உந்தவிலை. விலை நேற்றிரவோட மூண்டு ரூபா அதிகரிச்சிருக்கு. நேற்று ராத்திரி? ம்...

அப்ப உங்கட கடைக்கு ராராவா வந்த சன்லைட்டே இப்ப விக்கிறியள்.

அப்பிடித்தான் வைச்சுக்கொள்ளன். அப்ப பால்மாவின்ர விலை 10 ரூபா குறைஞ்சிருக்கெண்டு ராத்திரி செய்தி வந்தா- விடியக் குறைப்பியளோ.

அதெப்படி குறைப்பம்.நாங்கள் முதலே வாங்கி வைச்ச பால்மா பைக்கற்தானே கிடக்கு.

அப்ப ஞாயத்த கேக்க சின்னப்பிள்ளையள் வரக்கூடாது. அந்தப் பிள்ளைக்கு வாய் நீளம்.

உங்களுக்கு கை நீளம். ம்.. எல்லாம் நேரந்தான். நடத்துங்கோ.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –151



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நிளைவும் பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்–151

.....

.....

.....

.....

பெயர் : .....

முகவரி : .....

.....

வாழ்நாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –150



த.தர்மினி,
இல:-189 கந்தபுரம்,
கிளிநொச்சி.

## பரிசுக்குரிய வரிகள்

*நீ தந்த சோகம் காலத்தால் ஓராண்டு*
*நெஞ்சுக்குள் ஒரே கடகடப்பு...*
*விடைபெற்ற அவஸ்தையின் ஓலங்கள்*
*உன் காதைக் கொடுத்துக்கேள் இரக்கம் வரும்.*

## பாராட்டுக்குரிய வரிகள்

*இழந்தவைகளை எண்ணி*
*ஏனிந்த ஏக்கம் அம்மா*
*வளரும் தமிழீழத்தில் துயர் மறந்து*
*வாழலாம் எழுந்து வா தாயே!*

க.இரத்தினசிங்கம்,
கிளிநொச்சி

*மீண்டும் நீ வருவாயா- எம்*
*பிஞ்சு மேனிகளை காவிக்கொண்டு*
*போவாயா-இப்போதுதான் இளைப்பாறுகிறோம்*
*இனியும் எம்மை தொடவேண்டாம்.*

அ.ரஜீஸ்கா,
கிளிநொச்சி.

*ஆழிப்பேரலையின் ஊழிக் சுத்தால்*
*வாடி உறையும் உறவே!*
*விடுதலை வரும், ஆடிப்பாடி வாழ்ந்த வாழ்வு,*
*மீளவும் வரும், எழு! உரிமையோடு நட!*


திருமதி ரா.சுஜந்தன்,
கிளிநொச்சி.

*கரும்புலிகளின் பாதம்*
*கரையில் தெரியுது!*
*எதிரிக்கு இது நெருப்பு*
*எமக்கு காப்பு.*

எஸ்.சிவா,
பருத்தித்துறை.


இப்போட்டிக்கான பரிசினை வழங்குவோர்
அருச்சுனா புகைப்படக்கலையகம்
கிளிநொச்சி புதுக்குடியிருப்பு

எமது வாடிக்கையாளர்கள் விநியோகஸ்தர்கள் அனைவருக்கும் இனிய நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள்!



- அரிசி, மிளகாய், உழுந்து, கோப்பி என்பனவற்றை தேவைக்கேற்ப மிருதுவாக அரைப்பதற்கு ஏற்ற உலக பிரசித்தி பெற்ற இயந்திரங்களான கென்டி, நவீன், அமுதா பிறாண்டுகள்.
- நெல்குற்றுவதற்கான இயந்திரங்கள் ஒருநாளுக்கு 3 தொன் வரை குற்றக்கூடியது. இயந்திரங்களை தரம்மிக்க தொழிநுட்ப வல்லுனர்களை கொண்டு பொருத்தி தரம் மிக்க அரிசியை உற்பத்தி செய்து தருவோம்.
- ஈர அரிசி அரைக்கும் இயந்திரங்கள், பட்டி வகைகள், கிறைண்டர் பீளேட் வகைகள், மற்றும் உதிரிப்பாகங்கள் அனைத்தையும் சகாயவிலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்..

குறிப்பு: நவின், கெனடி, அமுதா றெக்ஸ் பிறாண்ட் இயந்திரங்களின் இலங்கைக்கான இறக்குமதியாளர்களும் விநியோகஸ்தரும் நாங்களே!



## சமுத்திரா றேடீஸ் லிமிட்டட

இல:117, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே:021-222 2938

(சி-13519)





வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்!

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட காஞ்சிபுரசாறிகள், பட்டுவேட்டிகள், சல்வார், சோலிகிட் மற்றும் சிறுவர்கள், பெரியோர்களுக்கான ஆடைகளை உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்து பெற்றுக்கொள்ள விரையுங்கள்... குமரகுருவிற்கு....

## குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ்சாலை, கிளிநொச்சி. தொ.பே:021-228 5971



SM Graphics

(சி-13520)





எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள்!

சிவகுரு கட்டடப்பொருள் உந்துருளி வாணிபத்தில் புதிய அறிமுகம்

யப்பான் உற்பத்திகளான சுப்பகப், யமகா உந்துருளிகள் இப்பொழுது உங்கள் ஊரிலும்

உங்கள் தெரிவுகளுக்கு முந்துங்கள்



## சிவகுரு கட்டடப்பொருள் உந்துருளி வாணிபம்

நாயகி கட்டடம், பரந்தன், கிளிநொச்சி. தொ.பே:021-228 5072

(சி-13521)



## ஓயாத நினைவின் ஓராண்டு அலைகள்



பிறப்பு
பேரின்பம்
03
-
12
-
1961

பிரிவுப்
பேரலை
26
-
12
-
2004

திருமதி இலங்கேஸ்வரன் பிறேமலதா

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்
முல்லைத்தீவு

திதி:13-01-2006

தேன்சுரந்து வாழ்ந்த -உன்
நினைவழியாக்காலம்
தேம்புகின்ற கண்ணீரின்
நிலைகுலையாக்கோலம்
நாள் கடந்து ஆண்டாகிப்
போனாலும் சோகம்
நாம் கடந்து போகவில்லை
தனியாதுன் தாகம்

இல.02 சமாதி ஒழுங்கை
திருகோணமலை.

என்றும் உங்கள் நினைவழியா உள்ளங்கள்
அன்புக்கணவன், பிள்ளைகள்,
ரிஷிக்காந்த், சுக்ஷிக்காந்த், அகல்யாணி.

(சி-13522)



EXPOAIR
your friend in the skies...

எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...



தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை

ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com



(C-11725)


இப்பத்திரிகை கிளிநொச்சி சமுநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.